சுவடி : 43

ஏடு : 3

செப்டம்பர் 2018

*

ஆசிரியர்

**வே.ஆனைமுத்து**

*

ஆசிரியர் குழு

**க. முகிலன்**

**தமிழேந்தி**

**வாலாசா வல்லவன்**

**வையவன்**

**சி. பெரியசாமி**

**கோவிராமலிங்கம்**

**சி. நடராசன்**

**மங்கலம் அரசன்**

**தி.துரைசித்தார்த்தன்**

**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**

*

அனைத்துத் தொடர்புகளுக்கும்

**‘சிந்தனையாளன்’**

மனை எண்.277/2

சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,

அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :

**72992 14554**

**95975 26990**

மின்னஞ்சல் :

sinthanaiyalantamilmonthly
@gmail.com

*

இதழ் வடிவமைப்பு :

**சன் நகலகம்,** சென்னை-5.

9840015179

*


இணையத்தில் படிக்க

**www.keetru.com**

*



# தந்தை பெரியார் கண்ட போராட்டங்களும் போராட்ட உத்திகளும்



தந்தை பெரியார் 17.09.1879இல் பிறந்தார். அவர் 140ஆம் பிறந்த நாள் 17.9.2018 திங்கள் அன்று வருகிறது.

அவரைப் பின்பற்றும் தொண்டர்களும் எல்லாத் தமிழர்களும் இந்தியாவிலுள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் அனைவரும் ஏதேனும் ஒரு வகையில் அவருடைய கொள்கைகளால்-உழைப்பால் -தொடர்ந்து அவர் நடத்திய போராட்டங்களால் பயன் பெற்றுள்ளனர்.

1919 ஆகத்துக்குப் பிறகு இந்திய தேசிய காங்கிரசில் உறுப்பினரானார். “காங்கிரசு பதவி ஏற்கும் காலத்தில், 100 அரசு வேலைகளில் 50 வேலைகளைப் பார்ப்பனரல்லாதாருக்கு ஒதுக்கித் தரும் என்கிற உறுதிமொழியைக் காங்கிரசு ஏற்கவேண்டும்” என 1919 முதல் 1925 வரை போராடினார்.

அவர் இயல்பிலேயே எந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டாலும், அக்கொள்கையில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்வார். தம் துணைவியார் நாகம்மையாரையும் ஈடுபடுத்திக் கொண்டார். காட்டாக, 1921 செப்டம்பர் 25 காலை 6 மணிக்கு, காந்தியார் ஈரோட்டுக்கு வந்து அவர்தம் இல்லத்தில் மாடியில் தங்கினார். அங்கு ஈ.வெ.ரா. மற்றும் முதன்மையானவர்களுடன் கள் ஒழிப்பு, கதர் பரப்புப் பற்றிக் கலந்துரையாடினார். இந்த இரண்டு கொள்கைகளிலும் தம்மை 1921 நவம்பர் முதல் ஈடுபடுத்திக் கொண்டார், ஈ.வெ.ரா.

தாம் பட்டு வேட்டி உடுத்துவதைக் கைவிட்டுக் கதரை அணிந்தார். நம் தாயார், தங்கைகள், துணைவியார் ஆகியோரைக் கதர் சேலை உடுத்தச் செய்தார்.

15.11.1921இல் ஈ.வெ.ரா., நாகம்மையார், ஈ.வெ.ரா.வின் தங்கை கண்ணம்மாள் மற்றும் 100 பெண்களை அழைத்துக் கொண்டு, ஈரோட்டில் கள்ளுக்கடையில் மறியல் செய்தார். எல்லோரும் ஒரு மாதம் வெறுங்காவல் தண்டனை அடைந்தனர். **இது இந்தியாவில் முதன்முதலாக நடந்த போராட்டம்.**

அடுத்து, காந்தியாரின் நிர்மாணத் திட்டங்களுள் தீண்டாமை ஒழிப்பு முதன்மையானது.

தீண்டாமை என்பது தென்னகத்திலும் மற்ற மாகாணங்களிலும் “தொட்டால் தீட்டு” என்கிற வடிவில் மட்டும் இருந்தது.

ஆனால் திருவிதாங்கூர் அரசில் வாழ்ந்த தீண்டப்படாதார் காணாமை, அண்டாமை, தீண்டாமை என்கிற பேரால் இழிவுபடுத்தப்பட்டனர்.

அதேபோல் தமிழகத்திலும் தென்பகுதியில் நாடார், சாணார், தீண்டப்படாதவராக நடத்தப்பட்டனர். தமிழகத்தில் காங்கிரசுக் கட்சி அத்தகைய தீண்டாமையை ஒழிக்கப் போராட வேண்டுமென, 1922இல் திருப்பூர் தமிழ்மாகாண காங்கிரசு மாநாட்டில் ஈ.வெ.ரா.வும், பி. வரதராசலு நாயுடுவும் இணைந்து தீர்மானம் முன்மொழிந்தனர். அதை காங்கிரசு ஏற்கவில்லை. தீண்டாமை ஒழிப்புக் கொள்கைக்கு இடைவிடாது பரப்புரை செய்து, மக்கள் ஆதரவைத் திரட்டினார்.

அந்த நேரம் கேரளாவில், வழக்கறிஞர் மாதவன், பி.ஏ., பி.எல்., என்கிற ஈழவர், திருவாங்கூர் அரண்மனையில் விழாப் பந்தலுக்குள் அடங்கிய நீதிமன்றத்துக்கு வழக்காடப் போகக்கூடாது எனத் தடுக்கப்பட்டார். இதை

எதிர்த்துப் போராட கேரள மாநில காங்கிரசு 1922இல் முடிவெடுத்தது.

போராட்டக் களமாக வைக்கம் என்ற ஊர் தேர்வு செய்யப்பட்டது. வைக்கத்தப்பன் கோவிலைச் சுற்றிலும் உள்ள நான்குபுறச் சாலைகளிலும் தீண்டப்படாதார் யாரும் நடக்கக் கூடாது என அரசு ஆணை இருந்தது.

அதை எதிர்த்து 30.3.1924இல் கேரள மாகாண காங்கிரசு சார்பில், காங்கிரசுத் தலைவர்கள் பாரிஸ்டர் மேனன், கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப் முதலானோர் முதல் நாள் கைதாயினர். அடுத்து வந்த 19 பேரும் ஒரு நாளைக்கு ஒருவர் வீதம் கைது செய்யப்பட்டனர்.

4.4.1924 வரை போராட்டத்துக்கு அதிகம்ஆள் அங்கு வரவில்லை.

குரூர் கே. நீலகண்டன் நம்பூத்ரி பாத், 4.4.1924இல் ஈரோட்டுக்கு ஈ.வெ.ராவுக்கு, அனுப்பிய தந்தியில், ‘‘14.4.1924இல் ஆசிரமத்தில் நடைபெற உள்ள ஆலோ சனைக் கூட்டத்தில் தாங்கள் கட்டாயம் பங்கு பெற வேண்டும்’’ எனக் கண்டிருந்தது.

13.4.1924இல், ‘‘நான் இன்று மெயிலில் வருவ தாகவும், திருச்சூரில் என்னை நம்பூத்ரிபாத் சந்திக் கும்படியும்’’ தந்தி கொடுத்தேன் என ஈ.வெ.ரா. நம்பூத்ரி பாத்துக்குச் செய்தி அனுப்பினார்.

‘‘13.4.1924 பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத் தேன்; சி. இராசகோபாலாச்சாரியாருக்கும் எழுதினேன். உடனே கேரளாவுக்குப் புறப்பட்டேன்’’ என ஈ.வெ.ரா. மேலும் குறிப்பிட்டுள்ளார். ஏன்?

14.4.1924 காலை வைக்கம் படகுத் துறையை அடைந்த ஈ.வெ.ரா. திருவிதாங்கூர் அரசு சார்பில் மேள தாளத்துடன் வரவேற்கப்பட்டார்.


திருவிதாங்கூர் அரசரும், அவருடைய பரிவாரங்களும் ஈரோட்டில், ஈ.வெ.ரா.வின் சிங்க மெத்தை வீட்டிலும் அரசரின் பரிவாரங்கள் வெங்கட்ட நாயக்கர் சத்தி ரத்திலும் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் தங்கி யிருந்தனர். புதுதில்லிக்குப் போகும் போதெல்லாம் அரசர் அப்படித் தங்குவார். அதனால், அரசரை ஈ.வெ.ரா. நன்கு அறிவார்.

‘‘நான் திருவிதாங்கூர் அரசை எதிர்த்துப் போராட வந்திருக்கிறேன். அரசருக்கு நன்றி கூறுங்கள்’’ என்று கூறி விட்டு, நேரே சத்தியாகிரக ஆசிரமத்துக்குப் புறப்பட்டார்.

சத்தியாகிரக ஆசிரமம் படகுத்துறையிலிருந்து 4 பர்லாங்கு தொலைவிலுள்ளது.

15.4.1924 முதல் அன்றாடம் மாலையில் ஈ.வெ.ரா. படகுத் துறையில் விரிவாகப் பேசினார். சுற்றுப்புற ஊர்களிலும் ஈ.வெ.ரா. தீண்டாமை பற்றி காரசாரமாகப் பேசினார்.

‘‘தீண்டப்படாத வகுப்பு மக்கள் பொதுச் சாலைகளில் நடக்கக் கூடாது. மீறி அந்தச் சாலைகளில் அவர்களை



நடந்து போகத் தூண்டினார்’’ என்று ஈ.வெ.ரா. பேரில் குற்றஞ்சாட்டினர்; வழக்குப் போட்டனர்.

நீதிமன்றத்தில் ஈ.வெ.ரா. ஒரு வாக்கு மூலம் மட்டும் அளித்தார்.

28.4.1924 அவர் பேசிய பேச்சு சட்டத்துக்கு விரோதமானது என்ற காரணத்தால், 22.5.1924இல் ஈ.வெ.ரா.வுக்கு ஒரு மாதம் வெறுங்காவல் தண்டனை விதித்து, அருவிக்குத்தி சிறையில் அடைக்கப்பட்டார்.

இத்தண்டனை முடிந்து 21.6.1925இல் விடுதலை யான ஈ.வெ.ரா. ஊர்வலமாக ஆசிரமத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சிறையிலிருந்து விடுதலையான ஈ.வெ.ரா., கோவை அய்யாமுத்து ஆகியோர் கோட்டையம் மாவட்டத்தில் பேசக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டது.

சிறையிலிருந்து விடுதலையான ஈ.வெ.ரா. 6.7.1924 இல் ‘‘தி இந்து’’ (The Hindu) ஆங்கில நாளேட்டுக்கு ஓர் அறிக்கை எழுதினார். அது 7.7.1924இல் வெளி யிடப்பட்டது.

**அந்த அறிக்கை தான் வைக்கம் போராட்டத்தை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றது.**

சிறந்த தூண்டுதல்களாக, 6.7.1924 அன்று “The Hindu” ‘‘சுதேசமித்திரன்’’ நாளேடுகளில் ஈழவ மக்களுக்கு ஈ.வெ.ரா. விடுத்த வேண்டுகோளும், 1.10.1924 கூட் டத்தில் ஸ்ரீநாராயண குரு ஓராயிரம் நன்கொடை

வழங்கியதுடன், தேவை ஏற்பட்டால் தானே கிளர்ச்சியில் பங்கேற்றிடவும் உறுதி கூறியதும், திருவாங்கூர் பகுதியில் பெண்களிடையே கிளர்ச்சி பற்றிப் பேசி அநேகரைப் பங்கேற்க வைத்த ஈ.வெ.ரா. நாகம்மை யாரின் பங்களிப்பும் வைக்கம் கிளர்ச்சி வரலாற்றில் முதன்மை இடம் பெற்றவையாகும்!

"கேரளாவில் ஏழு இலட்சம் ஈழவர்கள் இருக்கிறீர்கள், உடனே நீங்கள் முன்வந்து இந்தப் போராட்டத்தைக் கையில் எடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு நூறு தொண்டர்கள் வேண்டும்; எல்லாச் செலவுகளுக்கும் ஒரு நாளைக்கு ரூ.100 வேண்டும். அரசரின் பரிவாரங்கள் எல்லோரையும் கைது செய்யத் தொடங்கினால் அதிக எண்ணிக்கையில், தொண்டர்கள் வரவேண்டும்" என, ஈழவர்களுக்கு உணர்ச்சி வரும்படி அந்த அறிக்கை அமைந்தது.

இதன் பயன் என்ன?

அன்றாடம் இருமுடி, மும்முடி எனத் தேங்காய்களும், வீடுதோறும் பெற்ற பிடி அரிசியும், காய்கறிகளும் மலைபோல் சத்தியாகிரக ஆசிரமத்தில் குவிந்தன.

ஈழவ வகுப்பு ஆண்களும் பெண்களும் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் குதித்தனர்.

கோவிந்தன் சாணார் மனைவி மற்றும் ஈ.வெ.ரா. நாகம்மாள், எம். எம்பெருமாள் நாயுடு மனைவி கோவில் மேலண்டை வாயிலில் போராடினார்.

1924 மே, சூன், சூலை, ஆகஸ்டு, நவம்பர் மாதங்களில் நல்ல மழை பெய்தது. கழுத்தளவு வெள்ளத்தில், 3 மணி நேரத்துக்கு ஒருவர் வீதம், மறியல் போராட்டத்தில் பங்கேற்றனர்.

சூலை, ஆகஸ்டில் பெருமழை பெய்தது. ஆண், பெண் சத்தியாகிரகிகள் கழுத்தளவு தண்ணீரிலும் சத்தியாகிரகம் செய்தனர்.

கோவிந்தன் சாணாரின் மகனான இராகவன் - அநேகம் பேரின் உயிரைக் காப்பாற்றினவர் - ஒருவரை மீட்கப் போய் அவரால் மாண்டார். அவர் மெட்ரிகுலேஷன் படித்தவர். நிற்க.

நானும், அப்போது (1978இல்) அங்கே இரயில்வேயில் பணியாற்றிய திருச்சி உறையூர் மு. நரசிம்மனும், கோட்டையத்தில் 21.12.1978இல், கேரள முன்னாள் அமைச்சர் வி.மாதவன் (82) அவர்களைச் சந்தித்தோம். 1924இல் அவர் சட்டக் கல்லூரி மாணவர். அவர் நாள்தோறும் வைக்கம் படகுத் துறையில், ஈ.வெ.ரா. பேச்சைக் கேட்டவர். முதுமையிலும் எழுந்து நின்று அப்படியே பேசிக்காட்டினார்.

அடுத்து கோட்டையத்தில், கோபாலன் தந்திரி என்பவரை (82) 22.12.1978 காலை 11 மணிக்குப் பார்த்தோம். அவர் 1924இல் சத்தியாகிரகத் தொண்டர். அவரும் ஈ.வெ.ரா.வின் பேச்சை அப்படியே நடித்துக் காண்பித்தார்.

**தீண்டப்படாத கீழ்ச்சாதி மக்களைப் பார்த்து, "உங்களுக்கு மானம், ரோசம் இல்லையா? என்றும்; வைக்கத்தப்பன் வெறுங்கல் என்றும், நீங்கள் அதைக் குப்புறப் போட்டுத் துணி துவைக்க வேண்டாமா?" என்றும் பேசி, மக்களுக்கு அறிவு கொளுத்தினார்.**

ஈ.வெ.ரா. நாகம்மையாரையும் கண்ணம்மாளையும் உடனழைத்துக் கொண்டு தனியே பெண்கள் கூட்டத்தில் பேசி அவர்களிடம் விழிப்பை உண்டாக்கினார்.

ஈ.வெ.ரா. பேரிலான இரண்டாவது, வழக்கு 27.7.1924இல் உசாவப்பட்டு, 4 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

கோட்டையத்திலிருந்து திருவனந்தபுரத்துக்குக் கால் நடையாகவே அழைத்துச் செல்லப்பட்டார் ("சுதேசமித்திரன்", 28.8.1924).

ஸ்ரீமான் சி. இராசகோபாலாச்சாரியார் பின்வருமாறு எழுதுகிறார்.

"இப்பொழுது திருவனந்தபுரம் சிறையிலிருக்கும் சத்தியாகிரகக் கைதியான ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரை உணவு, இடவசதி முதலிய விஷயங்களில் சாமானியக் கைதிகளைப் போல் நடத்துவதாக நம்பத் தகுந்த இடத்திலிருந்து எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. அவர் சிறை உடைகளை அணிகிறார். காலில் இரும்பு வளையம் போட்டிருக்கிறது. மற்ற சத்தியாகிரகிகளிடமிருந்து பிரித்துத் தொலைவில் ஒரு தனி அறையில் அடைத்திருக்கிறார்கள். ஆயினும் ஸ்ரீமான் நாயக்கர் உற்சாகத்துடன் இருந்து வருகிறார் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அவருடன் நான் நெருங்கிப் பழகியிருப்பதால் அவரை நன்கு அறிவேன். அவர் செல்வத்தையும், அந்தஸ்த்தையும் துறந்து சங்கடங்களை ஏற்றுக்கொண்ட தீரபுருஷர்..." ("சுதேசமித்திரன்", 28.8.1924).

இந்நிலையில், அரசுக்கெதிராகப் போராடுபவர்கள் சாகவேண்டும் என்று கருதி, 1924 சூலையில் அரசர் சத்துரு சம்ஹார யாகம் நடத்தினார். ஆனால் நோய் வாய்ப்பட்டிருந்த அரசர் 7.8.1924 இரவு இறந்துவிட்டார்.

உடனே சேது லட்சுமிபாய் மகாராணி பட்டத்திற்கு வந்தார். இராணி பட்டத்திற்கு வந்ததை ஒட்டி, ஈ.வெ.ரா., ஜார்ஜ் ஜோசப் மற்றும் பலர் விடுதலை செய்யப்பட்டனர். இதனை முன்வைத்தே வைக்கம் கிளர்ச்சியில் சிறை வைக்கப்பட்ட தலைவர்கள், தொண்டர்கள் எல்லோரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இனி, வைக்கம் சத்தியாகிரகம் முடிவுக்கு வந்தது.

இராணி அரசில் இருந்த ஒரு முக்கியமான பார்ப்பனர் சத்தியாகிரக வெற்றியின் பெருமை ஈ.வெ.ரா.வுக்குக் கிடைக்கக் கூடாது எனத் திட்டமிட்டு, உடனே இராஜாஜிக்கு எழுதி, காந்தியார் வந்து இராணியுடன் பேச வேண்டும் என்று கோரி எழுதினார். அதன்படி,

இராஜாஜி காந்தியாருக்கு எழுதியபடி, 9.3.1925 மாலை வைக்கத்துக்கு வந்தார், காந்தி.

காந்தி, 12.3.1925 முற்பகல் இராணியைச் சந்தித்து விட்டு, மாலை 4 மணிக்கு சிவகிரிக்கு அருகிலுள்ள கோவிந்தன் சாணார் இல்லமான காந்தி ஆசிரமத்தில் தங்கியிருந்த ஸ்ரீநாராயண குரு, சி. இராஜகோபாலாச் சாரி, வ.வே.சு. அய்யர், ஈ.வெ.ரா. ஆகியோரைச் சந்தித்தார்.

அங்கு, ஈ.வெ.ரா.விடம், தனியே, ‘‘இராணி பொதுச் சாலைகளைத் திறந்து விடுவதாகச் சொல்கிறார். நீர் என்ன சொல்கிறீர்’’ என, காந்தி கேட்டார்.

‘‘கோவில் நுழைவுதான் தங்களுடைய அடுத்த வேலைத் திட்டம் என்றும், இப்போது அவ்வேலைத் திட்டம் இல்லையென்றும் இராணியிடம் கூறிவிடும் படி’’ ஈ.வெ.ரா., காந்தியாரிடம் கூறினார்.

பொதுச்சாலைகளில் அமைக்கப்பட்டிருந்த தீண்டாமை அறிவிப்புப் பலகைகளும் தடுப்புக் கட்டுமானங்களும் காவல் துறையினரால் உடனே நீக்கப்பட்டதாகக் காவல் துறை ஆணையர் பிட் (Pitt) அறிவித்தார்.

வைக்கம் கிளர்ச்சியின் முடிவு என்ன?

**கிழக்குச் சாலையுடன் இணைப்பதற்குத் தெற்கிலிருந்தும், வடக்கிலிருந்தும் வரும் கொஞ்ச நீளமுள்ள இரண்டு சந்துகள் தவிர்த்து, வைக்கம் கோவிலைச் சுற்றிலும் உள்ள எல்லாச் சாலைகளும் எந்த வேறுபாடும் இன்றி எல்லாச் சாதிகளைச் சார்ந்த மக்களுக்கும் திறந்துவிடப் பட்டுள்ளன.**

இதுவே வைக்கம் போராட்டத்தின் மூலம் காணப்பட்ட வெற்றியின் உண்மையான தன்மையாகும்.

இந்த இடங்களை நான் 1978 திசம்பரிலும், அதன் பின்னரும் நேரில் பார்த்தேன்.

அதாவது வைக்கம் கோவிலைச் சுற்றிலும் நான்கு பொது வீதிகளிலும் எல்லா வகுப்பினரும் நடக்க உரிமை அளிக்கப்பட்டது. அதே நேரத்தில் கீழண்டை வாசலில் மட்டும், அவர்ணர்கள் (கீழ்ச்சாதியார்) நடப்பதற்கென்று தனியாக ஒரு சாலை அமைக்கப்பட்டு, 23.11.1925 முதல் அந்தத் தனி வழியே அவர்கள் செல்லத் தொடங்கினர்.

29.11.1925இல் வைக்கம் சத்தியாகிரக ஆசிரமத்தில் வெற்றி விழாக் கூட்டம் ஈ.வெ. இராமசாமி தலைமையில் நடைபெற்றது.

**சிறந்த உத்தி என்பது, வைக்கம் தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் 30.3.1924 முதல் 23.11.1925 முடிய 20 மாதங்கள் இடையீடு இன்றி நடத்தப் பட்டது என்பதே ஆகும்.**

டாக்டர் அம்பேத்கர் வைக்கம் நிகழ்ச்சிகளை அப்போதே கூர்ந்து கவனித்தார். அவர் மகத் சத்தியாகிரகம் தொடங்கவிருந்த போது, எழுதிய ஆசிரிய உரை ஒன்றில், வைக்கம் சத்தியாகிரகம் பற்றி நெஞ்சம் நெகிழ்ந்து அவர் எழுதினார்.

**வைக்கம் சத்தியாகிரகம் இந்தியாவில் நடைபெற்ற முதலாவது தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் ஆகும்.**

**இதற்காகப் பெரும்பங்கு ஆற்றியோர் ஈ.வெ. இராமசாமி, ஈ.வெ.ரா. நாகம்மாள், கண்ணம்மாள், எஸ். இராமநாதன், கோவை அ. அய்யாமுத்து, எம். எம்பெருமாள் நாயுடு, அவர்தம் துணைவியார் மற்றும் பலர் ஆவர்.**

**வெல்க பெரியாரியம்!**

**1.9.2018** **- வே. ஆனைமுத்து**

## மடல் பகுதி

அன்பின் அய்யா அவர்களுக்கு, வணக்கம்.

தங்களை ஆசிரியராகக் கொண்டு நடைபெறும் பகுத்தறிவு மாத இதழ் ‘சிந்தனையாளன்’ மாதந்தோறும் எனக்கு வந்து சேருகிறது. அதில் வரும் சமூக, அரசியல், பொருளாதாரக் கட்டுரைகள் எனக்குப் பல்துறை அறிவாற்றலையும், தொடர்ந்து தொய்வின்றி உழைக்க வேண்டுமென்ற உணர்வையும் வளர்த்திடும் மாமருந்தாக அமைகிறது. அதிலும் குறிப்பாகத் தாங்கள் எழுதிய ‘‘அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டுமா? அடியோடு மாற்றப்பட வேண்டுமா?’’ என்கிற அந்தச் சிறு நூல் என்னை மிகவும் கவர்ந்த ஒன்றாகும். தாங்கள் இந்த வயதிலும் எவ்விதத் தளர்ச்சியுமின்றி, அய்யாவின் கருத்துகளை மட்டுமல்லாமல் அனைத்து சமதர்மக் காவலர்களின் கருத்துகளையும், சமூக நீதிக்காவலர்களின் கருத்துகளையும் ‘‘சிந்தனையாளன்’’ மாத இதழ் வாயிலாகப் பரப்பிவரும் என் இதயம் கவர்ந்த அய்யா வே.ஆனைமுத்து அவர்களை ஆசிரியராகக் கொண்ட ‘சிந்தனையாளன்’ இதழுக்காக ரூ.5,000 என்னுடைய வாழ்நாள் புரவலர் நன்கொடையாக இத்துடன் தங்களுக்கு அனுப்புகிறேன்.

தங்களின் ஓய்வறியா உழைப்பையும் மனிதகுலம் பின்பற்றப்பட வேண்டிய சமதர்ம, சமூக நீதிக்கொள்கைகளை ஓயாத கடலலைபோல் ஒலித்துக் கொண்டிருக்கும் ‘‘சிந்தனையாளன்’’ இதழ் ஒவ்வொரு இளைஞன் கையிலும் தவழ்ந்திட வேண்டுமென்கின்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவிப்பதோடு, தங்களுடைய மேலான பணி சிறக்க என் இதயம் நெகிழ்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை வரும்பொழுது தங்களை இல்லத்தில் அல்லது அலுவலகத்தில் சந்திக்க விரும்புகிறேன்.

**பொன். முத்துராமலிங்கம்,** நரிமேடு, மதுரை
முன்னாள் அமைச்சர் தி.மு.க.

# அரசியல், சமுதாயம், இலக்கியம், ஊடகம் எனப்பல துறைகளில் தனிமுத்திரை பதித்த கலைஞர் **மு. கருணாநிதி மறைந்தார்!**

# தமிழர்கள் தலைமைப் போராளியை இழந்தனர்!

03.06.1924-இல் திருவாரூரை அடுத்த திருக்குவளை என்னும் சிற்றூரில் பிறந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 94 ஆண்டுகள் 65 நாள்கள் சிறந்த போராளியாக வாழ்ந்து, 7.8.2018 செவ்வாய் மாலை 6.10 மணிக்கு மறைவுற்றார்.

2018 சூலை 27 இரவு ஆழ்வார்ப்பேட்டை காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தியக் குடி அரசுத் தலைவர், ராகுல் காந்தி முதலானோர் கலைஞர் உயிரோடு இருக்கும் போதே நேரில் வந்து அவரைப் பார்த்தனர். காவேரி மருத்துவக் குழுவினர் எவ்வள வோ போராடியும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 27.7.1969 இல் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 7.8.2018 முடிய 49 ஆண்டுகள் 10 நாள்கள் தி.மு.க.வின் தலைவராக மிக வெற்றி கரமாகச் செயல்பட்டார்; அக்கட்சியை மக்கள் நாயக நெறியில் கட்டிக்காத்தார்.

தாம் 1969ஆம் ஆண்டு பிப்ரவரியில் தமிழக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார். அவர் பதவி வகித்த காலத்தில் தந்தை பெரியார் 1973 திசம்பர் வரை என்னென்ன கோரிக்கைகளை முன்வைத்தாரோ, அவற்றை முழு மனதோடு ஏற்று நிறைவேற்றினார்.

காட்டாக, இடஒதுக்கீடு கொள்கை.

தமிழக முதலமைச்சராகத் திகழ்ந்த கு. காமராசர் எல்லா மதங்களையும் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோ ருக்கு 25 விழுக்காடும், பட்டியல் வகுப்பினருக்கு 16 விழுக்காடும் ஆக 41 விழுக்காடு மட்டுமே வழங்கி னார்; மு. பக்தவச்சலம் காலத்திலும் 41 விழுக்காடு இடஒதுக்கீடே தொடர்ந்தது.

இடையில், உச்சநீதிமன்றம் கர்நாடக அரசு 50 விழுக்காட்டுக்குமேல் தந்த இடஒதுக்கீடு செல்லாது என்றும், இடஒதுக்கீடு பெறும் மூன்று வகுப்பாருக்கும் சேர்த்து, 50 விழுக்காட்டுக்குக் குறைவாகவே தரப்பட வேண்டும் என்றும் 1962இல் தீர்ப்பு அளித்தது.

தந்தை பெரியார் அதைச் சுட்டிக்காட்டி, தமிழகத் தில் பிற்படுத்தப்பட்டோருக்குத் தரப்படும் இடஒதுக்கீட்டில் 8 விழுக்காடு மேலும் கூட்டி, அதைப் பிற்பட்டோருக்கு வழங்கலாமே எனக் கோரினார்.



*1970 சூன் 29 - அயல்நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளவிருந்த முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியை பெரியார் ஈ.வெ.ரா. வாழ்த்துதல்.*

அதை அப்படியே ஏற்றுக்கொண்ட கலைஞர், 1969 நவம்பரிலேயே, ஏ.என். சட்டநாதன் தலைமையில் மூவர் கொண்ட குழுவை அமைத்தார். அக்குழுவும் 8 விழுக்காடு சேர்த்திடப் பரிந்துரைத்தது.

இடையில் தமிழகப் பட்டியல் வகுப்பினர் மக்கள் தொகையில் 16 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடாக உயர்ந்துவிட்டது. எனவே, தமிழகப் பிற்படுத்தப்பட் டோருக்கு 25% + 6% = 31% ம்; பட்டியல் வகுப்பி னருக்கு 16% + 2% = 18% வழங்கி கலைஞர் ஆணை பிறப்பித்தார்.

அதேபோல், ''அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவதற்குச் சட்டம் இயற்ற வேண்டும் - இல்லாவிட்டால் போராட்டம் நடத்திச் சிறைக்குப் போவேன்'' எனத்




*கலைஞரால் உருவாக்கப்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் கலைஞர் மறைவையொட்டி அவருக்கு இரங்கல் தெரிவித்தல்.*

தந்தை பெரியார் 1969 அக்டோபரில் கோரிக்கை வைத்தார். அதை முன்வைத்து 1973 திசம்பர் 8, 9இல் சென்னையில் சமூக இழிவு ஒழிப்பு மாநாடு நடத்தினார். ஆயினும் 1971-லேயே அதற்கான சட்டத்தைக் கலைஞர் நிறைவேற்றினார். 1972இல் அச்சட்டம் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

தமிழ்நாட்டில் தனியாரிடம் இருந்த பேருந்துகளை நாட்டுடைமையாக்கினார்.

தந்தை பெரியார் 24.12.1973இல் மறைவுற்றார். தந்தை பெரியாரின் உடலைத் தமிழக அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யவேண்டும் என்று கலைஞர் முடிவெடுத்தார்.

தலைமைச் செயலாளரும் மற்ற உயர் அதிகாரிகளும் ''பெரியார் எந்த அரசுப்பதவியிலும் இருக்கவில்லையே'' என்றனர். ''காந்தியார் எந்தத் பதவியிருந்தார்? அவர் உடலை அரசு மரியாதையுடன் இந்திய அரசு அடக்கம் செய்ததே'' என்று திருப்பிக் கேட்டார், கலைஞர். ''மேலும் என் பதவி போனாலும் போகட்டும்; கவலை இல்லை; ஏற்பாடு செய்யுங்கள்'' என ஆணையிட்டு துணிவாளர் அவர்.

பெரியாரின் எழுத்து, பேச்சு எல்லாவற்றையும் 1971-1973இல் நான் தொகுத்தேன். திருச்சி சிந்தனையாளர் கழகத்தார் 1.7.1974-இல் வெளியிட்டனர். முதல் தொகுதியை முதலமைச்சர் கலைஞர் வெளியிட்டார். நிற்க.

1975, 1976-இல் பிரதமர் இந்திராகாந்தி அவசர கால ஆட்சியை அமுல்படுத்தினார். அதைக் கடுமையாக எதிர்த்து, ''முரசொலி''யில் நாள்தோறும், படிப்போரின் நாடி நரம்புகளைத் தூண்டிவிடும் தன்மையில் கட்டுரைகளை எழுதினார்.

31.1.1976இல் தி.மு.க. ஆட்சியைக் கலைத்தார், இந்திராகாந்தி.

1977இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், தி.மு.க. தோல்வி அடைந்தது. எம்.ஜி.ஆர். தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது.

இந்திய அளவில் இந்திராகாந்தி தலைமையிலான காங்கிரசு தோற்றது; மொரார்ஜி தேசாய் தலைமையிலான சனதா கூட்டணி வெற்றி பெற்றது.

நானும் என்னை ஒத்தவர்களும் 1975 நவம்பரில் திராவிடர் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டோம். 8.8.1976இல் தனி அமைப்பைத் தோற்றுவித்தோம்.

1977இல் பதவிக்கு வந்த அ.தி.மு.க. அரசு, 1979இல் இந்திய அரசால் கலைக்கப்பட்டது. 1979இல் மீண்டும் நடைபெற்ற பொது தேர்தலிலும், அ.தி.மு.க. வெற்றி பெற்றது. அப்படிப் பொறுப்பேற்ற எம்.ஜி.ஆர். 24.12.1987 வரை முதலமைச்சராக இருந்தார்.

எம்.ஜி.ஆர். 1979 சூனில், ''பிற்படுத்தப்பட்டோரில் பொருளாதாரத்தில் வளர்ந்த பிரிவினர் இடஒதுக்கீடு பெற உரிமை அற்றவர்கள்'' என ஆணையிட்டார். அதை எல்லாக் கட்சியினரும் எதிர்த்தனர்.

ஆனால் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியினரும் சில தோழமை அமைப்பினரும் ''தமிழ் நாட்டு மக்கள் தொகையில் 67.5 விழுக்காடு

பிற்படுத்தப்பட்டவர்கள். அவர்களுக்கு 60 விழுக்காடு இடஒதுக்கீடு வேண்டும்'' எனக் கோரினோம். பண்ருட்டி ச.இராமச்சந்திரன் ஆலோசனைப்படி, 1.2.1980இல் தமிழகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 50 விழுக்காடு தனி ஒதுக்கீடு அளித்து எம்.ஜி.ஆர். ஆணையிட்டார்.

வன்னியர் சங்கத்தின் சார்பில் மருத்துவர் ச. இராமதாசு, அவர்களுக்குத் தனி இடஒதுக்கீடு கோரிப் போராடினார். எம்.ஜி.ஆர். அதுபற்றிக் கவலைப்பட வில்லை.

டாக்டர் கலைஞர் 1989 தேர்தலில் வெற்றி பெற்றார். உடனே தமிழகப் பிற்படுத்தப்பட்டோருக் கான ஒதுக்கீடு 50 விழுக்காட்டில் 30 விழுக்காடு பிற்பட்டோருக்கும், 20 விழுக்காடு மிகப் பிற்பட்டோ ருக்கும் எனப் பிரித்து அளித்தார். இது மிகப்பிற்பட் டோருக்கு மிகப் பெரிய உதவி. அடுத்து பட்டியல் வகுப்பினருக்கு உள்ள 18 விழுக்காடு அன்னியில், தமிழகப் பழங்குடிகளுக்கு 1 விழுக்காடு தனியே வழங் கினார். கிராமப்புற மாணவர்களுக்கு 15 விழுக்காடு ஒதுக்கீடு அளித்தார்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்தாரும் செய்யத் துணியாததை - ஆணுக்கும் பெண்ணுக்கும் குடும்பச் சொத்தில் சமபங்கு அளித்துச் சட்டம் செய்தார்.

பெண்களுக்குக் கல்வியிலும், அரசு வேலையிலும் 30 விழுக்காடு தனி ஒதுக்கீடு வழங்கினார். உள் ளாட்சிப் பதவிகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு வழங்கினார்.


முசுலிம்களுக்கும், கிறித்துவர்களுக்கும், அருந்ததியர் களுக்கும் உள் ஒதுக்கீடு வழங்கினார்.

சாதி ஒழிப்புக்குத் தூண்டுதல் செய்யும் வகையில், 237 இடங்களில் ''பெரியார் நினைவு சமத்துவபுரம்'' அமைத்தார். அதில், 40 விழுக்காடு வீடுகளைத் தீண்டப் படாத வகுப்பினருக்கும் 25 விழுக்காடு வீடுகளைப் பிற்படுத்தப்பட்டோருக்கும் ஒதுக்கினார்.

பரிதிமாற் கலைஞரும், மறைமலை அடிகளும், பாவாணரும், தமிழ்மொழி அறிஞர்களும் விரும்பிய வண்ணம் ''செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனத் தைச்'' சென்னையில் அமைத்தார்.

''குறளோவியம்'' தீட்டினார். திரைப்படத் துறைக்குக் கதை-வசனம் எழுதிப் புகழ் பெற்றார். 1.1.2000இல் கன்னியாகுமரியில் வள்ளுவருக்கு 133 அடி உயரச் சிலையை நாட்டினார். சென்னையில் ''வள்ளுவர் கோட்டம்'' அமைத்தார்.

23.3.2010இல் சென்னையில் அண்ணா அறி வாலயத்தில் ''பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் - விரிவாக்கம் செய்யப்பட்ட 20 தொகுதிகளை'' வெளியிட்டார்.



*சுதந்தர நாளில் மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தவர் கலைஞர். 1975 ஆகத்து 15 அன்று கோட்டையில் கொடியேற்றிய பின் முதலமைச்சர் கலைஞர்.*

கலைஞர் மு.கருணாநிதி, திராவிட இயக்கத்துக்குக் கெட்டியான அடித்தளத்தை நாட்டிச் சென்றுள்ளார்.

தி.மு.க.வினரும், அ.இ.அ.தி.மு.க.வினரும், பெரியார் கொள்கையினரும், தமிழக மக்களும், உலகெங்கும் வாழும் தமிழர்களும் என்றும் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை மறக்கமாட்டார்கள். வாழ்க! வளர்க! கலைஞர் மு. கருணாநிதியின் புகழ்!

**- வே. ஆனைமுத்து**

# தானாக வளர்ந்த-ஓய்வறியாது உழைத்த திராவிட இயக்கப் பெருந்தலைவர் கலைஞர்

- குட்டுவன்

1964ஆம் ஆண்டில், நான் முதன்முதலில் எனது 18ஆம் வயதில் கலைஞர் அவர்களை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் அறிஞர் அண்ண நற்பணி மன்றம் என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி ஏழை மாணவர்களுக்கு மாலை நேரத்தில் இலவச வகுப்புகளை நண்பர்களுடன் இணைந்து நடத்தினேன். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பொருளாதார இளங்கலை பட்டப்படிப்பினை மேற்கொண்டிருந்தேன். சிந்தாதிரிப் பேட்டையின் மற்றொரு வட்டத்தில் எம்ஜிஆர் பேசுவதாக இருந்த கூட்டம் அவர் வராததனால் தள்ளிவைக்கும் சூழல் ஏற்பட்டது. புதுப்பேட்டை பகுதியில் மற்றொரு கூட்டத்தில் கலைஞர் பேசிக் கொண்டிருந்தார். அங்குச் சென்று அவரிடம் பெரும் கூட்டம் அங்குக் கூடியிருக்கிறது. தாங்கள் வரவேண்டும் என்று கலைஞரிடம் கேட்டேன். உடனடியாக ஒத்துக்கொண்டு சிறுது நேரம் பேசிவிட்டுச் சென்றார்.

1967ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா முதல்வர் ஆன பிறகு முரசொலி மாறன் அவர்கள் தென் சென்னை தொகுதியில் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டார். அத்தேர்தலில் நான் தீவிரமாகப் பணியாற்றினேன். அப்போது கலைஞரும் அண்ணன் மாறனும் முரசொலிக்கு வந்து போகலாமே என்று அழைத்தனர். அக்காலக்கட்டத்தில் கலைஞரை மாதம் ஒரு முறையோ அல்லது இரு முறையோ சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். 1988இல் சிந்தாதரிப்பேட்டையிலிருந்து தேனாம்பேட்டையில் மாடிக் குடியிருப்பிற்கு இடம் பெயர்ந்தேன். அறிவாலயமும் கலைஞர் மண்டபக் கட்டிடப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில், நீயும் தினமும் இங்கு வந்து நடைப்பயிற்சி செய்யலாம் என்றார் கலைஞர். 2009 கலைஞரின் இடுப்புப் பகுதியில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் வரை 21 ஆண்டுகள் அவருடன் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றேன். ஏராளமான சமூக பொருளாதார அரசியல் கருத்துகள் பரிமாறும் ஒரு இடமாகவே அறிவாலயத்தின் காலைப் பயணம் இருந்தது என்றால் அது மிகையாகாது.

கலைஞரிடம் நான் பல முறை பல வினாக்களை எழுப்பியிருக்கிறேன். அதற்கெல்லாம் அவர் மிகப் பொறுமையாகப் பதிலளித்துள்ளார். தந்தை பெரியார் மீது அவர் வைத்திருந்த அன்பிற்கும் பற்றிற்கும் மரியா தைக்கும் அளவே இல்லை எனக் கூறலாம்.

அறிஞர் அண்ணா கூறியது போன்றே கலைஞரும் தன்னுடைய இளமைப் பருவத்தின் வசந்த காலம் பெரியாரிடம்தான் தொடங்கியது என்று அடிக்கடி கூறுவார். பெரியாரிடமிருந்த துணிவை நெருக்கடி நிலையின் போது கலைஞரிடம் நேரடியாகக் காணும் வாய்ப்பினைப் பெற்றேன். மாலை 6 மணிக்குப் பிறகு கடற்கரையில் அமர்ந்து



1996 மே 11 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைப்பயிற்சியில் கலைஞருடன் கட்டுரையாளர்.

உரையாடுவார். நான் கலைஞர் இல்லம் சென்று அவருடன் மகிழுந்தில் வருவேன். ஒரு நாள் அகில இந்திய வானொலியில் கலைஞர் பற்றிய ஒரு தவறான செய்தியை ஒலிபரப்பினர். கலைஞர் மகிழுந்தில் வரும்போது அந்த ஓட்டுனரிடம் கடற்கரை சாலையில் இருந்த அகில இந்திய வானொலி கட்டடத்தின் நுழை வாயிலின் உள்பகுதியில் நுழைந்து வெளிப்பகுதி வழியாக மகிழுந்தை ஓட்டு என்றார். இதை கலைஞர் போராட்டமாக அறிவிக்காமல் உள்ளே நுழைந்து வெளியே வந்தவுடன் காவல் துறை நூற்றுக்கணக்கில் குவிக்கப்பட்டது. கடற்கரையில் கலைஞருடன் நான் அமர்ந்திருந்த பகுதியில் காவல் துறையினரும் நுண் ணறிவுப் பிரிவினரும் குவிக்கப்பட்டனர். அங்கிருந்த தோழர்கள் இதைத் தெரிவித்தவுடன் கலைஞர் ஒரு கருத்தைத் தெரிவித்தார். இன்று நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது. காவல் துறைக்கு நுண்ணறிவு என்பது குறைவு அவர்கள் என்ன வள்ளுவரிடமா பாடம் கற்றார்கள் என்று கூறிச் சிரித்துவிட்டு நான் நினைத்தது நடந்துவிட்டது என்றார். கலைஞர் கேட்காமலேயே அந்தச் செய்தி தவறு என்று வானொலி கூறிவிட்டது. கலைஞரிட மிருந்த துணிச்சலும் தன்னை எதிர்த்த நிர்வாகத்தை எப்படி இலகுவாகக் கையாள்வது என்பதையும் தெரிந்து வைத்திருந்தார். “நான் முதலமைச்சராக இருந்த போது காவல் துறையினர் எப்படிச் செயல்படுவார்கள் எந்த எல்லைக்கு மேல் செல்லமாட்டார்கள் என்பது தெரியும்” என்று கலைஞர் கூறினார்.

அதே போன்று திராவிட முன்னேற்றக் கழகம் அறிஞர் அண்ணா பிறந்தநாள் தொடர்பாக ஒட்டிய சுவரொட்டியை வெள்ளை உடையணிந்த காவல் துறையினர் கிழித்த தைப் பார்த்துவிட்டார். உடனடியாக மகிழுந்துவை விட்டு இறங்கி இந்த வேலை செய்வதற்காகத்தான் உங்களுக்



கலைஞருடன் வே.ஆனைமுத்து சந்திப்பு - மா.முத்துச்சாமி, தே.முத்து, இரா.பச்சமலை, கட்டுரையாளர் குட்டுவன்

கெல்லாம் ஊதிய உயர்வு அளித்தேனா என்று மிகக் கோபத்துடன் அந்தக் காவலர்களைப் பார்த்து கேட்டார். ஐயா எங்களை மன்னித்துவிடுங்கள் என்று கூறி அந்த இடத்தைவிட்டு அகன்று விட்டனர். இவ்வளவு துல்லிய மாக காவல் துறையினர்தான் அந்தச் சுவரொட்டியைக் கிழிக்கின்றனர் என்று அறியும் ஆற்றலும் அதனைத் தட்டிக் கேட்கின்ற அஞ்சாமையும் அவரிடம் காணப்பட்டது. இது போன்ற எண்ணற்ற நிகழ்வுகளைக் கட்டுரை யாசிரியரால் நினைவுகூர முடியும்.

நெருக்கடி நிலை காலத்தில் கடற்கரையில் அமர்ந்து கொண்டு வானொலி செய்திகளைக் கேட்டுக்கொண்டிருப் பார். அப்போது தென்மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரசுச் சட்டமன்ற உறுப்பினர் பொன்னப்பர் விமான விபத்தில் மறைந்துவிட்டார் என்ற செய்தி வந்தது. உடனடியாக சத்தியமூர்த்திபவனுக்குச் செய்தியைச் சொல்லி அவரு டைய படத்திற்கு கலைஞர் அஞ்சலி செலுத்த வருகிறார் என்று கூறி ஒரு கழகத் தோழரை அனுப்பினார். அப்போது மணி இரவு 7.30; மலர்மாலை வாங்கி பொன்னப்பனாருக்கு அஞ்சலி செலுத்தலாம் புறப்படு என்றார். ஓட்டுனரிடம் நேரடியாக பாரிமுனைக்கு சென்று அங்குள்ள பூக்கடை அங்காடிக்குச் செல்லக் கூறினார். அந்நேரத்தில் பலர் கடைகளை மூடிக்கொண்டிருந்தார் கள். நான் போய் மாலை கேட்ட போது கடையைத் திறந்து தர மறுத்தார்கள். கலைஞர் மகிழுந்தில் அமர்ந்திருக்கிறார் அவர் கேட்டுதான் நான் இங்கு வந்தேன் என்று கூறினேன். அவர்கள் நம்பவில்லை. உடனடியாக மகிழுந்து இருக்கும் இடத்திற்கு ஓடி வந்தனர். கலைஞரைப் பார்த்தவுடன் மகிழ்ச்சியால் உணர்ச்சி வசப்பட்டு கலைஞர் வாழ்க என்று முழக்க மிட்டனர். ஒரு மாலைக்கு இரண்டு மாலைகளாக அளித்தனர். கலைஞர் மிகவும் வலியுறுத்தி மாலைகளுக்கான பணத்தை அளித்தார். நேரடியாக சத்தியமூர்த்தி பவனுக்குச் சென்று சட்டமன்ற உறுப்பினர் பொன்னப்பனாருக்கு அஞ்சலி செலுத்தினார். முரசொலிக்குச் சென்று இந்தச் செய்தியை அளித்துவிட்டு இல்லத்திற்குச் செல்லுமாறு என்னிடம் கூறினார். மிகவும் நெருக்கடியான நிலையில் கூட எதிர்க்கட்சியில் அமர்ந்து அதிகமான கேள்விகளைக் கேட்டவர் மறைந்த பொன்னப்பர்; மிகவும் நேர்மை யானவர்; மறைந்த காமராசருக்கு நெருக்கமானவர். நெருக்கடி நிலையிலும் கட்சி மாறாதவர் என்று என்னிடம் கலைஞர் தெரிவித்தார். எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களின் திறமைகளை மதித்துப் போற்றியவர் கலைஞர்.

இதே காலக்கட்டத்தில் சென்னை நுங்கம்பாக்கத் திலிருந்த சக்கரம் திருமண மண்டபத்தில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவில் கலைஞரும் மறைந்த டி.கே.சீனுவாசனும் பேசுவதற்குப் பலமுறை காவல் துறையினரை அணுகிய பிறகு சில கட்டுப்பாடுகளுடன் அனுமதி அளித்தார்கள். ஆனால் கூட்டம் மண்டபத்திற்கு வெளியேயும் திரண்டு நின்றது. திராவிட இயக்கத்தால் தத்துவ மேதை என்று அழைக்கப்பட்ட டி.கே.சீனுவாசன் தனக்கே உரித்தான பாணியில் நெருக்கடி நிலையைப் பற்றிப் பேசினார். நாட்டிலும் நெருக்கடி கூட்டத்திலும் நெருக்கடி. எந்த நெருக்கடியையும் கண்டு அஞ்சாத கலைஞர் இன்று அண்ணாவைப் பற்றிப் பேசப் போகிறார்.

நான் காலையில் இந்து நாளேட்டில் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரின் பேச்சைப் படித்தேன். மும்பை துறைமுகத்தில் ஒரு புதிய கப்பலை அறிமுகம் செய்த



*1967 செப்டம்பர் 19 அன்று சென்னை மெரினா கடற்கரையில் முதலமைச்சர் அண்ணா கூவம் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார், பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி.*

போது இந்திரா காந்தி கப்பலோட்டிய தமிழனைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். அதில் இன்றைய முதலாளிகள் வணிக நோக்கிற்காகவும் இலாபத்திற்காகவும்தான் கப்பல்களை இயக்குகிறார்கள். அதே அடிப்படையில் வணிகக் நோக்கிற்காகக் கப்பலை வ.உ.சிதம்பரம் ஓட்டினார் என்று பிரதமர் பேசியிருக்கிறார். பிரதமருக்கு வ.உ.சி. செய்த தியாகங்கள் தெரிந்திருந்தாலும் அல்லது தெரியாம லிருந்தாலும் உயர் அதிகாரிகள் அளித்த குறிப்பை வைத்துக் கொண்டு பேசியுள்ளார். இது தவறு. கப்பலோட்டிய தமிழன் வஉசி விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக்கட்ட தலைவர். பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் இந்திய வணிகம் பெருகுவதற்காகதான் பொது நோக் கோடு கப்பல் குழுமத்தை இயக்கினார். இது கூடத் தெரி யாமல் பிரதமர் பேசலாமா? என்று தொடங்கி கலைஞர் யார் தெரியுமா? என்று வினா எழுப்பிப் பேசினார்.

அரசியலிலே தானாக வந்தவர்கள் தள்ளப்பட்டவர்கள் என்று இரு பிரிவினர் உண்டு. இந்திரா காந்தி அம்மையாரே உங்களின் தாத்தா மோதிலால் நேரு தந்தை ஜவகர்லால் நேரு செல்வச் செழிப்பில் வளர்ந்த குடும்பம் நீங்கள் அரசியலுக்கு வரும் போதே ஒரு பெரிய குடும்பப் பின்னணி உங்களுக்கு இருந்தது. இங்கே அமர்ந்திருக்கின்ற தலைவர் கலைஞருக்கு சொந்த ஊர் திருக்குவளை. ஒரு சிறு ஊர்ப்பகுதி. அவரது தந்தை யாரை அந்த ஊர்ப்பகுதி ஒட்டியுள்ளவர்களுக்குதான் தெரியும். ஆனால் இன்றைக்குக் கலைஞர் என்றால் இந்தியாவே தெரிந்திருக்கிறது. நெருக்கடி நிலையையே எதிர்க்கும் துணிவு இருக்கிறது. கலைஞரும் நானும் இந்தக் கூட்டத்திற்கு வரும்போது ஒன்றாகவே வந்தோம். மகிழுந்திலிருந்து இறங்கியவுடன் கலைஞர் வேகமாக மேடை நோக்கிச் சென்றுவிட்டார். நான் அவருக்குப் பின்னால் வந்ததால் கூட்டத்தினரால் தள்ளப்பட்டுத்தான் வந்தேன். அதுபோன்று தான் பிரதமர் இந்திரா காந்தியும் மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு என்ற பெரும் அரசியல் பின்னணியோடு இன்றைக்கு என்னைப்போல் தள்ளப்பட்டு வந்தவர். ஆனால் கலைஞரோ அன்றும் இன்றும் தானாக வந்தவர். இதனின் உட்பொருளை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று எண்ணுகின்றேன்.

திருவாரூரில் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தி திராவிட இயக்கத்தில் இணைந்து தந்தை பெரியாரின் கைப்பிடித்து வளர்ந்து அறிஞர் அண்ணாவோடு நடைபோட்டு வந்தவர். அதற்கு அவர் அளித்த உழைப்பு எண்ணிப் பார்க்கவே வியப்பாக இருக்கும். கலைத்துறை யாக இருக்கட்டும் கவிதை துறையாக இருக்கட்டும் திரைக்கதை வசனமாக இருக்கட்டும் ஏடு நடத்துவதாக இருக்கட்டும் அவர் உழைத்த உழைப்பு யாராலும் அறிந்திருக்க முடியாது. நான் கலைஞரின் வளர்ச்சியைக் கண்டு வியந்திருக்கிறேன். தமிழகத்தினுடைய தலைவர் களில் கலைஞர் ஒரு விடிவெள்ளி. வள்ளுவருக்குக் கோட்டம் அமைத்தவர். ஏழை மக்களின் வாட்டம் போக்கியவர் என்று கலைஞரைப் பற்றியும் அண்ணாவைப் பற்றியும் ஓர் இலக்கியச் சொற்பொழிவையே நிகழ்த்தி னார். இப்போது புரிகிறதா? தானாக வந்த தலைவருக்கும் தள்ளப்பட்டு வந்த தலைவருக்கும் உள்ள வேறுபாட்டை உங்களால் உணர முடிகிறதா? என்று முடித்தார்.

தத்துவமேதை டி.கே.சீனுவாசன் பேசிய பேச்சிற்குப் பிறகு 43 ஆண்டுகள் கலைஞர் வாழ்ந்தார். 2018 ஆகஸ்ட் 7 அன்று மறைந்தார். இந்த 43 ஆண்டுகளில் இரண்டாண்டுகள்தான் உடல் நலிவுற்று இருந்தார். 41 ஆண்டுகளில் கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு 133 அடி உயர சிலை கண்டார். 1330 திருக்குறளுக்கும் எளிய உரை எழுதினார். பல திரைப்படங்களுக்குக் கதை வசனம் எழுதினார். ஆயிரக்கணக்கான கடிதங்களை உடன்பிறப்புகளுக்கு முரசொலியில் தீட்டினார். இக்காலக் கட்டத்தில் 3 முறை முதலமைச்சராக இருந்தார். பல அரிய சமூக பொருளாதார திட்டங்களைத் தமிழகத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தினார். சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றியதில் அவரின் சாதனை அளப்பரியது. சான்றாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள், கல்லூரி பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஆகியோர்க்கு ஊதிய உயர்வு குழுக்கள் அளித்த பரிந்துரைகளை ஏற்றுச் செயல்படுத்தியவர். எல்லா மாவட்டங்களிலும் அரசு மருத்துவமனைகள் கலை அறிவியல் கல்லூரிகள் பலப்



*தேசிய முன்னணி உருவாக்கக் காலத்தில் சென்னையில் பத்திரிகையாளர் சந்திப்பில் (1989 ஆகத்து 26) கலைஞருடன் மற்ற தலைவர்கள் - ஜோதிபாசு, வி.பி. சிங், என்.டி. ராமாராவ், தேவிலால், இராமகிருஷ்ண ஹெக்டே.*

பல்கலைக்கழகங்கள் எனப் பலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர். இடஒதுக்கீடு கொள்கையை நடைமுறைப்படுத்தி 50 விழுக்காட்டில் 30 விழுக்காடு பிற்படுத்தப்பட்டோருக்கும் 20விழுக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும் 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கும் 3 விழுக்காடு அருந்ததியருக்கும் 3.5 விழுக்காடு இசுலாமியருக்கும் 1 விழுக்காடு மலைவாழ் மக்களுக்கும் அளித்து அனைத்துச் சமூகத்திலும் அடித்தட்டு மக்கள் கல்வி வேலை வாய்ப்புகளை உறுதி செய்ததனால் மானுட மேம்பாட்டுக் குறியீட்டில் இந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்தது, அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீட்டை அளித்தது, விதவைகளுக்கு மறுமண உதவித் திட்டங்களை அளித்தது, பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை அளித்தது, கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்க நிதியுதவி அளித்தது ஆகியன பெண்ணுரிமைக்கான சமூகப் புரட்சிக்கான அடையாளங்களாகும். இது போன்று எண்ணற்றப் பணிகளைச் செய்து கொண்டிருக்கையிலேயே கலைஞர் பெரியார் பற்றாளர்களிடம் தொடர்ந்து அன்பு செலுத்தி வந்தார்.

சான்றாக, பெரியார் சிந்தனையாளர் வே.ஆனைமுத்து அவர்கள் பெரியார்-நாகம்மையார் அறக்கட்டளைக்காக உள்ள நிலத்தை அரசு 99 ஆண்டுக் குத்தகைக்குத்தர வேண்டும்என்று கோரினார். கலைஞர் உடனே 30 ஆண்டுகளுக்குக் குத்தகைக் காலத்தை நீட்டித்துத் தந்தார்.

ஒரு நாள், நடைப்யிற்சியின் போது கோவை ராமகிருஷ்ணன் எப்படி இருக்கின்றார் என்று கேட்டார். அவர் கேட்ட இரண்டு நாட்களுக்கு முன்பு கோவை ராமகிருஷ்ணன் பெரியார் சிலையை வைப்பதற்கு நாங்கள் கேட்ட இடத்தை மாவட்ட ஆட்சியர் தர மறுக்கிறார். உரிய அனுமதியை மற்ற அதிகாரிகளும் தர மறுக்கிறார்கள். கலைஞரிடம் இதைக் கூற முடியுமா என்று என்னிடம் கேட்டார். அதன் தொடர்பான விண்ணப்பத்தையும் எனக்கு அனுப்பியிருந்தார். நான் உடனே கோவை ராமகிருஷ்ணன் தங்களுக்கு ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார் என்று கூறினேன். மறுநாள் அந்த விண்ணப்பத்தைக் கலைஞரிடம் அளித்தேன். ஒரு வாரத்திற்குள் கோவை ராமகிருஷ்ணன் கேட்ட இடத்திலேயே தந்தை பெரியார் சிலையை வைப்பதற்கு அனுமதி ஆணையை அளிக்கச் செய்தார்.

நடிகவேள் எம்.ஆர்.ராதா தனது இறுதிக் காலத்தில் கலைஞரிடம் வந்து ஒரு நிகழ்ச்சிக்கு வருமாறு அழைத்தார். சென்னை தியாகராயர் கல்லூரியில் 1978ஆம் ஆண்டு எம்.ஆர். ராதா இறுதியாக நடித்த நாடகத்திற்குக் கலைஞர் தலைமை தாங்கினார். அவ்விழாவில் பெரியார் இயக்கத்திற்கு நடிகவேள் அளித்த அளப்பரிய தொண்டினைப் பாராட்டி கலைஞர் தான் வாங்கிய ஒரு பொன்னாடையை அளித்துச் சிறப்பித்தார். அப்போது நடிகவேள் பெரியார் நூற்றாண்டு விழாவில் என்னைச் சிறப்பித்ததற்காக நன்றி நன்றி என்று கூறினார். இக்கட்டுரையாசிரியர் கலைஞருடன் கலந்து கொண்டிருந்தார்.

இது போன்று சமூக நீதிக்காகப் போராடிய தந்தை பெரியாரின் தொண்டர்களை அவர் மதித்த பாங்கே தனிச்சிறப்பானது. இதற்குக் காரணம் கலைஞரின் 75 ஆண்டுக்கால அரசியல் பயணத்தில் டி.கே.சீனுவாசன் குறிப்பிட்டது போலத் தானாக வளர்ந்த தலைவர். அந்தப் பயணத்தின் வலிச் சுமைத் தியாகம், உழைப்பு ஆகிய பண்புகளைக் கலைஞர் உணர்ந்து செயலாற்றியதை அறிந்தவர்கள் உலகம் முழுவதும் உள்ளவர்களும் ஊடகத்தினரும் தமிழக மக்களும் எழுத்தாளர்களும் இந்திய அரசியல் தலைவர்களும் நண்பர்களும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

# கண்ணுறங்கு தமிழ்மகனே!

சங்கத் தமிழை
எங்களைப் போல் பாமரர்க்கு
எளிதாகப் புரியவைத்த
தங்கத் தமிழனே!
தாலேலோ!

தமிழ்த்தாய் பெற்றெடுத்த
தவப்புதல்வனே தாலேலோ!
அவளை
ஈன்ற பொழுதின் பெரிதுவக்கவைத்த
பெம்மானே தாலேலோ!

குறுமுனியாம் வள்ளுவனை
குவலயத்தோர் நிமிர்ந்து பார்க்க
குமரியிலே வெகு உயரத்தில் வைத்திட்ட
கோமகனே தாலேலோ!

கண்ணகிக்கு சிலை வைத்த
காவலனே தாலேலோ!
செம்மொழிக்கு சீர் சேர்த்த
பாவலே தாலேலோ!

**சாமானியனும்கூட**
**சரித்திரம் படைக்கலாம்**
**சரித்திரமாய் ஆகலாம் என**
**சாதித்துக் காட்டிய சான்றோனே தாலேலோ!**

ஓயாமல் உழைத்திட்ட உதயசூரியனே
தாலேலோ!
மீளா உறக்கத்தில் ஆழ்ந்திட்டாய்
தாலேலோ!

வங்கக்கடலருகே அடங்கும் பொங்குதமிழே
தாலேலோ!
அண்ணனருகே அமைதி பெறப்போகும் தம்பியே
தாலேலோ!

போராடி இடம்பெற்ற பொன்மணியே
தாலேலோ!
சீராட்டி, உன்னை உறங்கவைப்பாள் கடலன்னை
தாலேலோ!

காலப்பெருவெள்ளம் கரைத்திட்ட உன்னை
மாளாத்துயருடன் தம்பிகள் மனதிலே வைத்திருப்பர்
அன்னை தமிழ் இருக்கும் வரை
அண்ணலே! நீ நிலைத்திருப்பாய்
உன்னிடம் உனக்குண்டு
கவலைப்படாமல் கடலலை தாலாட்ட
கண்ணுறங்கு தாலேலோ!

**- அரூர் மூர்த்தி**



# அன்னை தமிழால் வளர்ந்த, பின் பிள்ளையாய் அவளைப் பேணிக்காத்த தமிழனுக்கு, நன்றியுடன் இந்தத் தமிழச்சியின் அஞ்சலி

அஞ்சுகம் பெற்றெடுத்த கஞ்சுகமே
ஆரூர் எமக்களித்த சுந்தரனே
பஞ்சுமிட்டாய் போல் தமிழை மாற்றி
பாமரரையும் ருசிக்க வைத்த அன்னவனே
தந்திரமாய் எதிரிகளை வீழ்த்திடும்
மந்திரக்கலை பயின்ற வித்தகனே!

விரலால் தீமூட்டி பார்த்ததுண்டு பாரினிலே
கரகரவெனும் குரலால் தீ மூட்டும் வித்தை தெரிந்தவனே
கனல் பறக்கும் உன் சொற்களிலே
தேவையென்றால் புனலும் பெருக்கெடுக்கும்
குற்றால சாரலின் குளுமை போல் இதம் கொடுக்கும்

நாவெனும் வில்லை வளைத்து
சொல்லெனும் அம்பு தொடுத்து
எழுமரமென்ன,
ஏழ்கடலை துளைத்திடும் வல்லமை பெற்றவனே!

நோவெடுத்தால்
கை கடுக்கும், கால் கடுக்கும்
மெய் கடுக்கும் கண்டதுண்டு
மை எடுத்து நீ எழுதும் கடிதத்தால்
எதிரிகள் தம் மனம் கடுக்கும்
மந்திரத்தை அறிந்தவர் எவருமுண்டோ!

தமிழே அடைக்கலமாய்
தமிழே படைக்கலமாய்
தமிழே உன் பேச்சாய்
தமிழே உயிர்மூச்சாய் வாழ்ந்தவனே!
காலப்பெருவெள்ளம் கரைத்தழைத்து சென்றாலும்
மாளாத்துயருடன் அரற்றும் உன் தம்பிகள்
மனதிலே வைத்திருப்பர்
அன்னை தமிழ் இருக்கும்வரை
அண்ணலே! நீ நிலைத்திருப்பாய்
ஓயாமல் உழைத்திட்ட உதயசூரியனே
மீளா உறக்கத்தில் நிம்மதியாய் கண்ணுறங்கு!

**- கடம்பை சத்தியா**

## பாரதிய சனதாவின் நேர்மையான
## இந்தியப் பிரதமராக 3 முறை இருந்த

# அடல் பிகாரி வாஜ்பாய் மறைந்தது பேரிழப்பு!

மத்தியப் பிரதேசம் குவாலியரில் 1924ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 25இல் பிறந்த அடல் பிகாரி வாஜ்பாய் 93 ஆண்டுகள் 7 மாதங்கள் 23 நாள்கள் வாழ்ந்து, 16.8.2018 மாலை 5.05 மணிக்கு தம் 93ஆம் அகவையில் மறைவுற்றார்.

அவர் 1957 முதல் இந்திய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

1977இல் சனதா கூட்டணி வெற்றி பெற்ற போது, மொரார்ஜி தேசாய் தலைமையில் கூட்டணி அமைச்சரவை அமைந்தது. அந்த அமைச்சரவையில் வாஜ்பாய் அயல்நாடுகள் விவகார அமைச்சராகப் பணியாற்றினார்.

1980ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் காங்கிரசு வெற்றி பெற்றது.

1984 இந்திராகாந்தியும், 1991இல் மே இல் இராஜீவ் காந்தியும் கொலையுண்ட பிறகு, பி.வி. நரசிம்மராவ் 5 ஆண்டுகள் இந்தியாவின் பிரதமராக இருந்தார். 1996இல் நடைபெற்ற தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனினும் பாரதிய சனதா கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றது.

1996 மே 16 அன்று, வாஜ்பாய் பிரதமராகப் பதவி ஏற்றார். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் பிரதமர் பதவியிலிருந்து விலகினார்.

1998 மார்ச்சு 18இல் பிரதமராகப் பதவி ஏற்றார். இது இரண்டாவது தடவை. 17.4.1999இல் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில், ஒரு வாக்கில் தோற்றார்.

1999 ஆண்டே நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மை பெற்று, மூன்றாந்தடவை பிரதமர் ஆனார்.

தம் ஆட்சிக்காலத்தில் 1998 மே மாதம் 11 மற்றும் 13ஆம் நாள்களில் இராஜஸ்தான் மாநிலம் பாலைவனத்தில் பொக்ரான் என்ற இடத்தில் துணிச்சலாக அணுகுண்டை வெடிக்கச் செய்து, சோதனை செய்தார். இதனால் பாகித்தானும் சில அணுகுண்டுகளை வெடிக்கச் செய்து, இந்தியாவை அச்சுறுத்தியது. அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்தது.

இந்தியா மீது பாக்கித்தான் கார்கிலில் தொடுத்த போரில், முதலில் பின்வாங்கும்படி அன்பாகக் கேட்டார்; பாகித்தான் பிடிவாதமாகப் போரிட்டது. இந்தியப் படைகள் பாக்கித்தான் படைகளை ஓட, ஓட விரட்டின.

இவ்வளவுக்கும் இடையே பாக்கித்தானுக்குப் பேருந்துப் பயணத்தில் பிரதமர் வாஜ்பாயியே பங்கேற்றார்.



இந்தியாவில் பி.வி. நரசிம்மராவ் பிரதமராக இருந்த போது 6.12.1992 அயோத்தியில், எல்.கே. அத்வானி குழுவினர் பாபர் மசூதியை இடித்தனர். அதை இந்துத்வா, ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் பலர் ஆதரித்தனர். ஆனால் வாஜ்பாய் அதற்குத் தம் எதிர்ப்பைத் தெரிவித்தார். அவர் இந்து மதவெறியர் அல்லர்.

அயோத்தி மசூதி இடிப்பை ஒட்டி, கோத்ரா இரயில் நிலைய கலவரச் சம்பவம் நடந்தது.

அதை முன்வைத்து குசராத்தில் முதலமைச்சர் நரேந்திர மோடி அரசால் முசுலிம்கள் பலர் கொல்லப்பட்டனர். இக்கொலையைக் கண்டித்து, ‘‘குசராத்தில் ராஜதர்மம் இல்லை’’ என வெளிப்படையாகக் கண்டித்தார், வாஜ்பாய். அவர் அத்தகைய நேர்மையாளர்.

வாஜ்பாய் தம் பதவிக்காலத்தில் தங்க நாற்கரச் சாலைத் திட்டத்தை எல்லா மாநிலங்களிலும் அறிமுகப்படுத்தினார். இது ஒரு பயனுள்ள பணி.

2009 முதல் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட வாஜ்பாய், அதிலிருந்து மீளவே இல்லை. கடந்த 9 வார காலம் தில்லியில் எய்ம்ஸ் (AIMS) மருத்துவமனையில், மருத்துவம் பெற்ற பிறகு, 16.8.2018 வியாழன் மாலை 5.05 மணிக்கு உயிர்நீத்தார், வாஜ்பாய்.

**வாழ்க நேர்மையாளர் வாஜ்பாய் புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

# இந்தி, சமற்கிருத, ஆங்கில மொழி ஆதிக்கத்தைத் தகர்ப்போம்! மொழிவழித் தேசிய இனங்களின் தன்னுரிமையை வென்றெடுப்போம்!

க. முகிலன்

மனிதன் தவிர, பிற உயிரினங்கள் தாம் வாழும் சூழலில் இயற்கையில் கிடைப்பவற்றை அப்படியே துய்க்கின்றன. மனிதன் மட்டுமே கருவியைக் கொண்டு தன் உழைப்பைச் செலுத்தி, இயற்கையில் இருப்ப வற்றைப் பயன்படுத்தித் தன் தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்கான உற்பத்திச் செயலில் ஈடுபடு கிறான். இந்த உற்பத்திச் செயல்தான் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான முதன்மையான வேறுபாடு.

உற்பத்திச் செயல் என்கிற நடைமுறையிலிருந்தே மனித அறிவு என்பது உருவாகி வளர்ச்சி பெற்று வந்தது. மனிதர்கள் கூட்டு உழைப்பில் ஈடுபட்ட போது, தங்களுடைய எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டிய தேவை எழுந்தது. அந்நிலையில்தான் நீண்டகாலப்போக்கில் பேச்சு மொழி தோன்றியது. இதை எங்கெல்சு, "உழைப்பிலிருந்தும், அதனுடைய மாற்றப் போக்கிலிருந்தும் மொழியின் பிறப்பை விளக்கு வது ஒன்றே சாலவும் பொருத்தமுடையது" என்று கூறுகிறார்.

பேச்சு மொழி உருவான பின் பன்னெடுங்காலம் கழித்தே அது, எழுத்து மொழியாக வரிவடிவம் பெற்றது. சமற்கிருத மொழியில் செய்யுள் வடிவில் சொல்லப்பட்ட ஆரியர்களின் வேதங்கள் பல நூற்றாண்டுகள் கழிந்த பிறகே எழுத்து வடிவம் பெற்றன.

உலகில் தற்போது 6,900 மொழிகள் பேசப்படுவ தாகக் கூறப்படுகிறது. இவற்றில் கால்பங்கு மொழிகள் 1000 பேருக்கும் குறைவானவர்களால் பேசப்படு கின்றன. அய்ரோப்பாவில் 230 மொழிகளும், ஆசியாவில் 2,197 மொழிகளும் பேசப்படுகின்றன. பேசப்படும் மொழிகளில் பெரும்பாலானவை எழுத்து வடிவம் பெறாதவை.

அடுத்த நூறு ஆண்டுகளில் 3000 மொழிகள் அழியக்கூடிய ஆபத்து இருப்பதாக அய்க்கிய நாடுகள் அமைப்பின் கல்வி, அறிவியல், பண்பாட்டுக் கழகம் (UNESCO - யுனெஸ்கோ) தன்னுடைய கவலையைத் தெரிவித்துள்ளது.

தொழிற்சாலைகளில் எரிசக்தியைக் கொண்டு எந்திரங்கள் மூலம் பொருள்களை உற்பத்தி செய்யும் முதலாளிய உற்பத்தி முறை 250 ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்டது. முதலாளியம் தன் இலாபவேட்டைக்காகக் கண்மூடித்தனமாக இயற்கையின் கனிமவளங்களைச் சுரண்டியதால் பெரும் பரப்பில் காடுகள் அழிந்தன. இதனால் பல உயிரினங்கள் வேகமாக அழிந்து வரு கின்றன. இவ்வாறு அழியக்கூடிய நிலையில் உள்ள உயிரினங்களையும் அவற்றின் வாழ்விடங்களையும் காப்பாற்ற வேண்டும் என்கிற எண்ணமும், செயல் பாடும் வலுப்பெற்று வருகின்றன.

ஆனால் இந்த அளவிற்கு மொழியின் அழிவு பற்றிய விழிப்புணர்வு இன்னும் எழுச்சி பெறவில்லை. ஒரு மொழி என்பது வெறும் கருத்துப் பரிமாற்றக் கருவி மட்டும் அன்று; ஒவ்வொரு மொழியிலும் அதன் வரலாறு நெடுகிலும் உருவான அறிவு, ஒரு கருவூல மாகச் சேமிக்கப்பட்டுள்ளது. அம்மொழி பேசும் மக்களுக்கே உரித்தான - தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டுக் கூறுகள், கலை வடிவங்கள் உள்ளன. இயற்கையில் பல்லுயிர்ப் பன்மையைப் பாதுகாத்தல் எந்த அளவுக்கு இன்றியமையாததோ அதேபோல் மொழிகளின் பன் மையையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று யுனெஸ்கோ வலியுறுத்துகிறது. அதனால்தான் ஆண்டு தோறும் பிப்பிரவரி 21ஆம் நாளைத் தாய்மொழி நாளாகக் கடைப்பிடித்து, தாய்மொழியின் முதன்மையை மக்கள் உணருமாறு செய்கிறது.

மனிதகுல வரலாற்றில் மத்திய காலத்தில் (கி.பி.500 -கி.பி.1500) நிலவுடைமை சமூக அமைப்பு நிலவியது. இந்தியாவைப் பொருத்த அளவில் 1775இல் ஆங்கிலேயர் ஆட்சி காலூன்றும் வரையில் நிலவுடைமை சமூகக் கட்டமைப்பே நீடித்தது. மத்திய கால வரலாற்றில் ஆளும் வர்க்கம் மதத்தை ஆதிக்கம் செலுத்துவதற்கான கருவி யாகப் பயன்படுத்தியது. அக்காலத்தில் கல்வி என்பது மதக்கல்வியாக மட்டுமே இருந்தது. மேட்டுக்குடியி னருக்கு மட்டுமே கல்வி கற்கும் உரிமை இருந்தது. இந்தியாவில் சூத்திரர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் கல்வி உரிமை மறுக்கப்பட்டிருந்தது. மேலும் ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு குறிப்பிட்ட மொழியே வழிபாட்டுக் குரிய மொழியாக இருந்தது. எனவே மத ஆதிக்கமும் மொழி ஆதிக்கமும் பின்னிப்பிணைந்திருந்தன. இவை அரசியல் அதிகாரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன.

அமெரிக்க-ஆஸ்திரேலிய கண்டங்களைக் கண்டறிவ தற்குமுன் அய்ரோப்பாவில் இலத்தீன் மொழியே கிறித்துவ மதத்தின் வழிபாட்டு மொழியாக இருந்தது.

1517இல் செருமனியைச் சேர்ந்த மார்ட்டின் லூதர் கிறித்துவ மதத் தலைமைக்கு எதிராகக் கிளர்ச்சி செய் தார். இதன் விளைவாகக் கிறித்துவ மதம் கத்தோலிக்கப்

பிரிவு, பிராடஸ்டென்ட் பிரிவு என்று பிளவுபட்டது. அதனால் அவரவர் தாய்மொழியில் கிறித்துவ மறை நூலான விவிலியத்தைப் படிக்கின்ற - பரப்புரை செய் கின்ற நிலை உருவானது. முதலாளியம் தன் தேவைக் காகத் தாய்மொழியை அடிப்படையாகக் கொண்ட தேசியத்தையும், தேச-அரசுகள் உருவாக்கத்தையும் ஊக்குவித்தது. எனவே அய்ரோப்பாவில் தாய்மொழிகள் வேகமாக வளர்ச்சியடைந்தன.

இந்தியாவில் கி.பி.4ஆம் நூற்றாண்டில் பிறவியில் உயர்வு-தாழ்வு கற்பிக்கும் வருணாசிரம அடிப்படை யிலான இந்து மதமும் சமற்கிருத மொழி ஆதிக்கமும் வலிமையாக நிலைகொண்டன. மதச் சடங்குகள் செய்யும் உரிமை பார்ப்பனர்க்கு மட்டுமே உரியதாயிற்று. சமற்கிருதம் வழிபாட்டு மொழியாக மட்டுமின்றி கல்வி மொழியாகவும், மன்னர்களின் ஆட்சி மொழியாகவும் ஆதிக்கம் செலுத்தியது. இந்தியாவின் பெருநிலப்பரப்பை ஆட்சி செய்த முகலாயர் காலத்தில் (கி.பி.1526-1775) பாரசீகம் ஆட்சிமொழியாக இருந்த போதிலும்-பார்ப்பன ஆதிக்கமோ, சமற்கிருத ஆதிக்கமோ சற்றும் குலைய வில்லை.

ஆங்கிலேயர் ஆட்சியில் 1835ஆம் ஆண்டில்தான் பொதுக்கல்வி முறை கொண்டுவரப்பட்டது. அனைத்துச் சாதியினருக்கும் கல்வி கற்கும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் ஆங்கில வழியிலான கல்வியே தரப்பட்டது. அதனால் காலங்காலமாகக் கல்வி உரிமை பெற்றிருந்த பார்ப்பனர்களே கல்வி கற்று, பெருமளவில் அரசு வேலைகளில் அமர்ந்தனர். கல்வி கற்ற பார்ப்பன, சத்திரிய, பனியா வகுப்பினர் ஆங்கிலேயரிடமிருந்து முழு ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்க மாகக் கொண்டு, 1885இல் இந்திய தேசிய காங்கிரசுக் கட்சியைத் தொடங்கினர். இதற்காக இந்து மதத்தின் பேரால் மக்களை அணிதிரட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். திலகர் இதில் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

காந்தியார் 1915இல் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பினார். 1920இல் காங்கிரசு காந்தியின் தலைமையின்கீழ் வந்தது. பல்வேறு தாய்மொழிகளைப் பேசும் மக்களை ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக அணிதிரட்டுவதற்காக, காங்கிரசுக் கட்சியை மொழி வழியில் அமைத்தார். சென்னை மாகாணம் ஒரே ஆட்சி நிருவாகத்தின்கீழ் இருந்த போதிலும், தமிழ் மாகாண காங்கிரசு, தெலுங்கு மாகாண காங்கிரசு என்கிற கட்சி அமைப்புகள் நிறுவப்பட்டன. 1923இல் தமிழ் மாகாண காங்கிரசு உருவான போது பெரியார் அதன் செயலாளராகவும், தலைவராகவும் பதவி வகித்தார். காங்கிரசுக் கட்சி, சுதந்தர இந்தியா வில் மொழிவழிப்பட்ட மாநிலங்கள் அமைக்கப்படும் என்று கூறிய போதிலும், இந்திதான் இந்தியாவின் தேசிய ஆட்சி மொழியாக இருக்கும் என்றும் கூறிவந்தது. காந்தியாரும் இந்தியைத் தீவிரமாக ஆதரித்து வந்தார்.

1937இல் நடைபெற்ற தேர்தலில் பெரும்பாலான மாகாணங்களில் காங்கிரசுக் கட்சி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. இராசகோபாலாச்சாரி சென்னை மாகாண முதலமைச்சர் (பிரதமர்) ஆனார். 10.8.1937 இல் இராசகோபாலாச்சாரி இந்தியை சென்னை மாகாண உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு கட்டாயப் பாடமாக வைக்கப் போவதாக அறிவித்தார். இதற்கான அரசு ஆணை 21.4.1938இல் வெளியிடப்பட்டது. இதை எதிர்த்து பெரியாரின் தலைமையில் மாபெரும் மக்கள் போராட்டம் நடந்தது. இந்தித் திணிப்பு என்பது மொழி ஆதிக்கம் மட்டுமன்று, வடஇந்திய மேல்சாதி இந்துக் களின் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதே இதன் நோக்கம் என்பதைத் தமிழர்கள் புரிந்து கொண்ட தால்தான் இன்றுவரை இந்தித் திணிப்பை எதிர்த்து வருகின்றனர்.

இந்தியாவுக்கான அரசமைப்புச் சட்டம் உருவாக்கப் பட்டபோது, இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி இருப்பதா? ஆங்கிலமே தொடர்வதா? என்கிற விவாதம் எழுந்தது. தில்லியில் அரசியல் சட்ட அமைப்பு இல்லத் தில் (Constitution House) நடந்த காங்கிரசுக் கட்சியின் கூட்டத்தில் இது விவாதிக்கப்பட்டது. அப்போது நடத்தப் பட்ட வாக்கெடுப்பில் இந்திக்கு ஆதரவாகவும் எதிராக வும் சமமான வாக்குகள் இருந்தன. அப்போது காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருந்த பட்டாபி சீத்தாராமய்யா தலைவருக்கான வாக்கை இந்திக்கு ஆதரவாக அளித் தார். காங்கிரசுக் கட்சி இந்தியை ஏற்றுக்கொண்டதால் அரசமைப்புச் சட்ட அவையில் 14.9.1948 அன்று இந்தி இந்தியாவின் ஆட்சிமொழியாக ஏற்கப்பட்டது.

அரசமைப்புச் சட்டத்தில் 17ஆம் பகுதியில் விதி 341(1)-இல், “இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழி யாக (அ) ஆட்சி மொழியாக, தேவநாகரி எழுத்து வடிவில் உள்ள இந்தி இருக்க வேண்டும்” என்று எழுதப்பட்டது, 343 முதல் 349 முடிய உள்ள விதிகள் இந்திய ஒன்றியத்தின் பல துறைகளிலும் அலுவல் மொழி இந்தி தான் என்று கூறுகின்றன.

இந்திய நாட்டின் ஒற்றுமையைக் காக்க, பெரும் பகுதி மக்களால் பேசப்படும் இந்தியே ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று காங்கிரசுக்காரர்கள் கூறு வதில் வியப்பதற்கு ஏதுமில்லை. ஆனால் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் இதை வலியுறுத்துவதுதான் வியப்புக்கு உரியதாகும்.

சுதந்தர இந்தியாவில் மொழிவழிப்பட்ட மாநிலங் கள் அமைக்கப்படும் என்று நீண்டகாலமாகக் காங்கிரசுக்



இந்தித் திணிப்பை எதிர்த்து 1965ல் மாணவர்கள் நடத்தியப் போராட்டம்

கட்சி அளித்து வந்த வாக்குறுதியைப் பிரதமர் நேரு நிறைவேற்ற மறுத்தார். அதனால் தெலுங்கு மொழி பேசும் மக்களுக்குத் தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்று ஆந்திரப் பகுதியில் மாபெரும் போராட்டங்கள் நடந்தன, 1952இல் பொட்டி ஸ்ரீராமுலு என்பவர் உண்ணாநோன்பிருந்து (19.10.1952இல் 15.12.1952 வரை) இக்கோரிக்கைக்காக உயிர் துறந்தார். அதன் பிறகு ஆந்திரம் 1-10-1953இல் முதலாவது மொழிவழி மாநிலமாக அமைக்கப்பட்டது. இந்திய அளவில் 1956இல் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டன.

அந்நிலையில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் 1955 திசம்பர் 23 அன்று "மொழிவழி மாநிலங்கள் குறித்த என் எண்ணங்கள்" என்கிற தலைப்பிட்ட நீண்ட அறிக்கையைக் குறுநூல் வடிவில் வெளியிட்டார், அதில் அவர் கூறியிருப்பது :

"மொழிவழி மாநிலங்களால் ஏற்படும் நன்மைகளைக் கூறியது போலவே, அவற்றின் தீமைகளையும் எடுத்துரைக்க விரும்புகின்றேன். பிராந்திய மொழியை ஆட்சிமொழியாகக் கொண்ட மொழிவழி மாநிலம் சுதந்தரமான தேசியமாக எளிதில் உருவெடுக்கும். சுதந்தர அரசு என்பதற்கும் சுதந்தரமான தேசியம் என்பதற்கும் இடையிலான இடைவெளி மிகவும் குறைவாகும். மொழிவழி மாநிலங்கள் அமைந்தால் இப்போது நாம் பெற்றுள்ள நவீன இந்தியா என்பது மறைந்து போகும், போட்டிகளும் போர்களும் கொண்டதாக இருந்த பல அரசுகள் வரலாற்றின் மத்திய காலத்தில் இருந்தது போன்ற நிலைமை உருவாகும்.

இந்த ஆபத்தை எதிர்கொள்வது எப்படி? மொழிவழி மாநிலங்களின் ஆட்சிமொழியாக அம்மாநிலத்தின் மொழி இருக்கக்கூடாது; இந்தியே மாநிலங்களில் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்ற அரசமைப்புச் சட்டத்தில் விதி செய்ய வேண்டும், இந்த நிலை உருவாகும் வரையில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கலாம்" (அம்பேத்கர் நூல் திரட்டு (ஆங்கிலம்) முதல் தொகுதி, பக்கம் 144, 145).

**மொழிவழிப்பட்ட தேசிய இனங்களின் விடுதலை உலக அளவில் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில், இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக தனித்த தேசிய இனங்களாக வளர்ந்த மொழிவழித் தேசிய மக்களின் அடிப்படையான மொழி உரிமையை மறுக்கும் வகையில் "இந்தியே இந்தியா" என்கிற சிறைக்குள் அடைக்க முயலும் அம்பேத்கரின் கருத்தை ஏற்க இயலாது. அடுப்பங்கரையிலும் ஆங்கிலம் பேச வேண்டும் என்கிற பெரியாரின் கருத்தைப் புறக்கணிப்பது போலவே, இந்தியனாக இருக்க வேண்டுமானால் இந்தியைத் தாய்மொழியாகக் கருதவேண்டும் என்கிற அம்பேத்கரின் கருத்தையும் புறக்கணிப்போம்.**

அரசமைப்புச் சட்டத்தில் 1965 முதல் இந்தி மட்டுமே இந்தியாவில் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. அதனால் 1963இல் தமிழ்நாட்டில் இந்த விதியை மாற்றக்கோரி போராட்டங்கள் எழுந்தன. அதனால் பிரதமர் நேரு, "இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இந்தியுடன் ஆங்கிலமும் இணை ஆட்சிமொழியாகத் தொடரும்" என்று வாக்குறுதி அளித்தார், நேருவின் மறைவுக்குப்பின் லால் பகதூர் சாஸ்திரி பிரதமராக இருந்தபோது தமிழ்நாட்டில் 1965இல் மாணவர்கள் முன்னின்று மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினார்கள். தி.மு.க. இதில் முதன்மையான பங்காற்றியது. இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காவல்துறையினரின் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தனர். அதன்பிறகே நேருவும் லால்பகதூர் சாஸ்திரியும் அளித்த வாக்குறுதிகள் சட்ட வடிவம் பெற்றன.

**தமிழ்நாட்டில் நடந்தது போல் இந்தி பேசாத பிற மாநிலங்களில் இந்தி எதிர்ப்புப் போராட் டங்கள் நடக்காதது ஏன்? தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய திராவிட மொழிகள் தமிழ் மொழியிலிருந்து காலப்போக்கில் கிளைத்தவை என்றாலும், ஆரியப் பார்ப்பன ஆதிக்கத்தால் சமற்கிருத மொழியுடன் பெருமளவில் கலப்புக் குள்ளாயின. தேவாரம், நாலாயிரப்பிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்கள் சமற்கிருத ஆதிக் கத்தை எதிர்த்துத், தமிழின் தனித்து இயங்க வல்ல ஆற்றலைக் காத்தன. மேலும் தமிழர்க்கு திருவள்ளுவர் காலம் தொடங்கி, சித்தர்கள், இராமலிங்க அடிகள் என நெடிய ஆரிய எதிர்ப்பு மரபு உண்டு. நீதிக்கட்சியின் ஆட்சி, பெரியாரின் சுயமரியாதை இயக்கம் என்கிற வலிமையான "பார்ப்பனர் அல்லாதார் இயக்கம்" போன்ற இயக்கம் பிற மாநிலங்களில் இல்லை.**

இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலமும் இணை ஆட்சி மொழியாக இருக்கும் என்கிற சட்டம் இயற்றப்பட்ட போதிலும் நடுவண் அரசில் ஆட்சியில் அமர்ந்த காங்கிரசு, பா.ச.க. உள்ளிட்ட எல்லாக் கட்சி களும் இந்தி மட்டுமே அலுவல் மொழியாவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகின்றன.

**அரசமைப்புச் சட்டத்தில் இந்தி அலுவல் மொழி என்று மட்டுமே எழுதப்பட்டுள்ள போதிலும், இந்தி இந்தியாவின் தேசிய மொழி - பொது மொழி என்கிற கருத்து ஆரியப் பார்ப்பன ஆளும் வர்க்கத்தால் திட்டமிட்டுப் பரப்பப்பட்டு வருகிறது.**

இந்தி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான சூழ்ச்சி களில் ஒன்று, பிறமொழிகளைப் பேசுவோர்களையும் இந்தி மொழியைப் பேசுவோராகப் பொய்யாகக் கணக்குக் காட்டுவதாகும். அரசமைப்புச் சட்டத்தில் எட்டாவது அட்டவணையில் முதலில் 15 மொழிகள் இடம்பெற்றிருந்தன. 1991ஆம் ஆண்டில் கொங்கனி, நேப்பாளி, மணிப்பூரி ஆகிய மூன்று மொழிகளும் 2001ஆம் ஆண்டில் சந்தாலி, டோக்கிரி, போடோ, மைத்திலி ஆகிய நான்கு மொழிகளும் சேர்க்கப்பட்டன. தற்போது இப்பட்டியலில் 22 மொழிகள் உள்ளன.

முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 1872இல் எடுக்கப்பட்டது. அதன்பின் 1881 முதல் ஒவ்வொரு பத்தாவது ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது. 1961ஆம் ஆண்டு கணக்கெடுப்பு தான் முதன்முதலில் நாட்டிலுள்ள மொழிகள் கணக்கு எடுப்பையும் உள்ளடக்கியதாக இருந்தது. அப்போது 1652 தாய்மொழிகள் பேசப்படுவதாகக் கணக்கிடப் பட்டது. அதன்பின், பத்தாயிரம் பேருக்கு மேற்பட்டவர் களால் பேசப்படும் மொழிகளை மட்டுமே கணக்கில் கொள்ள வேண்டும் என்று நடுவண் அரசு முடிவு செய்தது.

இதன்படி 2011ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின், மொழிகள் - அவற்றைப் பேசுவோர் பற்றிய விவரம் ஏழு ஆண்டுகள் கழித்து அண்மையில்தான் வெளியிடப்பட்டது. அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளைப் பேசுவோர் விவரம் பகுதி-அ என்றும், இதில் இடம்பெறாத 99 மொழிகளைப் பேசுவோர் விவரம் பகுதி-ஆ என்றும் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, மொத்தம் 121 (22+99) மொழிகள் உள்ளன. இவற்றின் உட்பிரிவு மொழிகள் உட்பட 270 தாய் மொழிகள் உள்ளன. தமிழ் என்கிற தலைப்பின்கீழ் இருளம், கைக்கடை, கொரவ, எருக்கலா ஆகிய தாய்மொழிகளைப் பேசுவோர் வைக்கப்பட்டுள்ளனர். எந்தவொரு மொழியின் கீழும் அய்ந்தாறு மொழிகளுக்கு மேல் வைக்கப்படவில்லை. ஆனால் இந்தி என்கிற தலைப்பின்கீழ் 61 மொழிகள் அடைக்கப்பட்டுள்ளன. கட்டுரையின் இடநெருக்கடி கருதி இந்தி மொழிக்கு மட்டுமே உட்பிரிவுகள் இங்கே தரப்பட்டுள்ளன.

**2011ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் மொத்தம் 121.01 கோடி மக்கள் உள்ளனர். இவர்களில் இந்தி மொழி பேசுவோர், 52.83 கோடிப் பேர். அதாவது மொத்த மக்கள் தொகையில் 43.65 விழுக்காட்டினர். இதன் மூலம் இந்தியே அதிகம் பேரால் பேசப்படும் மொழி என்பதாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 32.22 கோடிப் பேர் - 26.62 விழுக்காட்டினர் மட்டுமே ஆகும்.**

இந்தி பேசுவோர்என்கிற பட்டியலில் போஜ்புரி 5.05 கோடி, இராஜஸ்தானி 2.58 கோடி, சத்தீஸ்கரி 1.62 கோடி, மகதி 1.27 கோடி, ஹர்யான் 98 இலட்சம், மார்வாரி 78 இலட்சம் பேர்களும் சேர்த்திருப்பது, திட்டமிட்ட இந்தி ஆதிக்க சூழ்ச்சியாகும். போஜ்புரி மொழி பேசும் 5 கோடி மக்கள் தங்கள் மொழியைத் தனியான மொழியாக அங்கீகரிக்க வேண்டும் என்று போராடி வருகின்றனர். போஜ்புரி மொழியில் திரைப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. போஜ்புரி மொழிக்குத் தனியான இலக்கணம், இலக்கியம் இருக்கிறது. உலகில் உள்ள நாடுகளில் பாதிக்கும் மேற்பட்டவை ஒரு கோடிக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட வை. ஆனால் இந்தியாவில் இந்தி மொழியின் ஆதிக்கத் திற்காகப் பல இலட்சம் பேர்கள் பேசும் தாய்மொழி களை அழித்திடப் பார்ப்பன ஆளும் வர்க்கம் தொடர்ந்து முயன்று வருகிறது.

**இதுவரை கண்டறியப்பட்ட அறிவியல் உண்மை களையும் இனி கண்டுபிடிக்கப்படப் போகும் அறி வியல் தொழில்நுட்பங்களையும் தன்னுள் கொண்டி**

| வ. எண். | மொழியின் பெயர் (இந்திக்கு மட்டும் அதனுடன் இணைக்கப்பட்ட தாய்மொழிகள் விவரம் தரப்பட்டுள்ளது) | அவரவர் தாய்மொழி என்றும் தாங்கள் பேசும் மொழி என்றும் பதிவு செய்தோர் மற்றும் கணக்கெடுப்பு ஆண்டு | | 2011 கணக்குப்படி மொத்த மக்கள் தொகையில் அம்மொழி பேசுவோர் விழுக்காடு |
|---|---|---|---|---|
| | | 2001 | 2011 | |
| 1. | அசாமி | 1,31,68,484 | 1,53,11,351 | 1.26 |
| 2. | பெங்காலி | 8,33,69,769 | 9,72,37,669 | 8.03 |
| 3. | போடோ | 13,50,478 | 14,82,929 | 0.12 |
| 4. | டோக்ரி | 22,82,589 | 25,96,767 | 0.21 |
| 5. | குசராத்ரி | 4,60,91,617 | 5,54,92,554 | 4.58 |
| **6.** | **இந்தி** | **42,20,48,462** | **52,83,47,193** | **43.65** |
| | 1. அவதி | 25,29,308 | 38,50,906 | |
| | 2. பகேல் | 26,65,011 | 26,79,129 | |
| | 3. பக்ரி ராஜஸ்தான் | 14,34,123 | 2,34,227 | |
| | 4. பஞ்சாரி | 12,59,821 | 15,81,271 | |
| | 5. பத்ராவஹி | 66,918 | 98,806 | |
| | 6. பஹார்மௌரி | 66,246 | 1,81,069 | |
| | 7. போஜ்புரி | 3,30,99,497 | 5,05,79,447 | 1.21 |
| | 8. பிரஜ்பாஷா | 5,74,245 | 15,56,314 | |
| | 9. பண்டேலி | 30,72,147 | 56,26,356 | 0.46 |
| | 10. சம்பீலி | 1,26,589 | 1,25,746 | |
| | 11. சதீஸ்கரி | 1,32,60,186 | 1,62,45,190 | |
| | 12. சௌராஹி | 75,552 | 61,199 | |
| | 13. துந்தாரி | 18,71,130 | 14,76,446 | |
| | 14. கர்வாலி | 22,67,314 | 24,82,089 | |
| | 15. கோஜ்ரி | 7,62,867 | 12,27,901 | |
| | 16. ஹரௌட்டி | 24,62,867 | 29,44,356 | |
| | 17. ஹர்யான்வி | 79,97,192 | 98,06,519 | 0.81 |
| | **18. இந்தி** | **25,79,19,635** | **32,22,30,097** | **26.62** |
| | 19. ஜன்சாரி | 1,14,733 | 1,36,779 | |
| | 20. காங்ரி | 11,22,843 | 11,17,342 | |
| | 21. கரிபோலி | 47,730 | 50,195 | |
| | 22. கொர்த்தா/கோட்டா | 47,25,927 | 80,38,735 | 0.66 |
| | 23. குல்வி | 1,70,770 | 1,96,295 | |
| | 24. குமௌனி | 20,03,783 | 20,81,057 | |
| | 25. குர்மாலிதார் | 4,25,927 | 3,11,175 | |
| | 26. லமானி லம்பாடி | 27,07,562 | 32,76,548 | |
| | 27. லரியா | 67,697 | 89,876 | |
| | 28. லோதி | 1,39,321 | 1,39,180 | |
| | 29. மகதி | 1,39,78,565 | 1,27,06,825 | 1.05 |
| | 30. மால்வி | 55,65,167 | 52,12,617 | 0.43 |
| | 31. மண்டேலி | 6,11,930 | 4,22,590 | |
| | 32. மார்வாரி | 79,36,183 | 78,31,749 | 0.65 |
| | 33. மேவாரி | 50,91,697 | 42,12,262 | 0.35 |
| | 34. மேவாத்தி | 6,45,291 | 8,56,643 | |
| | 35. நிமாடி | 21,48,146 | 23,09,265 | |
| | 36. நாக்பூரியா | 12,42,586 | 7,63,014 | |
| | 37. பகரி | 28,32,825 | 32,53,889 | |
| | 38. பஞ்ச்பர்கனியா | 1,93,769 | 6,44,914 | |

| வ. எண். | மொழியின் பெயர் (இந்திக்கு மட்டும் அதனுடன் இணைக்கப்பட்ட தாய்மொழிகள் விவரம் தரப்பட்டுள்ளது) | அவரவர் தாய்மொழி என்றும் தாங்கள் பேசும் மொழி என்றும் பதிவு செய்தோர் மற்றும் கணக்கெடுப்பு ஆண்டு | | 2011 கணக்குப்படி மொத்த மக்கள் தொகையில் அம்மொழி பேசுவோர் விழுக்காடு |
|---|---|---|---|---|
| | | 2001 | 2011 | |
| | 39. பங்வலி | 16,285 | 18,668 | |
| | 40. பவரி/பொவர் | 4,25,745 | 3,25,772 | |
| | 41. ராஜஸ்தானி | 1,83,55,613 | 2,58,06,344 | 2.13 |
| | 42. சடன்/சட்ரி | 20,44,776 | 43,45,677 | |
| | 43. சிமௌரி | 31,144 | 1,07,401 | |
| | 44. சோண்ட்வாரி | 59,221 | 2,29,788 | |
| | 45. சுகலி | 1,60,736 | 1,70,987 | |
| | 46. சுர்குஜியா | 14,58,533 | 17,38,256 | |
| | 47. சுர்ஜபுரி | 12,17,019 | 22,56,228 | |
| | மற்ற தாய்மொழிகள் | 1,47,77,266 | 1,67,11,170 | |
| 7. | கன்னடம் | 3,79,24,011 | 4,37,06,512 | 3.61 |
| 8. | காஷ்மீர் | 55,27,698 | 67,97,587 | 0.56 |
| 9. | கொங்கணி | 24,89,015 | 22,56,502 | 0.18 |
| 10. | மைதிலி | 1,21,79,122 | 1,35,83,464 | 1.12 |
| 11. | மலையாளம் | 3,30,66,392 | 3,48,38,819 | 2.88 |
| 12. | மணிப்புரி | 14,66,705 | 17,61,079 | 0.15 |
| 13. | மராத்தி | 7,19,36,894 | 8,30,26,680 | 6.86 |
| 14. | நேப்பாளி | 28,71,749 | 29,26,168 | 0.24 |
| 15. | ஒடியா | 3,30,17,446 | 3,75,21,324 | 3.10 |
| 16. | பஞ்சாபி | 2,91,02,477 | 3,31,24,726 | 2.74 |
| 17. | சமற்கிருதம் | 14,135 | 24,821 | 0.002 |
| 18. | சந்தாலி | 64,69,600 | 73,68,192 | 0.61 |
| 19. | சிந்தி | 25,35,485 | 27,72,264 | 0.23 |
| 20. | தமிழ் | 6,07,93,814 | 6,90,26,881 | 5.70 |
| 21. | தெலுங்கு | 7,40,02,856 | 8,11,27,740 | 6.70 |
| 22. | உருது | 5,15,36,111 | 5,07,72,631 | 4.19 |

**ருப்பதாகக் கூறப்படும் சமற்கிருத மொழியைப் பேசுவதாக 24,821 பேர் மட்டுமே கூறியுள்ளனர்.**

மக்கள் தொகையில் 5 விழுக்காட்டினராக உள்ள பார்ப்பனர்கள் தங்கள் தாய்மொழியாக சமற்கிருதத்தைக் கூறியிருந்தால் அதைப் பேசுவோர் 6 கோடிப் பேர் என்று கணக்கில் வந்திருக்கும். தாய்மொழி என்பது குழந்தையின் தாய் பேசுகிற மொழி என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி, சமற்கிருதம் உண்மையில் எவருக்கும் தாய்மொழியாக இல்லை. இந்து மத ஆதிக்கத்தை-ஆரியப் பண்பாட்டை நிலைநிறுத்துவதற்காகவே சமற்கிருத மொழி இந்திய ஆளும் வர்க்கத்தால் உயர்த்திப் பிடிக்கப்படுகிறது. சமற்கிருதம் இந்துமத வழிபாட்டு மொழியாக நீடிப்பதற்கு இந்திய அரசமைப்புச் சட்டம் அரணாக நிற்கிறது. பள்ளி முதல் கல்லூரி வரை சமற்கிருதம் கற்பிக்கப்பட வேண்டும் என்று மோடி அரசு வலியுறுத்துகிறது. அவரவர் தாய்மொழியில் கோயில்களில் இந்துக் கடவுள்களை வழிபடும் உரிமையை நிலைநாட்டுவதன் மூலம் பார்ப்பனிய-சமற்கிருத ஆதிக்கத்தை முறிடியக்க முடியும். கிறித்துவ தேவாலயங்களில் விவிலியம் அவரவர் தாய்மொழியில் படிக்கப்படுவதுபோல், மசூதிகளில் குரானும் தத்தம் தாய்மொழியில் படிக்கும் நிலை ஏற்பட வேண்டும். மதத்துக்குரிய வழிபாட்டு மொழி என்கிற பெயரால், தாய்மொழி உரிமைப் பறிப்பு இருத்தல் கூடாது.

ஆங்கிலத்தைத் தாய்மொழியாகப் பதிவு செய்திருப்பவர் எண்ணிக்கை 2,59,678 ஆகும். இவர்களில் பெரும்பாலோர் ஆங்கிலோ-இந்தியர்; மற்றவர்கள் இந்திய மேட்டுக்குடியினருள் வீட்டில் ஆங்கிலம் பேசும் சிறுபகுதியினர்.

ஆனால் இந்திய அளவில் பள்ளிக்கல்வியில் 50 விழுக்காட்டிற்கு மேலும் உயர்கல்வியில் 80 விழுக்

காடும், தொழிற்கல்வியில் 100 விழுக்காடும் ஆங்கில வழிக்கல்வி இருக்கிறது. இத்தகைய நிலை கல்வியில், பிற துறைகளில் தாய்மொழிகளின் வளர்ச்சிக்குப் பெரும் தடையாக இருக்கிறது. தாழ்த்தப்பட்ட, பழங்குடி இன, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இது உள்ளது. பன்னாட்டு - உள்நாட்டு முதலாளிய நிறுவனங்களின் தொழில் மற்றும் சேவைப் பிரிவுகளில் குறைந்த சம்பளத்தில் வேலை செய்வதற்கான இளைஞர்களை உருவாக்குவதற்காகவே ஆங்கில வழிக் கல்வி முறை உருவாக்கப்பட்டுள்ளது.


இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இந்தியே இந்தியாவின் ஆட்சி மொழி; ஆங்கிலம் இணை ஆட்சி மொழி என்கிற நிலையை மாற்ற வேண்டும். சமற்கிருதம் தவிர்த்த 21 மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகள் என்று ஆக்கப்பட வேண்டும். அந்நிலையில் மொழிவழி மாநிலங்களில் உள்ள நடுவண் அரசின் அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், முதலானவற்றில் அம்மாநில மொழியே அலுவல் மொழியாக இருத்தல் வேண்டும். இந்நிலையை எய்தும் போது, இந்தி படித்தால் இந்திய அளவில் வேலை கிடைக்கும் என்கின்ற எண்ணம் மறையும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை உண்மையான கூட்டாட்சி கொண்டதாக மாற்றியமைக்க வேண்டும். பாதுகாப்பு, அயலுறவு, நாணயம் அச்சிடல் ஆகிய அதிகாரங்கள் தவிர்த்து, மற்ற அதிகாரங்கள் அனைத்தும் மொழிவழி மாநிலங்களிடமே இருக்க வேண்டும்.

இந்தி, சமற்கிருத, ஆங்கில மொழி
ஆதிக்கத்தைத் தகர்ப்போம்!

மொழிவழித் தேசிய இனங்களின்
தன்னுரிமையை வென்றெடுப்போம்!

## நாடாளுமன்ற மக்களவை முன்னாள் தலைவர் சோம்நாத் சாட்டர்ஜி மறைவுற்றார்



சோம்நாத் சாட்டர்ஜி சிறந்த பொது வுடைமைக் கொள்கையாளர்.

சோம்நாத் சாட்டர்ஜி அசாமில் தேஜ்பூரில் 1929 இல் பிறந்தார். 89 ஆண்டுகள் வாழ்ந்து, 13.8.2018 இல் மறைந்தார்.

முதன்முதல் 1971இல் மக்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1971 முதல் 2004 வரை 10 தடவைகள் மக்கள வைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2004இல் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அவரை மக்களவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

2008இல் இடதுசாரிக் கட்சிகள் கூட்டணியிலிருந்து வெளியேறிய போது, கூட்டணி அரசு நிலை குலைந்தது. சோம்நாத் சாட்டர்ஜி மக்களவைத் தலைவர் பதவியி லிருந்து விலக வேண்டும் என்று, மார்க்சிஸ்ட் பொது வுடைமைக் கட்சி வற்புறுத்தியது. ஆனால் அவர் மக்களவைத் தலைவர் பதவியிலிருந்து விலக விரும்ப வில்லை. எனவே மார்க்சிஸ்ட் பொதுவுடைமைக் கட்சி உடனே சோம்நாத் சாட்டர்ஜியை மார்க்சிஸ்ட் பொது வுடைமைக் கட்சியிலிருந்து விலக்கியது.

அண்மைக் காலமாக உடல்நலமின்றித் தனியார் மருத்துவ மனையில் மருத்துவம் பெற்ற அவர் 13.8.2018 திங்கள் காலை 8 மணிக்கு மறைவுற்றார்.

அவருடைய உடல் கல்கத்தாவில் அரசு நிருவாகத்திலுள்ள SSKM மருத்துவமனைக்கு ஆய்வுக்கு என்று தரப்பட்டது.

**சோம்நாத் சாட்டர்ஜிக்கு, செவ்வணக்கம்!**

**- வே. ஆனைமுத்து**

## காந்தி கண்ட கனவு

சென்னை இலயோலாக் கல்லூரியில் 2018 ஆகஸ்டு 18, 19 நாள்களில் ‘‘காந்தி கண்ட கனவு’’ என்ற தலைப்பில் ஆய்வரங்கம் நடைபெற்றது. இந்த ஆய்வரங்கில் மது ஒழிப்புக்காக 2014 அக்டோபர் 2ஆம் நாள் தொடங்கி 103 நாள்கள் தமிழ்நாட்டில் நடைபயணத்தைத் தலைமை ஏற்று நடத்திய தோழர் இனாமுல் அசனும் நானும் கலந்து கொண்டோம். கிராம ராஜ்ஜியம், கதர், உழவு, அரசு, படிப்பு, சுதந்தரம், அடிப்படை உரிமைகள், சாதி, மதம், அரசமைப்புச் சட்டம் போன்றவை குறித்து காந்தியின் கருத்துகள் பற்றி தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கன்னட நாடு, மத்திய பிரதேசம் ஆகிய அய்ந்து மாநில ஆய்வர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வு நிலையாகக் கிடைக்க மார்க்சியம் ஒன்றே வழி என்றும்; சாதி பேதம், சண்டைகள் ஒழிய ஒரே சாதித் திருமணம் தடை செய்யப்பட வேண்டும்; மீறி நடந்தால் அதிக அளவு தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்றும்; கல்வி என்பது தாய்மொழியில் தரப்பட வேண்டும்; மேலை நாடுகளில், சப்பானில் தரப் படுவதைப்போல பள்ளிக் கல்வி வரையிலாவது 100/100 வீதம் அரசுப் பள்ளிக் கல்வியாகவும், இலவசமாகவும், கட்டாயக் கல்வியாகவும், ஒரே தரமானக் கல்வியாகவும், சமமான பாடத் திட்டங்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்றும் நான் கூறியது ஆய்வரங்கில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

மேலும் கருத்தரங்குக்கு வெளியில் கன்னட நாடு, ஆந்திரா, கேரளா, மத்தியப்பிரதேசம் சேர்ந்த ஆய்வாளர்களிடம் தாய்மொழிவழிக் கல்வி பற்றிய தொடர் இயக்கம், அனைத்திந்திய அளவில் மாநாடு பற்றி விளக்கமாகக் கூறியதைப் பலரும் ஏற்றது நிறைவாக இருந்தது.

- ***சி.பெரியசாமி,*** து.பொ.செ. மா.பெ.பொ.க.

# மரக் கறியும் மாமிசமும்

- இராமியா

மனிதனின் உணவுப் பழக்கம் அவன் வாழும் இடத்தின் தட்பவெப்ப நிலை, அப்பகுதியில் விளையும் தானியங்கள், காய்கறிகள், வளரும் உயிரினங்கள் மற்றும் பல காரணிகளைக் கொண்டு அமைகிறது. மனிதனின் முதல் தொழிலே வேட்டையாடுதலும் மீன் பிடித்தலும் தான். ஆகவே அவன் இயற்கையில் புலால் உணவு உண்பவனே.

ஆனால் பார்ப்பனர்களும், பார்ப்பனர்களால் மூளை வெளுப்புச் செய்யப்பட்டவர்களும் மரக்கறி உணவே மனிதனின் உடலுக்கும் உள்ளத்திற்கும் நல்லது என்று பரப்புரை செய்து கொண்டு இருக்கிறார்கள். காவிகள், மத்தியில் ஆட்சிக்கு வந்த பின், இப்பரப்பு ரைகள் அர்த்தமே இல்லாத வகை யில் சுழன்று சுழன்று வருகின்றன. எந்த ஒரு தர்க்க வழியிலும் இல்லாமல். கீறல் விழுந்த இசைத் தட்டுப் போலத் திரும்பத் திரும்பப் பரப்புரை செய்யும் பார்ப்பனர்கள், கி.பி. 8ஆம் நூற் றாண்டு வரை புலால் உணவை - அதுவும் மாட்டுக் கறியை-மிகவும் விருப்பமாக உண்ட வர்கள் தான்.

பார்ப்பனர்கள் புலால் உணவு உண்டு கொண்டு இருந்ததற்கான சான்றுகள் மனு ஸ்மிருதியிலும், புராண இதிகாசங்களிலும் நிறையவே உண்டு. அதிலும் மாட்டுக் கறி என்றால் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். வேள்வியின் போது கிடைக்கும் மாட்டுக் கறியைச் சாப்பிட வேண்டும் என்பதற்காகவே பார்ப்பனர்கள் மன்னர்களையும், செல்வந்தர்களையும் வேள்வி செய்ய வேண்டும் என்று அறிவுரை சொல்வர்கள்; ஆசை காட்டுவார்கள்; வற்புறுத்தவும் செய்வார்கள். இதனால் வேள்விகள் பெருகிய நிலையில் மாடுகளின் எண்ணிக்கை குறைந்து, வேளாண்மைக்குப் போது மான மாடுகள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டது.

புத்தர் பொது வாழ்வில் நுழைய நேரிட்டபோது இந்தச் சூழல் தான் இருந்தது. வேள்விகள் வேளாண் மைக்கு இடையூறாக இருந்ததைக் கண்ட புத்தர் வேள்விகள் செய்வதை எதிர்த்தார். பார்ப்பனர்கள் கடவுளின் பெயரைச் சொல்லி அச்சுறுத்திய பொழுது, புத்தர் கடவுளின் இருப்பையே கேள்விக்கு உள்ளாக்கி னார். புத்தரின் அறிவுக் கூர்மைக்கு முன்னும், உண்மை நிலைமைகளுக்கு முன்னும் பார்ப்பனர்களின் வறட்டு வாதங்கள் நிற்க முடியவில்லை. உடனே அவர்கள் மன்னர்களை அச்சுறுத்திப் பார்த்தார்கள். ஆனால் வேளாண்மைப் பொருளாதாரம் மன்னர்களுக்குக் கொடுத்த நெருக்கடி, பார்ப்பனர்களைத் தொலைவில் நிறுத்தி விட்டு, புத்தரையே பின்பற்ற வைத்தது. புத்தரின் வழியில் மன்னர்கள் நடந்து வேள்விகளுக்கு முதன்மை கொடுக்காத நிலையில், கால்நடைகளைக் காவு கொடுப்பதும் குறைந்து போயிற்று. மீண்டும் கால்நடைச் செல்வங்களின் எண்ணிக்கை பெருகியது. அவை வேளாண்மைக்கும் உணவுக்கும் தகுந்த விகிதத்தில் பிரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. பார்ப்பனர்களால் மாட்டுக் கறியிலும், மதுவிலும் ஆசை மிகுந்த, மற்றும் ஏமாந்த அரசர்களையும் செல்வந்தர் களையும் மட்டுமே வேள்வியின் பால் ஈர்க்க முடிந்தது.



*லக்னோ கோசாலையில் உ.பி.முதல்வர் யோகி ஆதித்திய நாத், மோடி ஆட்சியில் பசுப் பாதுகாப்பு என்ற பெயரில் இசுலாமியர்களும் தலித்துகளும் இந்து வெறியர்களால் தாக்கப்பட்டு வருகின்றனர்.*

இந்நிலையில் 8ஆம் நூற்றாண்டில் சங்கராச் சாரியார் தோன்றினார். பார்ப்பனர்களின் மாட்டுக் கறி ஆசை தான் பார்ப்பன மத வீழ்ச்சிக்குக் காரணம் என்பதை நன்கு விளங்கிக் கொண்டார். மாட்டுக் கறி ஆசையை மட்டும் தவிர்த்தால் பார்ப்பன ஆதிக்கத் தையும், சாதிய ஒடுக்கலையும் புதுப்பித்து, நிலை நிறுத்திவிடலாம் எனக் கண்டு கொண்டார். ஆனால் மாட்டுக் கறியைத் தவிர்த்தலை மட்டுமே கைக்கெண் டால் புத்தரின் வழியை ஏற்றுக் கொண்டது போல் ஆகும். ஆகவே தன்னுடைய சொந்தக் கருத்தாகத் தோன்ற வேண்டும் என்பதற்காக, இனி பார்ப்பனர்கள் புலால் உணவைத் தவிர்க்க வேண்டும் என்ற ஏற்பாட்டை

உருவாக்கினார். அதன் பின் புத்தர் ஏற்படுத்தி இருந்த, மன்னர்களின் உல்லாச வாழ்க்கைக்கு இடைஞ்சலாக இருந்த பல கட்டுப்பாடுகளைத் தளர்த்தி மன்னர்களின் சுகபோக வாழ்க்கைக்கு வழியைச் செப்பனிட்டுக் கொடுத்தார். அதன் மூலம் மன்னர்களின் பெரும் ஆதரவைப் பெற்றார். அந்த ஆதரவின் மூலம் புத்த மதத்தையும் சமண மதத்தையும் அழித்து ஒழித்து மீண்டும் வர்ணாசிரம அதர்மத்தை நிலை நாட்டினார்.

இந்த வகையில் புலால் உணவைக் கைவிட்ட பார்ப் பனர்கள், புலால் உணவை உண்பது பண்பாட்டிற்குப் புறம்பான செயல் என்று பரப்புரை செய்யத் தெடங்கி னார்கள். காலப் போக்கில் அறிவியல் பெரும் பாய்ச் சலில் வளர்ந்தது. எந்தெந்த உணவில் என்னென்ன சத்துகள் உள்ளன; என்னென்ன அளவில் எவ்வெ வற்றை உண்டால் உடல் நலம் நன்றாக இருக்கும் என்றெல்லாம் அறிவியல் தெளிவாகக் கற்பித்தது. அதில் புலால் உணவு கூடாது என்று கற்பிக்கப்படவே இல்லை. சொல்லப் போனால் சில நேய்களுக்குப் புலால் உணவே சிறந்த மருந்தாக இருப்பதையும் அறிவியல் வெளிச்சம் போட்டுக் காட்டியது. எடுத்துக்காட்டாக இரத்த சோகைக்குக் கல்லீரல் அருமருந்தாக இருப்பதை மருத்து வர்களும், உணவியல் நிபுணர்களும் எடுத்துரைத்தனர்.

மக்கள் அறிவியலின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதன் வழியில் பின் பற்றத் தொடங்கிய பின் பார்ப்ப னர்கள் தாங்கள் எதைச் சொல்ல விரும்புகிறார்களோ அதை அறிவியல் சொல்வதாகப் புரளி கிளப்புவதைத் தங்கள் வழக்கமாகக் கொண்டார்கள். அந்த வழியில் புலால் உணவு சாப்பிடுவதால் மூளை சுறுசுறுப்பை இழந்து அறிவுத் திறன் குறைகிறது என்று அறிவியல் கூறுவதாக ஒரு புரளியைக் கிளப்பினார்கள்; இன்றும் அதையே செய்து கொண்டும் இருக்கிறார்கள். இதன் மூலம் தாங்கள் அயோக்கியத்தனமாகப் பறித்து வைத்துக் கொண்டு இருக்கும் உயர் நிலை வேலைகள் யாவும் புலாலை மறுப்பதால் விளைந்துள்ள அறிவுத் திறனால் அடைந்தவை என்று நம்ப வைக்க முயல் கிறார்கள். மேலும் புலால் உண்பதால் தீய குணங் களும் முரட்டுத்தனமும் வளர்கின்றன என்று இன் னொரு புரளியைக் கிளப்புகிறார்கள்; இன்றும் கிளப்பிக் கொண்டும் இருக்கிறார்கள். இதன் மூலம் தாங்கள் "தர்ம சீலர்கள்" என்றும்; உழைக்கும் மக்கள் தீயவர்கள், முரடர்கள் என்றும் மக்களை நம்ப வைக்க முயல்கிறார்கள். அறிவியல் ஆய்வுகள் அப்படிச் சொல்வதாக முகநூலிலும் புலனத்திலும் பதிவுகள் செய்து அவாள் செய்யும் அட்டகாசங்கள் அளவுக்கு மீறியே உள்ளன. அதுவும், காவிகள், மத்திய அரசைக் கைப்பற்றிய பின் இந்த அட்டகாசங்கள் தாங்க முடியாத அளவில் வளர்ந்து கொண்டே உள்ளன.

உண்மையான அறிவியல் அறிவு கொண்டவர்கள் இதற்கு எதிரான செய்திகளைப் பதிவு செய்யத் தான் செய்கிறார்கள். புலால் உணவு அறிவுத் திறனைக் குறைக்கிறது என்றால், உலகில் உள்ள அறிவியல் அறிஞர்கள் கிட்டத்தட்ட அனைவருமே புலால் உணவு உண்பவர்கள் தான் என்பதைச் சுட்டிக் காட்டி, அவாளுடைய கருத்தை மறுக்கின்றனர். மேலும் புலால் உணவு தீய, முரட்டுக் குணத்தை வளர்க்கிறது என்றும், மரக் கறி உணவு நல்ல குணத்தை வளர்க் கிறது என்றும் அவாள் கிளப்பி விடும் புரளிக்கு இராம கிருஷ்ண பரம ஹம்சர், விவேகானந்தர் ஆகியோ ரையும், ஹிட்லரையும் சுட்டிக் காட்டுகின்றனர். பொதுவாக மக்களாலும், குறிப்பாகப் பார்ப்பனர்களாலும் சாதுக்கள் என்றும், மகான்கள் என்றும் போற்றப்படும் இராமகிருஷ்ணரும், விவேகானந்தரும் புலால் உணவு உண்டவர்கள். உலக மக்களை வாட்டி வதைத்த ஹிட்லரின் உணவு புலாலை முற்றிலும் நீக்கிய மரக் கறி உணவு மட்டுமே. இச்செய்திகளை அவாளின் புரளிக்கு எதிர்வினையாகப் பதிவிட்டால், அந்தப் பதிவை அப்படியே விட்டு விட்டு (சில சமயங்களில் அதை நீக்கவும் செய்து விடுகின்றனர்), அதே புரளியைப் புதிதாக மீண்டும் பதிவிடுகின்றனர். இது போன்ற புரளிகளைக் கிளப்பி விடுவதற்கு என்றே பல குழுக் களை அவாள் உருவாக்கி வைத்து உள்ளனர். அது மட்டும் அல்ல; அவாளில் உள்ள மருத்துவர்களும், உணவியல் நிபுணர்களும் துணிந்து இப்புரளியைப் பரப்புகிறார்கள் மருத்துவர்களும் உணவியல் நிபுணர் களும் கூறுகையில் அவர்களுக்கு எதிராக வாதம் செய்வது எப்படி? சில விவரம் தெரிந்தவர்கள் எதிர் வினா எழுப்பினால் இந்த மருத்துவர்களும், உண வியல் நிபுணர்களும் மவுனமாகி விடுகிறார்கள்.

**இதில் அவாளுடைய நோக்கம் மக்களிடையே புலால் உணவுப் பழக்கத்தை நிறுத்துவதோ, மரக்கறி உணவுப் பழக்கத்தை வளர்ப்பதோ அல்ல. மரக்கறி உணவைச் சாப்பிடும் பார்ப்ப னர்கள் நல்லவர்கள், அறிவாளிகள்; புலால் உணவைச் சாப்பிடும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் முரடர்கள், அறிவுத் திறன் குறைந்தவர்கள் என்ற கருத்தியலை விதைத்து ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை மனத்தளவில் ஒடுக்கி வைத்து, பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிராக அணி திரளாமல் தடுப்பது தான் அவாளுடைய உண்மையான நேக்கம்.**

**ஆகவே ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே! பார்ப்பனர்களின் மன ரீதியிலான தாக்குதலுக்குப் பலியாகி விடாதீர்கள். வரலாறு முழுக்க அவாளின் ஒடுக்குமுறைகளும், திறமைக் குறைவும், ஒடுக் கப்பட்ட வகுப்பு மக்களின் மனித நேயமும், அறிவுக் கூர்மையுமே பதிவாகி உள்ளன. ஆகவே அவாளின் மன ரீதியிலான தாக்குதலைத் துணிச்சலுடன் எதிர் கொள்ளுங்கள். அவாள் கிளப்பி விடும் புரளிக்கு நேரடியான எதிர்வினை புரியுங்கள்.**

# செய்யப் பெற வேண்டிய சில அடித்தள வேலைகள்

- பொழிலன்

ஒருங்கிணைப்பாளர், தமிழக மக்கள் முன்னணி

ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள நாடுகளின் மக்களிடையே நிலவும் அரசியல், பண்பாடு, வாழ்வியல், வரலாற்றுக் கூறுகளில் உள்ள வேறுபாடுகளை விட,

இந்தியாவுக்குள் அடக்கப்பட்டுள்ள மொழித் தேசிய இனங்களிடையே நிலவும் அரசியல், பண்பாட்டு, வாழ்வியல், வரலாற்றுக் கூறுகளில் உள்ள வேறுபாடுகள் மிகுதி.



காசுமீரிகளுக்கும் நாகாலாந்து மக்களுக்கும், மிசோவினருக்கும் பஞ்சாபிகளுக்கும், வங்காளிகளுக்கும் கருநாடக மக்களுக்கும், பீகாரிகளுக்கும் மலையாளி களுக்கும், இராசசுத்தானியர்களுக்கும் தமிழர்களுக்கும் மிகப் பெரும் அளவில் வேறுபட்ட வாழ்க்கை முறைகள், வரலாற்று வழி நிலைகள், பண்பாடுகள், உணவுப் பழக்கவழக்கங்களே உள்ளன.

இவர்கள் அனைவரையும் தன் ஆட்சி அதிகாரத்தால் அடக்கி அன்றைக்குப் பிரிட்டிசு இந்தியாவை உருவாக்கியது இங்கிலாந்து வல்லரசு.

பிரிட்டிசு வல்லாட்சியை எதிர்த்து அன்றைய அளவிலான மொழித் தேசிய எழுச்சிகள் பெருமளவில் நடந்தன. அவற்றையெல்லாம் இந்தியா என்கிற அளவில் ஒருங்கிணைக்க இந்தியக் காங்கிரசுக் கட்சியைப் பிரிட்டிசு சார்புடையவர்களே உருவாக்கினர். அதைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியா என்பது ஒரே சமூக வாழ்வியல் கொண்டது போலவும், வரலாறு கொண்டது போலவும், சமய நடைமுறைகளைக் கொண்டது போலவும் ஒரு புனைவு உருவாக்கத்தை ஆரியப் பார்ப்பனியக் கருத்தாளர்கள் உருவாக்கினர்.

இந்து மதம் என்கிற பெயரில் வைதிகப் பார்ப்பனியத்தைக் கொள்கைகளாகவும், புராண சாத்திரங்களைக் கோட்பாடுகளாகவும், வருணாச்சிரம ஆளுமைகளை நடைமுறைகளாகவும் உருவாக்கிக்கொண்டே இந்து மதத்தைப் பரப்பினர். இந்து மதத்தில் அதற்கு முற்றிலும் நேர்மாறான கருத்துகளுடைய, நடைமுறைகளையுடைய சிறுசிறு சமயங்களை எல்லாம் இணைத்துத் தன்வயப்படுத்திக் கொண்டனர்.

இந்தியம் என்பது இந்துப்பார்ப்பனிய வெறியுடைய அரசியல், பொருளியல் அதிகாரத்தைக் கொண்டதாகவும், பார்ப்பனியம் என்பது இந்திய வெறிக்கு அடங்கிய குமுக, கலை, பண்பாட்டு அதிகாரங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது.

இந்தியம், பார்ப்பனியம் ஆகிய இரண்டும் ஒருங்கிணைந்தே அவற்றின் அதிகாரங்களால் அடக்கப்பட்டுள்ள பல்வேறு மொழித் தேசிய இனங்களின் அடையாளங்களை, உரிமைகளையெல்லாம் நசுக்கி அடிமைப்படுத்தி வைத்துள்ளன.

அதற்காக, இந்துப் பார்ப்பனிய இயக்கங்கள் தங்களை வலுப்படுத்திக் கொள்ள மேற்கொண்ட முயற்சிகளைச் சற்றுக் கவனத்தோடு ஆய்வு செய்வது தேவையுடையது.

**இந்துப் பார்ப்பனிய இயக்கங்கள் என்று குறிப்பிடப்படுகிறபோது, ஆர்எஸ்எஸ் இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட 1925ஆம் ஆண்டிலிருந்து மட்டுமல்லாமல், அதற்கு முன்பிருந்தே அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் குறித்து கவனிக்க வேண்டும்.**

அவற்றையெல்லாம் ஏன் கவனிக்கவும், ஆய்வு செய்யவும் வேண்டும் என்பதை அரசியலாக முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

வல்லரசியங்களையும், இந்தியப் பார்ப்பனியத்தையும் வீழ்த்துவது என்பது அவற்றின் அரசியல், பொருளியல் அதிகாரச் சூறையாடல்கள், சுரண்டல்களையெல்லாம் தடுப்பதும், நிறுத்துவதும் என்பதோடு மட்டுமல்லாமல் போராடும் உழைக்கும் மக்களின் அதிகாரங்களை நிறுவுவதுமாகும்.

**அது ஓர் எளிய வேலை இல்லை.**

**மிகப்பெரும் கடின முயற்சி.**

வெகுமக்களை அவரவர் வகுப்பு அணிகளாக விரிந்த அளவில் திரட்டிப் போராடுகிற பெரும் முயற்சி.

வெறுமனே மக்களோடு மட்டுமன்றி மக்கள் திரளைப் பாதுகாக்கும் அரணாகப் படைதிரட்டிக் காக்கிற, போராடுகிற முயற்சி...

அப்படியான நீண்ட காலத் திட்ட முயற்சிக்கு அரசியல் பொருளியல் மட்டுமே அதிகார நடுவங்களாகவும், போராடுவோர் சென்றடைய வேண்டிய இலக்காகவும் இருந்திட இயலாது.

தமிழ்க் குமுகச் சமன்மை, கலை, பண்பாடு, வாழ்வியல் வரலாற்றியல் முயற்சிகளையெல்லாம் மீட்டெடுக்கவும் அவற்றை இம்மண்ணின் மக்களிடையே

காலூன்றி நிலைப்படுத்தவுமான வேலைகளையும் விரிவாகச் செய்தல் வேண்டும்.

அவ்வாறு தமிழிய வரலாற்றை, கல்வி உள்ளிட்ட சில முயற்சிகளை, வாழ்வியலை, பண்பாட்டுக் கூறுகளை மீட்டெடுப்பதற்கென நாம் செய்ய வேண்டிய முயற்சிகள் நிறைய உள்ளன.

அத்தகைய முயற்சிகளைச் சாதி ஒழிப்பு நோக்க முடைய இயக்கங்களும், மொழிகாக்கும் இயக்கங்களும், அவ்வளவு ஏன் வகுப்பு ஒழிப்பு நோக்கமுடைய பொதுவுடைமைக் கட்சிகளும்கூட பெருமளவில் செய்திட வில்லை.

மாற்று அரசியலைப் பேசிப் பெருமளவில் வலுவாகத் தம்மை வளர்த்துக் கொண்டிருக்கிற அம்பேத்கரிய, பெரியாரிய கட்சிகள் சிலவும்கூட, குமுக விடுதலை அரசியலைப் பயிற்சிக்குள்ளாக்குகிற வகையில் கல்விக் கூடங்களையோ, அரசியல் பயிற்சிப் பட்டறைகளையோ அமைத்திடவில்லை.

மாற்று அரசியலை எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறோம் என்பதை அடையாளப்படுத்திக் காட்டுகிற தன்மையில் அரசியலாகவும், பொருளியலாகவும், சமூக, கலை, பண்பாட்டின் அடிப்படைகளிலும் அடித்தள நிறுவனங்களை அமைத்துக் காட்டவில்லை.

மாற்றுப் பண்பாட்டின் விழா நிகழ்ச்சிகள் எத்தகையன என்பதை மக்களிடம் அடையாளப்படுத்தி, மக்களே அத்தகைய பண்பாட்டு நிகழ்வுகளை முன்னெடுக்கும் படியாகப் பழக்கவில்லை.

மாற்றுக் கல்விமுறைகள், மாற்று வணிக, தொழில் நிறுவனங்கள் எத்தகையன? எந்தெந்த வடிவங்களி லானவை? எப்படியாக அவை நிலைநிறுத்தப்படும்? என்பதை அடையாளப்படுத்துகிற திட்ட ச் செயல்பாடுகள் புரட்சி நோக்குடையவர்களிடம் நடைமுறையில் இல்லை.

புரட்சிக்குப் பிறகு, விடுதலைக்குப் பிறகு அரசைக் கைப்பற்றித் திடுமென மந்திரத்தில் மாங்காயை விழ வைப்பது போன்று, சட்டங்களைப் போட்டு எல்லா வற்றையும் மாற்றி விட முடியும் என்று கருதுவது கற்பனையானது.

புரட்சியையும் புரட்சி அரசியலையும் பழகும் புரட்சி யாளர்கள், புரட்சியால் அல்லது விடுதலையால் பெறப் படும் அரசதிகாரத்தினைக் கொண்டு, பன்னாட்டு நிறுவனத் தொழிலகங்களை மீட்டெடுத்துப் புதிய குடியாட்சி அரசியலுக்கு உகந்த முறையில் எப்படி நடத்துவார்கள்? நிர்வகிப்பார்கள் என்கிற திறன் அறியாமல் எப்படிச் செயல்படுத்த முடியும்?

அரசியல், பொருளியல் அதிகாரத்தை நிறுவுகிற பயிற்சி எப்படிப் புரட்சிக்கு அல்லது விடுதலைக்கு முன்னரே படிப்படியாகத் தேவையானதோ, அப்படியே வாழ்வியல், பண்பாட்டியல், சாதி ஒழிப்பு உள்ளிட்ட குமுக ஒழுங் கமைப்புகளுக்கான பயிற்சிகளும் மிகவும் அடிப்படை யானவை.

புரட்சிக்கு அல்லது விடுதலைப் போராட்டத்திற்கு அணியப்படுத்துகிற மக்கள் வகுப்பு அணிகளை அரசிய லோடும் பண்பாட்டோடும் களம் அமைத்துப் பயிற்சி கொடுக்க வேண்டுமா? இல்லையா?

நம்மை அடிமைப்படுத்தியிருக்கிற அதிகார வகுப்பு களோ நிறுவனப்படுத்தி அவர்களுக்கான வகுப்பு அதிகாரங்களை, அரசியலை, பண்பாடுகளை நிலைப் படுத்தி வெகுமக்களைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் அடக்கிவைத்திடப் பயிற்றுவிக்கின்றன.

இன்றைக்குள்ள அவர்களின் ஆட்சி அதிகாரத்தை நிறுவுவதற்கு முன்பாகவே அத்தகைய வேலைகளை அவர்கள் தொடங்கி விட்டனர்.

**1925-இல் தொடங்கப்பட்ட இந்தியப் பார்ப்பனி யக் கல்வி நிறுவனமான ஆர்எஸ்எஸின் பொறுப் பில் இதுவரை 20,000 பள்ளிக்கூடங்கள் செயல் படுகின்றன. 5 கோடியே 40 இலக்கம் மாணவர்கள் அவற்றில் படிக்கின்றனர். (ஆர் எஸ் எஸ் இல் உள்ள நேரடியான உறுப்பினர் எண்ணிக்கை என்பது தனி.)**

**உலகம் முழுக்க 801 இராமக்கிருட்டிண மடங்கள் செயல்படுகின்றன. அவற்றுக்குச் சொந்தமாய் 748 கல்விக்கூடங்கள், கல்லூரிகள், தொழிநுட்பக் கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், மாணவர் விடுதிகள், ஏதிலியர் விடுதிகள்...**

இவையன்றி திலகரின் பெயரால், கோல்வல்கரின் பெயரால், சங்கராச்சாரியின் பெயரால் உருவாக்கப் பட்டுள்ள நூற்றுக்கணக்கான கல்வி நிறுவனங்கள்...

இந்திய அரசதிகாரத்தின் கீழ்ச் செயல்படுகிற நவோதயா, கேந்திரிய வித்யாலயா போன்ற பல்லாயிரக்கணக்கான கல்வி நிறுவனங்களும் அவற்றில் படிக்கின்ற பல இலக்கக்கணக்கான மாணவர்களும், மாணவர்களின் எண்ணிக்கையும் தனி...

ஆக, இவற்றின் மூலமாகவெல்லாம் பயிற்றுவிக் கப்படும் பிள்ளைகளுக்கு எத்தகைய அரசியல், பண்பாடு ஊன்றப்பட்டிருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்...

வகுப்பறைகளில் 'உள்ளேன் ஐயா என்பதற்கு மாறாக 'ஜெய் ஹிந்த்' என்று சொல்ல வேண்டும் என ஆணையிடப்பட்டிருக்கும் நிலையில், மாணவர்களின் மூளைகள் அவர்களுக்குச் சார்பாய் எந்த அளவிற்குச் சலவை செய்யப் பட்டிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

**அப்படி, இலக்கம் கூட வேண்டாம், எத்தனை ஆயிரம் பிள்ளைகளை உருவாக்கிடும் நிறுவனங் களை மார்க்சிய வழிப்பட்ட, பெரியாரிய, அம்பேத் கரிய வழிப்பட்ட, அவ்வளவு ஏன் தமிழிய வழிப்பட்ட இயக்கங்கள், கட்சிகள் நிறுவி உருவாக்கி யிருக்கின்றன?**

அதேபோல் பன்னாட்டுத் தொழில்களை, வணிகத்தை; இந்தியத் தொழில்களை, வணிகத்தைப் புறக்கணிக்க வேண்டுமாய்ப் போராடுகிற மேற்படி புரட்சி, விடுதலை நோக்குடைய இயக்கங்கள், கட்சிகள் மாற்றுப் பொருளியலுக்கு உரிய தொழில் அல்லது வணிக நிறுவனங்களை எங்காவது நிறுவி உள்ளனவா?

இன்றைக்கு அரசு சார்பில்லாத பெரும்பான்மைத் தனியார் நிறுவனங்கள் யாவும், இந்தியப் பார்ப்பனியத்தின் கோட்பாட்டுப் பின்புலம் உடையன என்பதை அறிய வேண்டும்.

மாற்றுப் பண்பாட்டுக்குரிய விழா என்று ஒரு மக்கள் விழாவையாவது மேற்படிக் குமுக மாற்ற புரட்சி அல்லது மக்கள் விடுதலை நோக்குடைய இயக்கங்கள் அடையாளப்படுத்தியிருக்கின்றனவா? அதை வெகு மக்களிடையே பரப்பி மக்கள் விழாவாக முன்னெடுக்க வைக்கத் திட்டமிட்டிருக்கின்றனவா?

இன்றைக்கு வல்லரசியத்தை விரட்ட வேண்டுமான, துணிவோடும், இந்தியப் பார்ப்பனியத்தை வீழ்த்த வேண்டுமான நோக்கோடும் ஒரு பரப்பல் ஊடகம் (தொலைக்காட்சியோ வானொலியோ செய்தித்தாளோ அவ்வளவு ஏன் கிழமை இதழோ)மக்கள் தளத்தில் உண்டா?

**ஆக, அவை எவையுமே இல்லாமல் அவற்றை உருவாக்குவதற்கான திட்டம் பெரிய அளவில் இல்லாமல் எப்படி இந்தியப் பார்ப்பனியத்தை, வல்லரசியத்தை வீழ்த்துவதான அரசியல் கோட்பாடுகள் முன்னுக்கு நகர முடியும்? வலுப்பட முடியும்? எண்ணிப்பார்க்க வேண்டும்...**

ஆக, இன்றைக்கு அரசியல் பொருளியல் தளத்தில், தமிழ்த்தேச விடுதலைக் குடியரசை நிறுவுவதற்கான பெரும் பணிகள் நீண்ட காலத்திட்டத்திற்குரியதாகச் செய்ய வேண்டி இருக்க, இன்றைக்குக் கருத்தளவில் தமிழ்த் தேசக் கல்வி, கலை, பண்பாட்டுக்குரிய அடித்தள அமைப்புகளைப் பல்லாயிரக்கணக்கில் நிறுவிச் செயல் படுத்தியாக வேண்டியுள்ளது.

சான்றுக்கு, ஒன்றைச் சொல்லியாக வேண்டும்.

கன்னியாகுமரி தமிழ் நாட்டின் மிகப்பெரும் செழிப்பான மாவட்டமும் சுற்றுலாத் தலங்களைக் கொண்டதுமாகும்.

அந்த மாவட்டத்தின் பெரும்பான்மைப் பகுதியில் உள்ள கோயில்களை நடுவப்படுத்தி ஆர்எஸ்எஸ் இயங்கத் தொடங்கியதோடு, குமரிக் கடலில் இருந்த பெரும் பாறையை அன்றைய ஆட்சியாளர்களை இணங்க வைத்துத் தனக்காக ஆக்கிக் கொண்டது.

விவேகானந்தர் மண்டபத்தை உருவாக்கியது மட்டுமன்றி விவேகானந்தபுரம் எனப் பெரிய நிலப்பரப்பையே வளைத்துப் போட்டுத் தங்கள் ஆளுகைக்குள் கொண்டு வந்துவிட்டது.

சங்கரமடத்திற்கு, விவேகானந்தர்- இராமக்கிருட்டிண மடங்களுக்குச் சொந்தமாய் அந்த ஊரில் பாதிக்கும் மேலான இடங்கள் மடக்கிப் போடப்பட்டு இந்தியப் பார்ப்பனியக் கருத்துடையவர்கள் அப்பகுதி மக்களை அவர்கள் கருத்துகளுக்கு மாற்றி வைத்திருக்கின்றனர்.

அம் மாவட்டத்தில் உள்ள கிறித்தவர்களும் வழிபாட்டு நிலையில்தான் மாறுபாடுடையவர்களே யல்லாமல் இந்தியப் பார்ப்பனிய அதிகார அரசோடு இணங்கிப் போகக்கூடியவர்களாகவே உள்ளனர்.

எனவே, அவர்களுக்கெல்லாம் தமிழ், தமிழினம், தமிழ் நாட்டுரிமை, பன்னாட்டு நிறுவன எதிர்ப்பு, இந்திய அரசெதிர்ப்பு பற்றியெல்லாம் பெரிய அளவில் தெரியாது, உடன்பாடும் கிடையாது.

தமிழ்த்தேசமுதலாளி, தொழிலாளி, உழவர்கள், மீனவர்களின் காப்புணர்வு எல்லாம் தெரியாது.

இந்தியப் பார்ப்பனியத்திடமும், அந்த இந்தியப் பார்ப்பனியம் கூட்டு வைத்திருக்கிற பன்னாட்டு முதலாளி வலுப்படுத்தத்திற்காகவுமே அவர்களின் சிந்தனைகளும் செயல்களும் உள்ளன.

அவர்களுக்கான பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், தங்கு விடுதிகள், உணவு விடுதிகள், கோயில்கள் விழாக்கள், சிறுதொழில் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், நூலகங்கள், பூங்காக்கள், முதியோர் இல்லங்கள், ஏதிலியர் இல்லங்கள், நிகழ்ச்சி அரங்குகள் எனப் பல வகையான நிறுவனங்களெல்லாம் அவர்களின் கொள்கை பரப்புக் களங்களாகச் செயல்படுத்தப் படுகின்றன. ஆயிரக்கணக்கினர் ஒருங்கிணைக்கப்பட்டு அப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

அரசு நிறுவனங்கள் பல மேற்படி பார்ப்பனிய நிறுவனங்களுக்குத் துணைப் பணி நிறுவனங்கள் போலவே செயல்படுகின்றன.

மிகு உயரமாய் நிறுவப்பட்டிருக்கும் திருவள்ளுவர் சிலையின் இருப்பையும், அது நிறுவப்பட்ட நோக்கத்தையும் மறைத்து விழுங்கிவிட்டது விவேகானந்தர் மண்டபம். பிற தேசங்களில், நாடுகளிலிருந்து வருவோர்க்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிலிருந்து வருவோர்க்கே, இது யாருடைய சிலை, அவர் யார் என்ன நோக்கத்தில் இங்கு நிறுவப்பட்டுள்ளது என்பவற்றைத் தெரிவிப்பதற்கு நிறுவனம் இல்லை.

அரசின் பூம்புகார் படகு நிறுவனம் கூட ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லித் திருவள்ளுவர் சிலைக்குப் படகு போக்குவரத்தை நடத்துவதில்லை.

ஆக, தமிழ்நாட்டின்-தமிழர்களின் பிறந்தகம் என்று பெருமை கொள்ளும் குமரிக்கண்டத்தின் எச்சமாக இருக்கும் கன்னியாகுமரியைக் கூட நம் தமிழ்த்தேச வரலாற்றுச் சுவடாய்ப் பறைசாற்ற இயலாமல், நம் குமுக, கலை, பண்பாட்டு, வரலாற்று நிகழ்வுகளை வெளிப்

படுத்த இயலாமல் அதற்கான திட்டம் இல்லாமல் முடங்கிக் கிடக்கிறோம்.

இந்த இடத்தில் நாம் இன்னொன்றையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதாவது ஆர்எஸ்எஸின் கோட்பாடு என்பது மிக மிகச் சிறுபான்மை எண்ணிக்கையினரான ஆரியப் பார்ப்பன அதிகார வகுப்பினரின் அதிகாரவெறிக் கோட்பாடு.

அரசியல் வழி பிரித்தாளும் சூழ்ச்சியைக் கொண்டும், அமைப்பியல் வழி அனைவரையும் தன் கோட்பாட்டின் கீழ் அடக்கி ஒருங்கிணைக்கிற நடைமுறையைக் கொண்டும் அது என்ன வகையிலெல்லாம் திட்டமிட்டு இயங்கி வருகிறது என்பதை உற்றுநோக்கியாக வேண்டும்.

காந்தியைச் சுட்டுக்கொன்ற போதும், இந்திரா அரசின் நெருக்கடி கால அரசியல் சூழலிலும் ஆர்எஸ்எஸ் இரண்டு முறை தடை செய்யப்பட்டது. தடைசெய்யப்பட்ட காலங்களில் தன் இயக்கத்தைத் தகவமைத்துக்கொள்ள மேற்கொண்ட முயற்சியையும், இஸ்லாமியர், தாழ்த்தப் பட்டோர் எனப் பார்ப்பனியத்தை எதிர்த்திடுவோரையும் பெருவாரியாக எப்படி ஆர்எஸ்எஸ் க்குள் இணைத்து அடக்கி வைத்து இயங்க வைப்பது என்கிற அவர்களின் முயற்சியையும் கூர்ந்து கவனிக்க வேண்டும்

**ஏதோ நிறுவனங்களை அமைத்தல், இயக்க எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ளுதல் என்பதோடு அல்லாமல் படைத்துறை, நீதித்துறை உள்ளிட்ட அரசின், அதிகார அமைப்பின் ஆட்சி அரங்குகள் அனைத்திற்குள்ளும் அவர்கள் எப்படி ஊடுருவி அந்த அரங்குகளை அரசியலாகவும், அதிகார நிலையிலும் தங்கள் கட்டுக்குள் வைத் திருக்கிறார்கள் என்று கவனித்தாக வேண்டும்**

**ஆனால், இங்கு தமிழ்நாட்டில் தேர்தல் அரசியல் வழி ஆட்சியைப் பிடித்து அனைத்தையும் மாற்றி விடுவதாய் நுழைந்த அரசியல் கட்சிகள் 1916இல் நீதி கட்சி தொடங்கி, பின்னர் திமுகவில் இருந்து நாம் தமிழர் வரை எந்த அதிகாரத்தை நிறுவி னார்கள், நிறுவத் திட்டமிட்டு நடத்தினார்கள்.**

**இழந்தவைதாம் அதிகம் என்பதை கணக்கிட்டு ஆய்வோர் அறிய முடியும்.**

ஆக, இப்படியாக நம்மை முடக்கி இருக்கும் நிலையில் ஆரியப் பார்ப்பனிய அதிகாரம் தலைவிரித்தாடாமல் என்ன செய்யும்? இந்தியப் பார்ப்பனியம் பாசிசமாய்த் திமிர் பிடித்ததல்லாமல் வேறு எப்படி இயங்கும்?

ஆக, இந்நிலையில் பார்ப்பனிய பாசிசத்தை வீழ்த்துவதும், தமிழர்கள் உள்ளிட்ட மொழித் தேசிய இன மக்களின் உரிமை எழுச்சிக்குப் பாடாற்றுவதும் மிக முகாமையான ஆழ்ந்த விரிந்த முயற்சிகள்.

அவ்வகை எழுச்சிகளுக்கு முயற்சிகளுக்கு அடித்தள மாய் வலுப்படுத்திச் செயலாற்ற வேண்டிய சில முகமையான பணிகளே கீழே பட்டியலிடப்பட்டிருக் கின்றன…

1. மொழி வழியாக நம் பெயர்கள், நிறுவனப் பெயர்கள், சாலை, ஊர்ப் பெயர்களில் உள்ள சமஸ்கிருதம் உள்ளிட்ட பிற அதிகார மொழிகளின் பெயர்களை நீக்கிவிட்டுப் பகுத்தறிவுக்கு உகந்த வகையிலும், தமிழிலுமே பெயர்களைச் சூட்டிக் கொள்ளுதல் வேண்டும்.

   (அப்படியாகச் செய்வது ஏதோ தமிழ்ப்படுத்தம் என்றாக மட்டுமே கருத வேண்டாம். அது சமஸ்கிருதத் திணிப்பை எதிர்த்தது என்பது மட்டுமல்ல, இந்திய மயமாக்கத்தையும் எதிர்த்தது. விக்னேஷ் என்பதும், வித்யாலயா என்பதும் சமஸ்கிருதப் பெயர்கள் என்பது மட்டுமல்ல, அவை இந்தியப் பெயர்கள், இந்தியா ஆதிக்கத்தால் மொழித் தேசங்களின் மீது திணிக் கப்பட்ட பெயர்கள். விக்னேஷ் என்று இஸ்லாமியர் தவிர கிறித்தவர் தவிர சீக்கியர்தவிர இந்திய ஆட்சிக்குட்பட்ட எல்லாரும் பெயர் வைத்திருக்க முடியும். ஆனால் குறிஞ்சி, முல்லை, நம்பி – என்றெல் லாம் தமிழர்கள் மட்டுமே பெயர் சூட்டி இருக்க முடியும்)

2. குடும்பம், குலம், சமயம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில், விழாக்களில் உள்ள சமஸ்கிருதமயமாக்கத்தை, மூட நம்பிக்கைக்கு உட்பட்ட நம்பிக்கைகளை நீக்கிவிட்டுப் பகுத்தறிவோடான விழாக்களையே முன்னெடுக்க வேண்டும்.

   (எல்லா மூடநம்பிக்கை விழாக்களும் இந்திய அளவு பரப்பப்படுகின்றன. ஒவ்வொரு மொழி தேசியத் திற்கான பகுத்தறிவுக்குட்பட்ட விழாக்களையே, மொழித் தேசிய விழாவாக ஊன்றி வளர்க்கவும் ஒருங்கிணைக்கவும் முடியும்)

3. சாதி, சமய மறுப்புடையவர்கள் திருமணப் பதிவு களைச் சாதி மறுப்புத் திருமணம் எனப் பதிவு செய்வ தோடு, அவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகளுக்குச் சாதியற்றவர், சமயமற்றவர் என்றே பதிவுகளைச் செய்திடல் வேண்டும். தமிழக அளவில் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குத் தனியாகச் சிறப்புச் செய்வதோடு, அவர்களுக்கெனத் தனி இட ஒதுக்கீடு அளித்திடல் வேண்டும். அரசுப் பதிவுகளில் சாதியற்றவர், சமயமற்றவர் எனத் தனியே குறிப்பிடும் வகையில் இடம் ஒதுக்கிட வேண்டும்.

4. சமயச் சார்பு இல்லாத, சாதியச் தொடர்பில்லாத மூட நம்பிக்கையற்ற விழாக்களைப் புதிது புதிதாக உரு வாக்கி நடத்துதல் வேண்டும். அவர்களைப் பெண் களே முன்னெடுத்து நடத்தும்படி அமைத்தால் சிறப்பு.

5. கோயில்கள் அனைத்திலும் பூசைகளையும், குட முழுக்கு உள்ளிட்ட நிகழ்வுகளையும் அனைத்துச் சாதியினரும் செய்வதும், தமிழிலேயே செய்வதும்,

தமிழ் வழிபாட்டுப் பாடல்களைப் பாடியே செய்வதுமாக ஓதுவார்களை முன்னிறுத்திச் செயல்படுத்த வேண்டும்.

6. சிவனியர்களையும், மாலியர்களையும் தனித்தனியாகவோ, இணைத்தோ மாநாடுகளை நடத்த கருத்துரைத்துத் தூண்டுதல் வேண்டும். சிவனியமும் மாலியமும் இந்து மதத்திற்குத் தொடர்புடையதல்ல என்றும், வேதங்களும் மனு தர்ம சாஸ்திரங்களும், சிவனிய, மாலிய சமயங்களுக்கும் தொடர்பில்லை என்றும் அறிவிக்கச் சொல்லி வழிப்படுத்த வேண்டும். வள்ளலார் இயக்கத்தினரை வைதிக, வேத, மனு தர்ம சாஸ்திரங்களை மறுத்துக் கருத்துப் பரப்பல் செய்யத் தூண்ட வேண்டும்.

7. திருவள்ளுவர், கண்ணகி, ஔவையார் உள்ளிட்ட தமிழ் அறவோர்களைச் சிறப்பிக்கும் வகையில் அடையாள நாள்களில் அவர்களின் வெட்டுருவங்களை, படங்களைத் தாங்கி விளக்குகள் ஏந்தி ஊர்வலம் நடத்திச் சாதி ஒழிப்பை, வகுப்பு (வர்க்க) ஒழிப்பை, சமய ஒழிப்பை முன்னிறுத்திப் பரப்பல் செய்தல் வேண்டும். விழாக்கள் நடத்திடல் வேண்டும். மாணவர்களிடையே போட்டிகள் நடத்திடல் வேண்டும்.

8. மக்கள் கலை விழாக்களை நடத்துவது, போகி நாளில் சாதி அழுக்கையும் தீயிட்டுக் கொளுத்தும்படி சாதி, வகுப்பு(வர்க்க)க் கொடூரன் ஒழிப்பு நிகழ்வுகளைப் பரவலாகச் செய்வது.

9. ஒவ்வோர் ஊரிலும் தமிழ் வழிப் பள்ளிக்கூடங்களும், மாவட்டந்தோறும் பெரிய அளவில் மேல்நிலைப்பள்ளி ஒன்றும், கல்லூரி ஒன்றும், தமிழிய உணர்வோடும், சாதி, சமய மறுப்பு உணர்வோடும் தொடங்கி நிறுவனப்படுத்தி நடத்திடல் வேண்டும். (காலத்தால் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாம்) விடுதியுடன் கூடியதாய் அப்பள்ளிகளை அமைத்து மாணவர்களைப் பொறுப்புணர்வு உள்ளவர்களாக வளர்க்க வேண்டும்.

   (இவற்றையெல்லாம் வல்லரசிய எதிர்ப்பு, இந்திய பார்ப்பனிய எதிர்ப்பு, சாதி ஒழிப்பு உணர்வு கொண்ட இயக்கங்கள் சார்ந்தவர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து, அக்குழுவின் நெறிப்படுத்தலிலும் ஒழுங்கமைப்பிலும் இயக்கிட வேண்டும்)

10. ஒவ்வோர் ஊரிலும் கூட்டு வணிகக் கூடங்களையும், கூட்டுத் தொழிற்கூடங்களையும் மாற்றுப் பொருளியல் திட்டத்திற்கான அடித்தளமாய் நடத்திடல் வேண்டும். ஒவ்வோர் ஊரிலும் முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்களால் நடத்தப்படும் மேற்படி வணிக, தொழில் நிறுவனங்களின் வழியான ஊதியத்தின் பகுதியை, அவர்களை ஒருங்கிணைத்துக் கூட்டியக்க அளவில் ஆளுகை செய்கிற அதிகாரக் குழுவின் வழியே நடத்தப்பெறும் மேற்சொல்லப்பட்ட பிற வேலைகளை வலுப்படுத்துகிற தன்மையில் பயன்படுத்துதல் வேண்டும்.

மேலே சொல்லப் பெற்றவையோடு திட்டமிட்ட வேலைகளை அடித்தள வேலைகளாகச் செய்வதுதான், குமுக மாற்றத்திற்கும், விடுதலைக்கும், புரட்சிக்குமான அடிப்படைகளாக இருக்க முடியும்.

**ஆரியப் பார்ப்பனியத்திற்கு எதிராய், இந்தியத்திற்கு எதிராய், பன்னாட்டு வல்லரசியங்களுக்கு எதிராய் மக்கள் அனைவரையும், இயக்கங்கள், கட்சிகள் அனைத்தையும் ஓரணியில் நிறுத்துவது என்கிற உத்திகள் திட்டமிடப்பட வேண்டும்.**

அரசதிகார அரங்குகளுக்குள் ஊடுருவி அரசியலையும், அதிகாரத்தையும் தன்வயப்படுத்திடல் வேண்டும்.

அத்தகைய அடித்தளங்களை அமைத்துக் கொண்டால்தான் தமிழ்த்தேச விடுதலை எனும் கட்டுமானத்தை அதன்மேல் நிறுவ முடியும்.

எனவே, அத்தகைய அடித்தளங்களை அமைத்துக் கொள்ளத் திட்டமிட்டு இயங்க வேண்டியது குமுக மாற்றம் பற்றிய கருத்துடையோர் அனைவரின் கடமையுமாகும்.

## நெய்வேலியில் கருத்தரங்கம்

கடந்த 2018 ஆகஸ்டு 5ஆம் நாள் நெய்வேலியில் உலகத் தமிழ்க் கழகக் கருத்தரங்கக் கூடத்தில்

வாலறிவன் திருவள்ளுவர் மன்றம்,
உலகத் தமிழ்க் கழகம்
உலகத் திருக்குறள் கூட்டமைப்பு,
திருக்குறள் சிந்தனை மையம் மற்றும்
திருக்குறள் ஞான மன்றம்

ஆகியவை இணைந்து திருக்குறளை ஒல்லும் வகையெலாம் பரப்புவது பற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி இந்தக் கருத்தரங்கில் பங்குபெற்றுக் கலந்துரை வழங்கினார். இதில் தாய்மொழிக் கல்வியின் அவசியம் பற்றி நன்கு விளக்கமாகக் கூறியதோடு, திருக்குறள், தமிழ் இலக்கிய இலக்கணம் அனைத்தும் நிலைபெறவும், வளரவும் தாய்மொழியாம் தமிழ்மொழிவழிக் கல்வி ஆகவும், ஆட்சிமொழியாகவும் வரவேண்டும் என்று கூறினார்.

இந்த நோக்கம் வெற்றி பெறத் தமிழரிடம் பல்வேறு பெயர்களில் உள்ள அமைப்புகள் அனைத்தும் இணைந்து இந்தியாவில் உள்ள பல்வேறு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டோரையும் இணைத்துக் கூட்டமாக மாபெரும் மாநாட்டை விரைவில் நடத்த வேண்டும் என்றும் கூறினார். இந்தக் கருத்தைப் பலரும் வரவேற்றனர்.

**- சி.பெரியசாமி**

து.பொ.செ. மா.பெ.பொ.க.

## சமூக வலைத் தளத்தில் மருத்துவர் க. மகுடமுடி அவர்களின்
# எளிய மக்களுக்கான மருத்துவப் புரட்சி – ‘ஹீசி’ செயலி வெளியீடு





21ஆம் நூற்றாண்டின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் சமூக வலைத் தளங்களின் (Social Networs) பங்களிப்பு அளப்பரியது. இது ஒத்தக் கருத்துடைய அல்லது செயற்பாடு கொண்ட மக்களை ஒன்றிணைக்கவும் அவர்களிடையே உள்ள சமூகப் பிணைப்புகளை வெளிப்படுத்தவும் பயன்படும் சிறந்த தொழில்நுட்பம் ஆகும். அவ்வகையில் உலகின் முதல் பத்து சமூக வலைத்தளங்களில் முதலாவதான முகநூல் (Facebook), அமெரிக்காவின் தலை சிறந்த பல்கலைக்கழகமான ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் மாணவர்களுக்காக வெளியிடப்பட்டது.

தகவல் தொழில்நுட்பமும் அலைக்கற்றைத் தொழில்நுட்பமும் அபார வளர்ச்சியை எட்டியுள்ள இன்றைய சூழலில் எண்ணற்ற குறுஞ்செயலிகள் இந்த வகையில் இலவசமாக மக்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. இருப்பினும், இன்றளவும் உலக அளவில் கடைக்கோடி மக்களுக்கும் மருத்துவச் சேவையை விளக்குகிற - கொண்டுசெல்கிற - மருத்துவத் தொழில்நுட்பத்தையும் பயனாளர்களான வெகுசன மக்களையும் இணைக்கிற ஒரு செயலி - சமூக வலைத்தளம் இல்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரியது; மருத்துவத் துறையில் கார்ப்பரேட் முதலாளிகளின் ஆதிக்கத்திற்குத் துணைநிற்பது ஆகும். இந்த நிலையைப் போக்கும் முதல் முயற்சியாக - பெரியார் பற்றாளர் - மருத்துவத் துறையின் மானுடக் காவலர் கச்சிராயப்பாளையம், வடக்கனந்தல், மருத்துவர் க. **மகுடமுடி** அவர்கள் **www.heezy.org** என்னும் ஒரு வலைத் தளத்தையும் “**ஹீசி : ஒருங்கிணைந்த மருத்துவ சமூக வலைத்தளம்**” **(HEEZY : Global Social Network for Health)** என்னும் செயலியையும் உருவாக்கி உலகுக்கு வழங்கியுள்ளார்.

திராவிட இயக்க - நீதிக் கட்சி முன்னோடிகளுள் ஒருவரும் சிறந்த பொருளியல் அறிஞரும், விடுதலை இந்தியாவின் முதல் நிதி அமைச்சராகவும் விளங்கிய ஆர்.கே. சண்முகம் செட்டியாரின் பெயரில் கள்ளக்குறிச்சி, இந்திலியில் மருத்துவர் மகுடமுடி அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கும், ஆர்.கே.எஸ். கலை அறிவியல் கல்லூரிக் கூடத்தில் 18.8.2018 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்ற வெளியீட்டு விழாவில் மேனாள் உச்சநீதிமன்ற நீதிபதி நீதிபதி ஏ.ஆர். லக்ஷ்மணன் வெளியிட்டு உலகுக்கு அற்பணித்து மக்களுக்கு விரைவான மற்றும் திறமையான முறையில் ஆரோக்கிய வாழ்வு அளிப்பதற்கு இச்செயலி பெரும் உதவியாக இருக்கும் என்று கூறி உரையாற்றினார். கல்லக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கே. காமராஜ் பாராட்டினார். குமுதம் ஊடகக் குழுமத் தலைவர் பி. வரதராஜன், வழக்குரைஞர் க.பாலு மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினர். செயலியின் இயக்குநர் யூனஸ், மேனாள் கல்லூரிக் கல்வி இயக்குநர் அ. மதிவானன் மற்றும் பலர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். ஒரு சிற்றூரிலிருந்து உலகுக்கு ஒரு செயலியை அற்பணித்து வரலாற்றில் இடம்பெற்றுள்ள ஆர்.கே.எஸ் கல்லூரியையும் மருத்துவர் மகுடமுடி அவர்களின் குழுவினரையும் சிந்தனையாளன் இதழ் பாராட்டி வாழ்த்துகிறது.

முனைவர் **முத்தமிழ்**

# மனோகர் பிராசத் மறைவு



தோற்றம் : 06.11.1945
மறைவு : 18.08.2018

இந்திய அரசுப் பணி அதிகாரியாக Ministry of Defense-இல் இணைந்து பணியாற்றினார். தாழ்த்தப்பட்ட பட்டியல் வகுப்பு, பிற்படுத்தப்பட்ட, பழங்குடியின மக்கள் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க உறுதி செய்தார். திரு. ராம்விலாஸ் பஸ்வான் இரயில்வே மந்திரியாக இருக்கும்போது அவருடன் தனிச் செயலாளராகச் செயல்பட்டார். மேலும் புதுதில்லி சிந்தனையாளர் மன்றத்தில் புரவலராக இருந்தார்.

அப்போது, எண்.67, North Avenue-இல் செயல்பட்ட மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சி தலைவர் திரு. ஆனைமுத்து மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ராம் அவதேஷ் சிங் இணைந்து வடமாநிலங்களிலே இடஒதுக்கீடு மாநாடுகள் நடத்த தோளோடு தோள் கொடுத்து உழைத்தார். சிறப்பு அதிகாரியாக (OSD) அப்பொழுது இருந்த சுகாதார அமைச்சரிடம் பணியாற்றினார். அரசின் அமைப்பான Ambedkar Foundation-இல் இயக்குநராகப் பணியாற்றினார். மேலும் 2008ஆம் ஆண்டு முதலாகப் பெரியார் அம்பேத்கர் தொண்டு நிறுவனத்திற்குப் புரவலராக இருந்து வந்தார். கடந்த சூன் மாதம் தற்சமயம் புரவலரான திரு. இராமமூர்த்தி, புது தில்லி தமிழரசு மற்றும் கம்பீரன் ஆகியோருடன் சென்று திரு. ஆனைமுத்து அவர்களைச் சந்தித்து இரண்டு மணிநேரம் அளவளாவிக் கொண்டிருந்தார். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டார். 22.8.2018 அன்று பெங்களூரில் நடைபெற்ற இறுதி நிகழ்வில் மா.பெ.பொ.க. சார்பில் கோ.மு.கருப்பையா கலந்து கொண்டார். இவருடைய மறைவுக்கு மா.பெ.பொ.க. தன்னுடைய இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

கட்டுரைத் தொடர்-61

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

**மறியலுக்கு முதல் நாள் :**
**மந்திரிகளுக்குத் தெளிவுரை**

1948 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் திராவிடர் கழகம் முன்னின்று நடத்தியது. மறியலுக்கு முன்நாள் 9-10-48 அன்று பெரியார் ஆற்றியவுரை :

மாலை 6 மணிக்கு பெத்துநாய்க்கன் பேட்டைச் சிவஞானம் பார்க்கில் சென்னை மாவட்டத் திராவிடக் கழகத் தலைவர் தோழர் என். ஜீவரத்தினம் அவர்கள் தலைமையில் மாபெரும் இந்தி எதிர்ப்புப் பொதுக் கூட்டம் மிக விமரிசையாக நடைபெற்றது. பார்க்கிலும், பார்க்கின் சுற்றுப்புறத்திலும் சுற்றுப்புற வீடுகளின் மாடியிலும் ஏராளமான மக்கள் குழுமியிருந்து இந்தி எதிர்ப்புப் போர் முரசொலி முழுங்கக் கேட்டனர். பெரியார் அவர்களும், இந்திஎதிர்ப்பு முதல் சர்வாதிகாரியாக இருக்கும் வாய்ப்புப் பெற்ற தோழர் சி.என். அண்ணா துரை அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். இடை யிடையே சிறுதூற்றல் இருந்துகொண்டிருந்ததென் றாலும் மக்கள் மிக அமைதியாக இருந்து மேற்படி சொற்பொழிவுகளைக் கேட்டனர்.

தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தைச் சுருக்கமாக எடுத்துக்கூறி, தோழர் என். ஜீவரத்தினம் அவர்களைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளவும், தோழர் என். ஜீவரத்தினம் அவர்கள் தலைமையேற்று, கட்டாய இந்தி மூலம் தமிழ்நாட்டைக் கெடுக்கவரும் ஆரியக் கலாச்சாரப் படையெடுப்பை முறியடிக்க, போர் துவக்கப் படுகிறதென்றுகூறி தலைவர் பெரியார் அவர்களைப் பேசும்படி கேட்டுக் கொண்டார்.

**பெரியார் அவர்கள் பேசியதாவது :-**

"அன்புமிக்க தலைவர் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இந்தக் கூட்டம் நாளை இச்சென்னையில் நடை பெற இருக்கும் இந்தி எதிர்ப்பு மறியலைக் குறித்து மக்களுக்கு விளக்கிக் கூறுவதற்காகக் கூட்டப்பட்ட கூட்டமாகும், இந்நாட்டில் அதுவும் இச்சென்னை மாநகரில் இந்தி எதிர்ப்பைக் குறித்து யாருக்காவது விளங்க வைக்க வேண்டுமென்றால், சென்ற 10 ஆண்டு களுக்கு முன்பு பிறந்திராத குழந்தைகளுக்கும், அன்று விளக்கம் தெரியாது; விபரம் தெரியாது இருந்த குழந் தைகளுக்கும் தான் சற்று விளக்கம் கூறவேண்டியி ருக்குமே ஒழிய, மற்றையோருக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.



காரணம் அவ்வளவு விளக்க மாக அன்று நாம் இந்தி எதிர்ப் பின் அவசியத்தைப் பற்றிப் பேசியிருக்கிறோம் என்பதால் தான், சென்ற 10 ஆண்டுகளுக்கு முந்தி இதே இந்தி மொழி மூலம் நமது திராவிட மொழிக்கும், திராவிடக் கலாச்சாரத்திற்கும், திராவிட மக்களுக்கும் வரநேர்ந்த ஆபத்தைத் தடுக்க வேண்டுமென்று நாம் ஒரு போராட்டத்தை இதே சென்னையில் நடத்தி வெற்றி பெற்றோருக்கிறோம் என்பதால்தான். அக்காலத்தில் ஏற்பட்ட ஆபத்துக்கும், இக்காலத்தில் ஏற்பட்டுள்ள ஆபத்துக்கும் பல வேற்றுமைகள் உண்டு. ஏதாவது கடினமான காய்ச்சலைப் பற்றிக் கூறவேண்டுமானால், இக்காய்ச்சல் மிக "விருலன்ட் பாரத்தில்" அதாவது மிகக் கொடூரமான, வேகமான, ஆபத்துக்கிடமான தன் மையில் வந்துள்ளது என்று கூறுவார்கள். அதேபோல் நமது கலாச்சாரத்திற்கு இன்று வந்துள்ள ஆபத்து முன்னைவிடச் சற்றுக் கடினமான, சற்று தொந்தர வான தன்மையில் வந்துள்ளது.

**பழைய இந்தி நுழைப்பு!**

10 ஆண்டுகளுக்கு முன்பு இன்று கவர்னர் ஜெனரலாக இருக்கும் தோழர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் முதன் மந்திரியாய் இருந்த காலத்தில், இதே இந்தி கட்டாயப் பாடமாகக் கூட அல்ல, இஷ்ட பாடமாக வைக்கப்பட்டது. அதுவும் மாகாணம் பூராவுக்கும் 40 அல்லது 50 பள்ளிகளில் மட்டுமே பாடமாக வைக்கப் பட்டது. அன்று அதைக்கூட நாம் எதிர்த்தோம். நமது எதிர்ப்பின் வலிவைக் கண்டதும், இந்தியை இஷ்டப் பட்டுப் படிப்பவர்கள் கூட, இடைப்பட்டாலொழிய பரீட் சைக்குப் போகவேண்டாம்; சென்றாலும் தேர்வு வேண்டிய அவசியமும் இல்லை என்று கூறப்பட்டது.

எதிர்ப்பு வளர, வளர ஏதோ 100 வார்த்தைகளாவது இந்தியில் ஒரு மாணவன் தெரிந்து கொண்டால் போதுமானது என்று கூறப்பட்டது. கடைசியாக "இவ் வளவு அதிருப்தி மக்களுக்கு இருக்குமென்று தெரிந் திருந்தால் நான் இந்த மொழியைப் புகுத்தியே இருக்க மாட்டேன்" என்று அவரே கூறும்படியான நிலைகூட ஏற்பட்டது. கடைசியில் இவ்வாறு கூறுமாறு செய்யப் பட்ட அவர், முதல்முதலாக இந்தி எதிர்ப்புப் போர் துவங் கப்பட்ட போது என்ன கூறினார் தெரியுமா?

## பெருமக்களுக்கோர் எச்சரிக்கை!

இந்தி எதிர்ப்புப் போர் நடக்கிறது. பார்ப்பனப்பத்திரிகைகள் போர் விஷயங்களை மறைத்து, திருத்திப் பொய் கற்பனை செய்யச் செய்து பித்தலாட்டங்களை அள்ளி இறைக்கும். முன்பு தொழிலாளர்கள் முதலிய வேலை நிறுத்தங்களின் போது செய்த யோக்கியமற்ற காரியங்களைச் செய்யும் (அதைத் தடுப்பதற்குத் தனிப்பட்ட போராட்டம் வேண்டும்.)

ஆதலால் உண்மை நடவடிக்கைகளை அறிய ஆசைப்படும் மக்கள் பார்ப்பனப் பத்திரிகைகளில் வருவதை நம்பி விடாதீர்கள்.

காங்கரஸ் போர்வையில் இருக்கும் திராவிடர் பத்திரிகை, தங்கள் கட்சி மந்திரிகளைக்காப்பாற்றவும் பார்ப்பனர்கள் தொல்லையில் இருந்து சமாளிக்கவும் அவைகளும் பார்ப்பனீயத்தைக் கையாள வேண்டி இருக்கும். முஸ்லிம் பத்திரிகைகளும் சர்க்காரின் புலிப் பாய்ச்சல் கொடுமைக்குப் பயந்து ஒளிய வேண்டி இருக்கும். ஆதலால் திராவிடக்கழக சார்பு உள்ள பத்திரிகைகளைப் பார்த்து முடிவு செய்யுங்கள்.

தூத்துக்குடி மகாநாட்டைப் பார்ப்பன—காங்கரஸ் பத்திரிகைகள் எப்படி இருட்டு அடித்தன? மற்றும் பல முக்கிய நடவடிக்கைகளை எப்படித் திருத்திக் கூறின? ரயில்வே தொழிலாளர், பக்கிங்ஹாம் மில் தொழிலாளர் முதலிய ஸ்ட்ரைக்குகள் பற்றி எப்படித் திரித்துக் கூறின? இவைகளை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

—ஈ. வெ. ராமசாமி.

**ஆணவம் குறைச்சலில்லை**

"நான் இம்மாகாணத்தின் முதன் மந்திரி. மக்களால் தெரிந்து எடுக்கப்பட்டு மந்திரியாக வந்துள்ளவன். நான் உத்திரவிடுகிறேன் என்றால் மக்களின் பிரதிநிதியாகிய நான் உத்திரவிடுகிறேன் என்று பொருள். அப்படி இருக்க மக்களின் பிரதிநிதிகள் அல்லாத, யாரோ வெளியில் உள்ள ஒரு இராமசாமி நாய்க்கரும் ஒரு சோமசுந்தர பாரதியாரும் எதிர்க்கிறார்கள் என்பதற்காகவா உத்திரவை மாற்றுவேன்? அவர்களுக்காகவா விட்டுக்கொடுப்பேன்? அது நடக்காது, முடியாது என்று ஆணவத்தோடு கூறினார். அதற்காக நாம் அன்று அஞ்சினோம் இல்லை. மக்களிடம் இந்தியால் விளையக் கூடிய கேடுகளைப் பற்றித் தெளிவாக எடுத்துக்கூறினோம். அவர்களும் ஒப்புக்கொண்டு பேராதரவு அளிக்க ஆரம்பித்துவிட்டார்கள்."

**ராஜி பேசிய படலம்**

அதைக் கண்டு அன்று ஆணவத்தோடு சவால் விட்ட ஆச்சாரியாரும் சமரசத்திற்கு வர, ராஜி பேச முன்னுக்கு வர நேரிட்டது. ராஜி பேச வந்தவர் ஜெயில் சூப்பரன்டெண்ட் முன்னிலையில் தான் என்னுடன் பேசினார். சமரசம் பேச வந்தவரும் கூட இன்றும் உயிருடன் தான் இருக்கிறார். அவர் யார் என்பதையும் தான் தெரிவித்து விடுகிறேனே. வேறு யாருமில்லை; இன்றைய மத்திய அரசாங்க நிதி மந்திரியாயுள்ள தோழர் சண்முகஞ் செட்டியார்தான் என்னுடன் ராஜி பேச அனுப்பப்பட்டார். அவர் கூறினார் : "இப்போது இந்தி புகுத்தப்பட்டுள்ள 40 பள்ளிகளோடு இந்தி நுழைப்பை நிறுத்திக்கொள்ள ஒப்புக்கொள்வதாயிருந்தால் போராட்டத்தை நிறுத்திக் கொள்ளச் சம்மதந்தானா?" என்று கேட்டார். அதற்கு நான் சொன்னேன் : "இது வெறும் வீம்புதானே; இந்தி தேவையில்லை என்று அவர் உணர்வதாயிருந்தால் இந்த 40 பள்ளிகளிலும் கூட எடுத்துவிடுவதுதானே. நான் ஜெயித்தேனா, அவர் ஜெயித்தாரா என்று காட்டிக் கொள்ளத்தானே இப்படிக் கூறுகிறார்? இதற்கு ஒப்புக்கொள்ள முடியாது" என்று கூறினேன்.

அதற்கு அவர் சொன்னார் : "இந்த 40 பள்ளிகளில் கூட இந்தி நிரந்தரமாக இராது. அதுவும் குறைக்கப்பட்டுவிடும் என்று கூடக் கூறுகிறார். அப்படிச் செய்வதாயிருந்தால் போராட்டத்தை நிறுத்தச் சம்மதந்தானா?" என்று கேட்டார்.

"அப்படியானால் முடிவாக 40 பள்ளிகளிலும் இந்தி மொழி எடுக்கப்பட்டுவிடும் என்று முடிவான தேதியைக் கேட்டு வைத்துக் கொள்ளுங்கள்; எனக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் கூட இல்லை. அந்தத் தேதிக்குள் எடுபடாவிட்டால் மறுபடி போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்வதாயிருந்தால் போராட்டத்தை நிறுத்துகிறேன்" என்று கூறினேன். அதற்கு அவர் தன்னால் பொறுப்பேற்க முடியாதென்றும், அந்தத் தேதியைக் கேட்டுத் தெரிவித்து விடுவதாகவும் கூறிச்சென்றார்.

**வேகமும் வீம்பும்**

இந்தப் பேச்சு நடந்தது சென்னை ஜெயிலில். இப்பேச்சு நடந்த சில நாட்களில் எனக்கு காய்ச்சல் வரவும் என்னைப் பெல்லாரி சிறைக்கு மாற்றினார்கள். அங்கும் காய்ச்சல் ஏற்பட்டது. அங்கிருந்து கோவைக்கு மாற்றப்பட்டேன். நான் பெல்லாரியில் இருந்த போது இங்கு இந்தி எதிர்ப்பை நடத்தியவர்கள் சற்று வேக மாகப் போய்விட்டார்கள். அதன் பயனாய்ச் சர்க்காருக் கும் வீம்பு அதிகமாகிவிட்டது. அதன் பயனாய் சமரசப் பேச்சு கைவிடப்பட்டது. கோவையிலும் எனக்குக் காய்ச்சல் ஏற்பட்டு வயிற்றுப் போக்கும் ஏற்படவே, கோவை ஜெயில் சூப்பரின்டெண்ட் கொஞ்சம் பயந்து விட்டார். அவர் ஒரு டாக்டர். அவர் உடனே இராச கோபாலச்சாரியாரைப் பார்த்து நிலைமையைச் சொன் னார். ராஜகோபாலாச்சாரியாரும் “தாளமுத்துவுக்கும் நடராஜனுக்கும் ஏற்பட்ட கதி இவனுக்கும் ஏற்பட்டு விட்டால் என்ன நேருமோ?” என்று அஞ்சி, “உடனே ஓடோடியும் போய் விடுதலை செய்துவிடு. வெளியில் போய் என்ன வேண்டுமானாலும் ஆகட்டும்” என்று கூறிவிட்டார். **ஞாயிறன்று சூப்பரின்டெண்ட் அவரைப் பார்த்தார். ஞாயிற்றுக்கிழமையன்றே விடுதலை உத்தரவும் செய்யப்பட்டது. பிறகு இந்தி எதிர்ப்புக் காகச் சிறை சென்றவர்களை, அவர் சிறைவாசம் முடியும் முன்பே கொஞ்சம் கொஞ்சமாக விடுதலை செய்து கொண்டே வந்தார்.** அதையொட்டி இந்தி இன்று எடுபடும், நாளை எடுபடும் என்று பேச்சு உலாவ ஆரம்பித்தது. அப்படிப்பட்ட நிலையில் யுத்தமும் வந்தது. நாம் போட்ட உத்தரவை நாம் எடுப்பானேன்; வெள்ளையனே எடுத்துவிடட்டுமே என்ற நினைப்பில், காங்கிரஸ் மந்திரிகளும் பேசாமலிருந்து கடைசியாக ராஜினாமா கொடுத்துவிட்டுச் சென்றார்கள். வெள்ளையர் சர்க்கார் ஆலோசகர்களாக வந்ததும் அந்த உத்தரவை ரத்துச்செய்துவிட்டார்கள். இதுதான் பழைய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் சுருக்கமாகும்.”

**இன்றைய இந்தி நுழைப்பு முறை**

இந்தச் சங்கதியை நன்றாக அறிந்துள்ளவர்கள், இன்று தாம் பதவிக்கு வந்ததும் அதே காரியத்தை மறுபடியும் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். சுதந்தர அரசாங்கத்தில், சொந்த அரசாங்கத்தில் தான் அந்நிய வடநாட்டு மொழி நம் நாட்டில் புகுத்தப்படுகிறது. அதுவும் முன்னையை விடச் சற்று கடினமான முறை யிலேயே புகுத்தப்பட்டுள்ளது. எனவே நமது போராட் டத்தின் அளவும் முன்னையதைவிடச் சற்று விரிவான தாகவே அமையும். உத்திரவு பிறப்பித்தவர்களும், திடீரென்று இந்தியை இந்நாட்டில் கட்டாயப் பாடமாக்கி விடவில்லை. இதுதான் நாம் சிந்திக்க வேண்டிய விஷயம். இந்தியை இன்னும் சில பாஷைகளோடு சேர்த்து அவற்றில் ஏதாவதொன்றை இரண்டாவது மொழியாகப் படிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தவர்கள் மாகாணம் பூராவுக்கும் ஒரே மாதிரி உத்திரவைப் பிறப்பிக்கவில்லை. இரண்டாம் மொழி

## 7-8-48 நாள் பிரதமர் சந்திப்பைப் பற்றிப் பெரியார்.

★

பிரதமருக்கும் எனக்கும் ஏற்பட்ட சந்திப்பில் குறிப்பிடத் தக்க விஷயம் ஒன்றுமில்லை.

பிரதமர் மரியாதைக்காகக் கூப்பிட்டார்.

நானும் மரியாதைக்காகச் சென்றேன்.

பி-ர்—இந்தி கட்டாயம் இல்லை என்றார்.

**நான்:**—கட்டாயப் படுத்தப் பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

பி-ர்:—இந்திய யூனியனில் நாம் இருந்தாக வேண்டும். ஆதலால், இந்தி அவசியம் என்றார்.

**நான்:**—இந்திய யூனியனில் இருந்தாகவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆதலாலும் மற்ற, காரியங்களுக்கும் இந்தி அவசியம் இல்லை என்றேன்.

பி-ர்:—இதற்காகச் சத்தியாக்கிரகம் செய்யவேண்டாம் என்றார்.

**நான்:**—எல்லா ஏற்பாடும்செய்த பிறகு இப்போது சொல்லுவது சம்பிரதாயப் பேச்சாக இல்லாமல் உண்மையாய்ச் சொல்லுவதானால் இந்தி விஷயத்தில் ஏதாவது மாறுதல் செய்யுங்கள் என்றேன்.

பி-ர்:—ஒரு மாறுதலும் செய்ய முடியாது என்றார்.

**நான்:**—சரி, சென்று வருகிறேன் என்றேன்.

பி-ர்:—சரி, போய் வாருங்கள் என்றார்.

நான் வரும்போது இந்த சம்பவத்தை என்னை அழைத்து எச்சரிக்கை செய்தார் என்று கருதிக் கொண்டே வந்தேன்.

பிரதமர் நான் வந்த உடன் போலீஸ் கமிஷனரைக் கூப்பிட்டுப் பேசினாராம். பிறகுதனது போலீஸ் இலாக்கா (ஹோம் செக்ரட்டரி) காரியதரிசியைக் கூப்பிட்டுப் பேசினாராம். பிறகு மந்திரிகளுடன் கலந்தாராம்.

நான் வீடுவந்து சேர்ந்தவுடன் ஆவலாய் என்னை எதிர் நோக்கிக் கொண்டிருந்த தோழர்கள் வேதாசலம், அண்ணாதுரை மற்றும் 10 நிர்வாக சபை அங்கத்தினர்கள் முதலியவர்களோடு கலந்து பேசினேன். அவர்கள் “ஒரு சடங்கு நடந்தேறியது” குறித்து மகிழ்ச்சி அடைந்தார்கள்.

கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகிய பகுதிகளில் மட்டுமே கட்டாயம் ஆக்கப்பட்டது; தமிழ்நாட்டில் இஷ்ட பாடமாக வைக்கப்பட்டது. அந்த உத்தரவிலேயே அதற்குக் காரணமும் கூறியுள்ளார்கள். தமிழ்ப்பகுதியில் இந்தி புகுத்தப்படுவதைச் சிலர் ஆக்ஷேபிப்பதால் இரண்டாம் மொழியை இப்பகுதியில் மட்டும் கட்டாயமாக்கவில்லை என்று திட்டமாகக் கூறியுள்ளார்கள்.

**சண்டைக்குப் போவானேன் என்றே கருதினோம்**

''இந்தி இந்நாட்டில் இஷ்டபாடமாக வைக்கப்பட்டது கூடத் தவறு; மறுபடியும் ஆட்சியாளர்கள் நம்மை வலுவில் சண்டைக்கு இழுக்கத் துணிந்துவிட்டார்கள் போல் இருக்கிறது'' என்று இவ்வுத்திரவைக் கண்டித்து 'விடுதலை'யில் எழுதியிருந்தோம். என்றாலும் அப்போது இப்படிப்பட்ட ஒரு போராட்டத்தை நடத்த வேண்டுமென்று நாங்கள் தீர்மானம் செய்யவில்லை. சண்டைக்குப் போவானேன்; இஷ்டப்பட்டவர்கள் வேண்டு மானால் படித்துக் கொள்ளட்டுமே என்று எங்கள் கருத் தைத் தெரிவித்துக் கொண்டதோடு மட்டும் நிறுத்திக் கொண்டோம்.

**பார்ப்பனர் வயிறெறிந்தால்...**

தமிழ்நாட்டில் மட்டும் இந்தி இஷ்டமாக்கப்பட்டது ஒன்றிரண்டு பார்ப்பனர்களுக்கு வயிற்றெரிச்சலை உண்டாக்கியது. கோவைக்கு மந்திரியார் சென்றிருந்த போது ''ஏன் தமிழ்நாட்டில் மட்டும் இந்தி இஷ்டபாட மாக்கப்பட்டது'' என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் விளக்கமாகப் பதில் கூறியிருக்கிறார். அப்பதில் என்ன தெரியுமா? ''வேண்டுமென்று தான் நாங்கள் இந் நாட்டில் இந்தியைக் கட்டாயமாக்கவில்லை. இந்த நாட்டு மக்கள் இந்தி மொழியை விரும்பமாட்டார்கள் என்பதை உணர்ந்து தான் அப்படிச் செய்தாம். அந்த உத்தரவிற்கு ஆக்ஷேபணை வராததிலிருந்து நாங்கள் நினைத்தது சரியென்றே தெரிகிறது'' என்று பதில் கூறியிருக்கிறார். இச்செய்தி 24.6.1948ஆம் தேதி சுதேசமித்திரனில் 22.6.1948இல் மந்திரியார் பேசியதாக ''இந்தியும் கட்டாயப் பாடமும்'' என்கிற தலைப்பில் வெளிவந்துள்ளது. படிக்கிறேன் கேளுங்கள். ''வேண்டுமென்றுதான் இந்தி இந்நாட்டில் (தமிழ்நாட்டில்) கட்டாயமாக்கப்படவில்லை. பொதுமக்கள் இவ்வுத்திரவை எப்படி ஏற்கிறார்கள் என்று கவனிக்கவே இப்படி உத்திரவு பிறப்பித்தோம். இரண் டொரு இடத்தைத் தவிர இவ்வுத்திரவிற்கு ஆக்ஷேப ணையே வரவில்லையே. அப்படியிருக்க எப்படி பொதுமக்கள் அபிப்பிராயத்திற்கு விரோதமாக எப்படி இந்தியைக் கட்டாயப்படுத்துவது'' என்று பதில் கூறி யிருக்கிறார். இதை நீங்கள் நன்கு யோசித்துப் பார்க்க வேண்டும். ஆக்ஷேபணையே வரவில்லையே என்று இரண்டு ஏகாரம் போட்டுப் பேசியிருக்கிறார். அதே 24.6.1948ஆம் தேதியில் இந்தச் சேதியையும் வெளி யிட்டுவிட்டு, ''இந்தி கட்டாயமாகத் தேவை'' என்று ''சுதேசமித்திரன்'' ஒரு தலையங்கமும் தீட்டிவிட்டது. அதுவும் இந்தி கட்டாயமாக்கப்பட வேண்டும் என்பது தான் பொதுஜன அபிப்பிராயம் என்று கூடக் கூறி விட்டது. அதற்கு ஆதரமாகத் தம் உத்திரவில், ''சிலர் ஆக்ஷேபிப்பதால் கட்டாயமாக்கவில்லை'' என்று கூறியிருப் பதைக் காட்டி ''கட்டாய இந்தியை ஆக்ஷேபிப்பவர்கள் ஒரு சிலர்தான் என்பதை மந்திரியார் உணர்ந்திருக்கும் போது, அந்த ஒரு சிலருக்காக இஷ்டபாடமாக்குவதா என்று கேட்டிருப்பதோடு, சர்க்காரை எப்போதும் எதிர்ப் பவர்கள் எந்த நல்ல காரியத்தையும் எதிர்க்கத் தான் செய்வார்கள். அதற்காக நல்ல காரியத்தைக் கைவிட்டு விடுவதா? நல்ல காரியத்திற்குக்கூட ஒரு சிலர் ஆக்ஷே பணை செய்து கொண்டுதான் இருப்பார்கள் என்று கூறி, மதுவிலக்குக்கூட சிலர் ஆட்சேபிக்கவில்லையா? என்று உதாரணம் காட்டியிருக்கிறது.''

**கட்டாய உத்திரவு**

ஆக்ஷேபணையே வரவில்லையே என்று கூறிய மந்திரியார், சுதேசமித்திரனுடைய ஆக்ஷேபணையைக் கண்டதும், உடனே தம் உத்திரவை மாற்றிவிட்டார். மாற்றும்போதும் தெளிவாகவே கூறியிருக்கிறார். தமிழ் நாட்டிலும் இந்தி கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார். முந்திய உத்தரவில் தமிழ்நாடு மட்டும் கட்டாயத்திலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது; இப்போது மற்ற பகுதிகளோடு தமிழ்நாடும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக் கிறதென்று.

**ஏதோ ஒன்றென்றால் ஏனோ வாத்தியாரும் சலுகையும் கட்டாயம்?**

இவ்வளவுக்கும் பிறகு இப்போது சர்க்கார் கூறும் முக்கிய வாதம் ''நாங்கள் இந்தி கட்டாயம் என்று சொல்லவில்லையே'' என்பதுதான். சர்க்கார் உத்தர விலும், மந்திரிகள் பேச்சுக்களிலும் கட்டாயம் என்கிற வார்த்தை பல முறை காணப்படுகிற போதிலும், தாங்கள் கட்டாயப் பாடமாக்கவில்லை என்று கூறி மக்களை ஏய்க்கப் பார்க்கிறார்கள்-எப்படிக் கட்டாயமில்லை என்று கூறுகிறார்கள் என்றால், ''இந்தியை எங்கு கட்டாயம் என்றோம்? இந்தி அல்லது சமஸ்கிருதம் அல்லது உருது அல்லது மற்ற ஏதாவதொரு இந்திய மொழி ஒன்றைத்தானே கட்டாயமாக்கியிருக்கிறோம். இரண்டாம் மொழி தான் கட்டாயமே ஒழிய இந்தியல்லவே என்கிறார்கள். இந்தி அல்லது சமஸ்கிருதம் அல்லது அரபி அல்லது உருது அல்லது தெலுங்கு என்று ஒரு 5 மொழிகளில், ஏதாவதொன்றை எடுத்துக் கொள்ளும்படிக் கூறிவிட்டு, இந்தி படிப்பவர்களுக்குத்தான் சர்க்கார் உத்தியோகம் அளிக்கப்படும்; சர்க்கார் சலுகை அளிக்கப் படும் என்றால், இந்தி தவிர வேறு எதைக் கற்பார்கள் மாணவர்கள்? ஏதாவதொன்றைப் படிக்கலாம் என்று கூறுபவர்கள் இந்திக்கு மட்டும் எல்லாப் பள்ளிகளிலும் வாத்தியார்களை நியமிப்பானேன்? இந்தி வாத்தியார் களை உற்பத்தி செய்ய மட்டும் பணம் ஒதுக்கி வைப் பானேன்? இந்தி தவிர மற்ற மொழிகளுக்கு இவ்வித ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்பதிலிருந்தே, சர்க் காரின் பித்தலாட்டம் வெளிப்படுகிறதா, இல்லையா? இதுதான் போகட்டும்.''

**சர்க்கார் பத்திரிகை இது!**
**சாகஸப் பித்தலாட்டம் இது!**

சர்க்காரின் கருத்தைத் தெரிவிக்கச் சர்க்காரால் நடத்தப்பட்டுவரும் ''சென்னைச் செய்தி'' என்ற மாத வெளியீட்டில், கனம் கல்வி மந்திரியார் என்ன கூறியிருக்கிறார் என்பதைக் கவனியுங்கள். இது சர்க்கார் பத்திரிகை. இதில் கனம் கல்வி மந்திரி அவினாசிலிங்கம் செட்டியார் எழுதியது என்று போடப்பட்டு, அவரது போட்டோவுடனும் கையெழுத்துடனும் வெளிவந்துள்ளது. என்னவென்று கவனியுங்கள். 1.8.1948 இல் வெளியாகி 2.8.1948இல் எங்களுக்குக் கிடைத்திருக்கும் இப்பத்திரிகையில் (பத்திரிகையையும் போட்டோவையும் காட்டி) இந்தியைப் பற்றி ஏதேதோ எழுதிவிட்டு ''இந்நாட்டு மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறு அளவுக்கேனும் இந்தி தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என்பதை வற்புறுத்த வேண்டியது அனாவசியம். எனவேதான் எல்லா ஹைஸ்கூல்களிலும் இந்தியைக் கட்டாயப் பாடமாகப் போதிக்கப்பட வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்'' என்று எழுதியிருக்கிறார். இப்படி எழுதிவிட்டு நான் எங்கே இந்தியைக் கட்டாயமாக்கி இருக்கிறேன் என்று கூறினால் அது பித்தலாட்டமா அல்லவா? நேற்று முந்தாநாள் நடைபெற்ற சம்பாஷணையின்போது இதையெல்லாம் எடுத்துக்காட்டினேன் என்றாலும், அவர்கள் சொன்னதையே தான் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**முடியாததை முடியாதென்பதா**
**வெட்கம்?**

இப்போதோ கட்டாயப்பாடம் மட்டும் இல்லை; கட்டாயப் பரீட்சையும் உண்டு. அதில் நல்ல மார்க்கு வாங்கினால்தான் தேர்ச்சியும் உண்டு. நமது பிள்ளைகள் எப்படி இந்தியைக் கற்றுத் தேற முடியும்? மிகக் கஷ்டமாயிருக்குமே என்று கூறினால், 'அப்படிச் சொல்லிக் கொள்வது வெட்கமாயில்லையா' என்று மந்திரியார் கேட்கிறார். நம்மால் செய்ய முடியாத ஒன்றை நம்மால் செய்ய முடியாதே என்று கூறுவதற்கு நாம் ஏன் வெட்கப்பட வேண்டும்? முடியாத ஒன்றை முடியாது என்று கூறுவதில் அவமானம் என்ன இருக்கிறது? நான் கேட்கிறேன் மந்திரியாரை ''உங்களுக்கு நீக்ரோ பாஷை தெரியுமா? அப்பாஷை உங்கள் நாக்கின் நுழையுமா'' என்று. நுழையாது என்றுதானே மந்திரி பதில் கூறுவார். நீக்ரோ பாஷை என் நாக்கில் நுழையாது என்கிறாயே, அதைக் கூறிக்கொள்வது அவமானமாயில்லையா என்று கேட்டால் அதற்கென்ன பதில் கூறுவார் மந்திரியார்? தமிழ்நாட்டில் பிறந்த ஒருவருக்கு தமிழ் படிக்கத் தெரியவில்லை, தமிழ் பேசத் தெரியவில்லை என்றால், அதற்காக வெட்கப்படுவதில் வேண்டுமானால் நியாயம் இருக்கிறது. தமிழ்நாட்டில் பிறந்தவன் தனக்கு இந்தி வராது என்று கூறுவதில் என்ன வெட்கப்பட வேண்டியிருக்கிறது?

(தொடரும்)

''குடிஅரசு'' 14.8.1948

## மா.பெ.பொ.க.கட்சியின் மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்கள்

கடலூர் மாவட்டம் : மா.பெ.பொ.கட்சியின் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்கள் முதற்கட்டமாகக் காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களிலும் வாணியம்பாடியிலும் நடத்தப்பட்டன. அடுத்தக்கட்டமாகக் கடலூர் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் 12.8.2018 அன்று சிதம்பரத்தில் காலை 11 மணிமுதல் மதியம் 2 மணிவரை மறைந்த தோழர் இராசாப்பிள்ளை அவர்களின் மகன் தோழர் சி.இரா.இளங்கோவன் இல்லத்தில் நடத்தப்பட்டது. தோழர்கள் பா.மோகன், மா.செ., சி.பெரியசாமி, து,பொ.செ., தி.துரை சித்தார்த்தன், து.பொ.செ., அவர் துணைவியார் எ.செம்மலர், சி.இரா.இளங்கோவன், புதுச்சேரி மாநிலச் செயலாளர், இரா. திருநாவுக்கரசு, இரா.இரமணன், பா.முத்தமிழன், இரா.பச்சமலை ஆகியோர் கலந்து கொண்டனர். கட்சிக்கு உறுப்பினர் சேர்க்கைப் பணி, உறுப்பினர்கள் கட்சிக்குத் திங்கள் தோறும் ரூ.100க்குக் குறையாமல் வரி செலுத்தல், தாய்மொழிவழிக் கல்வி, கட்சி உறுப்பினர்கள் தம்மை அடையாளப்படுத்தும் வகையிலான உடை அணிதல் போன்ற பொருள்கள் விரிவாக விவாதிக்கப்பட்டு நிகழ்ச்சி நிறைவுற்றது. தோழர் இரா.இளங்கோவன் குடும்பத்தினர் இனிய மதிய உணவு அளித்தனர்.

அரியலூர் மாவட்டம் : 20.8.18 அன்று காலை 11 மணிமுதல் மதியம் 1.45 மணி வரை அரியலூர் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் செந்துறையில் தமிழ்மறவர் புலவர் பொன்னம்பலனார் மகன் மரு.பொ.தனித்தமிழ்க் கொற்றன் இல்லத்தில் நடத்தப்பட்டது. தோழர் இரா.கலியமூர்த்தி, மா.செ., தி.துரைசித்தார்த்தன், து.பொ.செ., மரு.பொ.தனித்தமிழ்க் கொற்றன், அரங்கநாடன், சேடக்குடி இரா.சீனிவாசன், இரா.பச்சமலை ஆசியோர் கலந்து கொண்டனர். கட்சிக்கு உறுப்பினர் சேர்க்கை, தமிழ்வழிக் கல்வி, நடுவண் அரசு தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளையும் ஆட்சி மொழியாக்கிட வேண்டும் போன்ற பொருள்கள் குறித்தும் அதற்கான தக்க வேலைத்திட்டங்கள் வகுப்பது பற்றியும் பேசப்பட்டு நிகழ்ச்சி நிறைவுற்றது.

பெரம்பலூர் : 20.8.18 அன்று மாவட்டக் கலந்துரையாடல் நிகழ்ச்சி மதியம் 3 மணிமுதல் 6 மணிவரை கோவில் பாளையத்தில் நடைபெற்றது. பெரம்பலூர் மாவட்ட நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு தோழர் வரகூர் மா.நாரயாணசாமி, மா.செ. பல தோழர்களுக்கு மடல் வழி முன்பே தெரிவித்திருந்தார். தோழர் வரகூர். மா.நாராயணசாமி,மா.செ., இரா.கலியமூர்த்தி, தி.துரை. சித்தார்த்தன், து.பொ.செ., மாணிக்கம், து.செ.பெரியசாமி, பொன் சிவகுருநாதன், மருதமுத்து, க.பன்னீர்செல்வம், மா.முருகேசன், சி.கந்தசாமி,செ.பன்னீல்செல்வம், மு.ரெ.சீனிவாசன், சீ,அறிவுமழை, சு.சதாசிவம், அ.சக்திவேல், அ.செல்வராசு, இராசலிங்கம், சோ.சிதம்பரம் ஆகியோர் கலந்து கொண்டனர். பெரியார் கொள்கைகள் வெகு மக்களிடம் எவ்வாறெல்லாம் நுட்பமாக எடுத்துச் செல்லப்பட்டன என்பது குறித்து விரிவாக பேசப்பட்டது. பொதுவான கட்சிப் பணிகள், உறுப்பினர் சேர்க்கைக்கு ஏற்ற திட்டங்கள் வகுத்தல் குறித்து விவாதிக்கப்பட்டு கூட்டம் மாலை நிறைவுற்றது.

# அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை ஒடுக்குமுறைகள்

- க. முகிலன்

இந்திரா காந்தி 1975இல் நெருக்கடி நிலையை அறிவித்து விட்டு, சனநாயக உரிமைகளை நசுக்கினார். நரேந்திர மோடியின் ஆட்சியில் அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது.

சனநாயக உரிமை-மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான கவிஞர் வரவரராவ் அய்தராபாத்திலும், சுதா பரத்வாஜ் ஃபரிதாபாத்திலும், வெர்னான் கோன்சால் வேஸ் மும்பை யிலும், அருண் பெரைரா சத்தீஸ்கரிலும், கவுதம் நவ்லகா தில்லியிலும் 28.8.2018 அன்று மகாராட்டிராவின் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர். எந்தக் குற்றத்திற் காகக் கைது செய்யப்படுகிறார்கள் என்கிற விவரம்கூட அவர் களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. இவர்களில் வெர்னான் கோன்சால் வேஸ், அருண் பெரைரா, வரவர ராவ் ஆகியோர் உடனடியாகப் புனேவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கவுதம் நெவ்லகா, சுதா பரத்வாஜ் ஆகிய இருவரையும் புனேவுக்குக் கொண்டு செல்ல, சம்பந்தப்பட்ட உயர்நீதி மன்றங்கள் அனுமதி அளிக்க மறுத்ததால் அவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அய்வரைப் பற்றிய சிறு குறிப்பு : 1. வரவரராவ்-புகழ்பெற்ற தெலுங்குக் கவிஞர். 'விரசம்' என்கிற பெயரிலான புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தை நிறுவியவர். பழங்குடி மக்களின் உரிமைகளுக்காக வாழ்நாள் முழுவதும் போராடி வருபவர். பொய்யான குற்றச்சாட்டுகளின் பேரில் 11 ஆண்டுகள் சிறையில் இருந்த போதிலும், ஒரு வழக்கிலும் தண்டிக்கப்படவில்லை. 2. வெர்னான் கோன்சால்வேஸ் - எழுத்தாளர், சமூகச் செயற்பாட்டாளர் தொழிற்சங்கத் தலைவர். முன்பு கல்லூரியில் பேராசிரியராக இருந்தவர். 3.சுதா பரத்வாஜ் - தொழிற்சங்கவாதி, வழக்குரைஞர், தில்லியில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக் கழகத்தில் வருகைதரு பேராசிரியர். மக்கள் உரிமை சங்கத்தின் தேசியச் செயலாளர். 4. அருண் பெரைரா-வழக்குரைஞர், மனித உரிமை செயற் பாட்டாளர், 2007இல் தேசத் துரோகக் குற்றச்சாட்டின்கீழ் கைது செய்யப்பட்டு 2012இல் நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டவர். 5. கவுதம் நவ்லகா - மனித உரிமைப் போராளி, சன நாயக உரிமைக்கான மக்கள் கழகத்தின் உறுப்பினர், எழுத்தாளர். இவர்கள் அய்வரும் சட்ட விரோத நடவடிக்கைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் புகழ்பெற்ற குடிகளாகக் கருதப்படும் ரோமிலாதாப்பர், தேவகி ஜெயின், பிரபாத் பட்நாயக், சதீஷ் பாண்டே, மஜன தருவாலா ஆகியோர் 30.8.2018 அன்று மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் ஏ.எம். கன்வில்கர், சந்திரசூட் ஆகியோர் கொண்ட அமர்வு 30.8.18 அன்றே விசாரித்தனர். புனேவுக்கு அழைத்து வரப்பட்ட மூவர் உட்பட, அய்வரையும் செப்டம்பர் 6 அன்று அடுத்த விசாரணை நடக்கும் வரையில் அவரவர் வீட்டுக் காவலில் வைக்க ஆணையிட்டனர். வழக்கு விசாரணையின்போது, நீதிபதி சந்தரசூட், "சனநாயகத்தில் எதிர்க்கருத்து என்பது ஒரு பாதுகாப்புச் சுவர் போன்றது; அதை ஒடுக்க முயன்றால் சனநாயகமே சிதையும்" என்று கூறினார்.

புனே அருகில் உள்ள கோரேகானில் 1818 சனவரி 1 அன்று பேஷ்வாக்களின் பெரும் படையைக் கிழக்கிந்திய கம்பெனியின் சிறிய படை போரில் தோற்கடித்தது. சித்பவன் பார்ப்பனர்களான பேஷ்வாக்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. கிழக்கிந்தியப் படையில் தீரமுடன் போரிட்டு மாண்ட மராட்டி யத்தின் தீண்டப்படாதவர்களான மகர்களின் வீரத்தைப் போற்றும் வகையில் கோரேகானில் வெற்றித்தூண் ஆங்கி லேய ஆட்சியால் எழுப்பப்பட்டது.

1927 சனவரி 1 அன்று அம்பேத்கர் இந்த வெற்றித் தூண் முன் நின்று வீரவணக்கம் செலுத்தினார். 2005 முதல் ஒவ்வொரு ஆண்டும் சனவரி 1 அன்று தலித் துகள் பெரும் எண்ணிக்கையில் இந்த வெற்றித் தூண் உள்ள இடத் தில் திரண்டு போரில் மாண்ட தலித்துகளுக்கு வீர வணக்கம் செலுத்தி வருகின்றனர். 2018 சனவரி 1 என்பது 200ஆவது ஆண்டு என்பதால் பல இலட்சம் தலித்துகள் கோரேகானுக்கு வந்தனர்.

இந்தியா சுதந்தரம் பெற்று எழுபது ஆண்டுகளுக்குப் பின்னும் உண்மையான ஆட்சி அதிகாரம் பார்ப்பனர்களிடம் இருக்கிறது. அதேபோல் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அதிகாரம் புனேவின் சித்பவன் பார்ப்பனர்களிடம் உள்ளது. எனவே சித்பவன் பார்ப்பனனான இரண்டாம் பாஜிராவின் ஆட்சி 1818 வீழ்த்தப்பட்டதன் 200ஆம் ஆண்டை, ஆர்.எஸ்.எஸ். -



அருண் பெரைரா



கவுதம் நெல்லகா



சுதா பரத்வாஜ்



கவிஞர் வரவர ராவ்



வெர்னான் கோன்சால்வேஸ்

பா.ச.க. இந்தியாவை ஆளும்போது வெற்றி விழாவாக நடத்த அனுமதிப்பதா என்று சங்பரிவாரங்கள் குமுறின. எனவே 2018 சனவரி 1 அன்று கோரேகானுக்கு வந்த தலித்துகளைப் பல இடங்களில் கடுமையாகத் தாக்கினர். இதற்கு எதிர் வினையாக சனவரி 2 அன்று தலித்துகள் மகாராட்டிரம் முழுவதும் கிளர்ச்சி செய்தனர். பல இடங்களில் வன்முறையாக இது மாறியது. சனவரி 3 அன்று மராட்டியம் முழுவதும் முழு கடையடைப்பும் வேலை நிறுத்தமும் நடத்தப்பட்டன.

2018 சனவரி 1 அன்று தலித்துகள் மீது தாக்குதல் நடத்தியது. 'சிங் பிரதிஷ்தன்' தலைவர் சம்பாஜி பிடே மற்றும் 'இந்து ஏக்த மஞ்ச்' தலைவர் மிலிந்த எக்போடே ஆகிய தீவிர இந்துத்துவவாதிகள் என்று தலித்துகள் காவல் நிலையத்தில் சனவரி 2 அன்று புகார் அளித்தனர். இவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் பா.ச.க.-சிவசேனா கட்சிகளின் ஆட்சியில் இருக்கும் மகாராட்டிர அரசு 31.12.2017 அன்று கோரேகானில் தலித்துகள் நடத்திய 'போர் முழக்கம்' (Elgar Parishad) எனும் மாபெரும் பொதுக் கூட்டத்தில் வன்முறையைத் தூண்டும் வகையில் பேசிய பேச்சுகளே சனவரி 1 அன்று நடந்த கலவரத்துக்குக் காரணம் என்று கூறுகிறது. ஏனெனில் அப்பொதுக்கூட்டத்தில், "புதிய பேஷ்வாக்களான பா.ச.க. ஆட்சியை ஒழிப்போம்" என்று பேசியதை வன்முறைக்கு வித்திட்டதாக மகாராட்டிர பா.ச.க அரசு இட்டுக் கட்டுகிறது.

2006ஆம் ஆண்டு மகாராட்டிரத்தில் கயர்லாஞ்சில் போட்மாங்கே குடும்பத்தினர் ஆதிக்கச் சாதியினரால் கொடூரமாகக் கொல்லப்பட்ட பிறகு, தலித்துகள் 'கபீர்கலா மஞ்ச்' என்கிற அமைப்பின் பெயரால் இந்துத்துவத்துக்கு எதிராகப் போராடி வருகின்றனர். இந்தக் 'கபீர்கலா மஞ்ச்' அமைப்புதான் 31.12.2017 அன்று கோரேகானில் பொதுக்கூட்டம் நடத்தப்படுவதற்கு உறுதுணையாக இருந்தது. ஆனால் இதை முன்னின்று நடத்தியவர்கள் உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி பி.பி. கவாந்த் மற்றும் மும்பை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி பி.ஜி. கோல்சே பாட்டீல் ஆவர்.

ஆயினும் மகாராட்டிர பா.ச.க. ஆட்சி தலித்துகளுக்கும் அவர்களுக்கு உறுதுணையாக இருப்பவர்களுக்கும் ஒரு பாடம் புகட்ட முடிவு செய்தது. கோரேகான் மாநாட்டுக்கும், 200ஆவது வெற்றி விழா நிகழ்வுக்கும் உதவியவர்கள் என்ற வகையில், மனித உரிமைப் போராளிகளான சுதிர் தவாலே, சுரேந்திர காட்லிங், கல்லூரிப் பேராசிரியர்களான சோமாசென், மகேஷ் ரவுட், ரோணா வில்சன் ஆகியோர் சூன் 7 அன்று கைது செய்யப்பட்டனர்.

இவர்களின் வீடுகளைச் சோதனையிட்டதில் கிடைத்த ஆவணத்தின்படி, மாவோயிஸ்டுகள் பணம் கொடுத்து கோரேகான் மாநாடு நடந்தது என்றும், நரேந்திர மோடி உள்ளிட்ட பா.ச.க. தலைவர்களை, இராசிவ் காந்தியைக் கொன்றது போல் கொல்லத் திட்டமிட்டிருப்பதாகவும் காவல்துறை கூறுகிறது. இத்திட்டத்தில் தொடர்பு உள்ளவர்கள் என்கிற வகையில் 28.8.2018 அன்று இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ள மனித உரிமைப் போராளிகள் கைது செய்யப்பட்டனர் என்றும் காவல் துறை கூறுகிறது.



திருமுருகன் காந்தி

இது மகாராட்டிர அரசும் அதன் காவல்துறையும் எடுக்கும் கைது நடவடிக்கைகள் என்கிற போதிலும் நரேந்திர மோடியின் ஆட்சியே இவற்றைத் திட்டமிட்டுச் செயல்படுத்துகிறது.

பா.ச.க.வின் பினாமி ஆட்சியாக இருக்கின்ற எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியும் தில்லியின் எசமானர்களின் ஆணையைத் தலைமேல் ஏற்று, தமிழ்நாட்டில் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவோர் மீது கொடிய ஒடுக்குமுறைகளை ஏவி வருகிறது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி, மக்கள் நடத்திய நூறாவது நாள் போராட்டத்தில் துப்பாக்கியால் சுட்டு 13 பேரைக் கொன்றது. நூற்றுக்கும் மேற்பட்டவர் படுகாயமடைந்தனர். இப்போராட்டத்தில் கலந்துகொண்டவர்களை நூற்றுக்கணக்கில் கைது செய்தது. மக்கள் அதிகாரம் அமைப்பைச் சேர்ந்த ஆறு பேரைக் குண்டர் சட்டத்தில் போட்டது. இதையடுத்து சென்னை-சேலம் எட்டுவழிச் சாலைக்கு எதிராகப் போராடுபவர்களை ஒடுக்கி வருகிறது.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு குறித்து ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைக் கூட்டத்தில் பேசியதற்காக, திருமுருகன் காந்தியைக் கைது செய்தது. நீதிமன்றம் அவரை விடுதலை செய்ததும், 2017இல் பெரியார் சிலைக்கு அவர் அனுமதியின்றி மாலை போட்டதற்காக சட்ட விரோத நடவடிக்கைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

ஒடுக்கப்பட்டோர், பழங்குடியினர், மதச்சிறுபான்மையினர் ஆகியோரின் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் ஆதரவாகப் பேசுவோரும், அரசின் கொள்கைகள், செயல்பாடுகளை விமர்சனம் செய்வோரும் நாட்டின் வளர்ச்சிக்கு எதிரிகள், தேசத்துரோகிகள், நகர்ப்புற நக்சலைட்டுகள் என்று அரசுகளால் முத்திரைக் குத்தப்படுவதும், கைது செய்யப்படுவதும் மோடியின் ஆட்சியில் அதிகரித்து வருகின்றன.

இந்திய அரசின், தமிழக அரசின் மக்கள் உரிமைகளைப் பறிக்கும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதன் மூலம் சனநாயகத்தைக் காப்போம்.

# வாழ்க்கை ஒப்பந்த விழா



### பண்பரசன் (எ) சரண் - சர்மிளா

காஞ்சிபுரம் இராசா துளசி (எ) இராசா - மலர்க்கொடி இணையரின் இளைய மகன் பண்பரசன் (எ) சரண் அவர்களுக்கும், வந்தவாசி வட்டம் தெள்ளூர் மணவாளன் - ப. ஜீவா இணையரின் மகள் சர்மிளா அவர்களுக்கும் 23.8.2018 வியாழன் காலை 9.00 மணிக்கு காஞ்சிபுரம் திருநீலகண்டர் திருமணக் கூடத்தில் தமிழ் முறைப்படி திருமணம் நடைபெற்றது. அதன் மகிழ்வாக சிந்தனை யாளன் வளர்ச்சி நிதி ரூ.2000 மகளின் தந்தையார் இராசா வழங்கினார்.

**************************************************

### இரா. கலைவாணன் - நித்தியா

காஞ்சிபுரம் இராசா துளசி (எ) இராசா - மலர்க்கொடி இணையரின் மூத்த மகன் இரா. கலைவாணன் - நித்தியா ஆகியோர் 2016இல் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டதின் மகிழ்வாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ரூ.2000/- வழங்கினார்.

**************************************************

### தமிழரசி - கிஷோர் குமார்



வேலூர் மாவட்டம், திருப் பத்தூர் வட்டம், பாய்ச்சல் கிராமத் தைச் சார்ந்தவரும் தற்போது மாதவரத்தில் குடியிருந்துவரும் பெ.மூர்த்தி - இந்துமதி இணை யரின் மகள் தமிழரசிக்கும் திருவண்ணாமலை மாவட்டம், காட்டுமலையனூர் உதயணன் - சுகந்தி இணையரின் மகன் கிஷோர் குமாருக்கும் 24.8.2018 அன்று காலை 6 மணிக்கு சென்னை-89, லட்சுமிபுரம் - செங்குன்றம் சாலையில் உள்ள பத்மஸ்ரீ சேஷ மகாலில் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

**************************************************

### கோ. விவேக் - சீ. மாலதி



பெரிய காஞ்சிபுரம் வ. தீனதயாளன் - தீ. லலிதாம்பாள் இணையரின் பெயரன் தீ. கோபாலகிருஷ்ணன் - வே.ஆ. செந்தாமரை இணையரின் மகன் கோ. விவேக்குக்கும், வேலூர் மாவட்டம், சோளிங்கபுரம் க. சீனிவாசன் - சீ. பத்மாவதி இணையரின் மகள் சீ.மாலதிக்கும் சோளிங்கபுரம் வி.பி.என். மகாலில் 23.08.2018 வியாழன் அன்று வாழ்க்கை ஒப்பந்த விழா சிறப்பாக நடந்தேறியது. காஞ்சிபுரம், வேலூர் மாவட்ட மா.பெ.பொ.க. தோழர்கள் மற்றும் தோழமை அமைப்பினர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

**************************************************

### சி. கௌதமன் - பா. வாணி



கேத்தாண்டப்பட்டி கே.பொ.மோகனவேலு - கோவிந் தம்மாள் மற்றும் ஆரணி வைத்தியலிங்கம் - முனியம்மாள் பெயரனும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் வேலூர் மாவட்டச் செயலாளர் மோ. சிவசங்கரன் - கஸ்தூரி இணையரின் மகனுமான சி. கௌதமன்; சித்தூர் மாவட்டம், வெங்கடாசலபதி - பாப்பம்மாள் மற்றும் ஸ்ரீராமுலு - கொண்டம்பாள் பெயர்த்தியும் சாம்பசிவம் - பிரேமாவதி இணையரின் மகளுமான பா.வாணி ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வை, வேலூர் ஓட்டல் பென்சு பார்க்கில் 23.08.18 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் களம்பூர் கதிரேசன் தமிழ் முறைப்படி நடத்தி வைத்தார்.

இதையடுத்து, அதே மேடையில் மணமக்களின் வரவேற்பு நிகழ்ச்சி காலை 11.30 மணியளவில் பருகூர் சா. விநாயகம் ஜோசப் தலைமையில் நடைபெற்றது. வை. வீரபத்ரன் முன்னிலை வகித்தார். மோ. சிவசங்கரன் மணவிழாவுக்கு வருகை தந்தோரை வரவேற்று உரை நிகழ்த்தினார். மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து தந்தை பெரியார் எழுதிய “பெண் ஏன் அடிமையானாள்” எனும் நூலை வெளியிட்டு உரையாற்றினார். சா. குப்பன், மு. குமரன், க. முகிலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வேலூர் உதவும் உள்ளங்கள் அமைப்பின் தலைவர் இரா. சந்திரசேகரன் குருதிக்கொடை அளிப்பதன் உயர்ந்த நோக்கம் குறித்து விளக்கிப் பேசினார். வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனையின் குருதிக் கொடை ஊர்தி திருமண மண்டபத்திற்கு வர ஏற்பாடு செய்தார். மணமக்கள் குருதிக்கொடை வழங்கினர். மற்றும் பத்துப் பேர் குருதிக்கொடை அளித்தனர். இறுதியாக சூலூர் புலவர் ந.செந்தலை கவுதமன் நிறைவுரை நிகழ்த்தி னார். மணமக்கள் சென்னை, அம்பத்தூரில் உள்ள “பெரியார் ஈ.வெ.இராமசாமி-நாகம்மை அறக்கட்டளைக்கு” ரூ.15,000 அளித்தனர். மணமகன் சி.கௌதமன் திருமண விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறினார். மா.பெ.பொ.க. தோழர்களுக்கும் தோழமை அமைப்பினரும் திரளாக இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

***************************************************

**சி.ஆடலரசன் - பா. சித்ராமாலினி**

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம் பெரிய குரும்பத் தெரு கர்ணன் (எ) நாகராசன் - புஷ்பா ஆகியோரின் பெயரனும் நா. சிவா (எ) செவ்வேள் - சாலம்மாள் இணையரின் மகன் சி. ஆடலரசன், திருப்பத்தூர் வட்டம், தாதனவலசை வீரபத்திரன்-சின்ன தாயம்மாள் ஆகியோரின் பெயரனும் வீ. பாலகிருட்டிணன் - கிருட்டிணவேணி இணையரின் மகள் பா. சித்ராமாலினி ஆகியோரின் இல்லற இணை ஏற்பு விழா, வாணியம்பாடி - திருப்பத்தூர் நெடுஞ்சாலை, ஜனதாபுரம் பாரத் மகால் திருமண மண்டபத்தில், திருவள்ளுவர் ஆண்டு 2049 மடங்கல் (ஆவணி) மாதம் 7ஆம் நாள் (23.8.2018) வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் நடைபெற்றது. செவ்வேள் வரவேற்பு நிகழ்த்தினார். தமிழக மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன் இல்லற இணையேற்பு நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். வழக்குரைஞர் பாவேந்தன் - தமிழ்த் தேச நடுவம், முனிராசு-மக்கள் கலை இலக்கியக் கழகம், மருத்துவர் சு. ஞானசேகரன் - விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, சரசுவதி துரைராசு அம்பேத்கர் புரட்சி முன்னணி, அற்புதம்மாள் குயில்தாசன், நிலவன், வழக்குரைஞர் செம்மணி, சுப்பு மகேசு-தமிழர் உரிமை இயக்கம், தெய்வமணி - அம்பேத்கர் சிறுத்தைகள், எழுத்தாளர் ருத்ரன், அய்.து.பாபுமாசிலாமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மா.பெ.பொ.க. தோழர்கள் அ.சகாதேவன், சீனி.பழனி, நா.மதனகவி, பகுத்தறிவாளன், ஆ. முத்தமிழ்செல்வன் ஆகியோர் இத்திருமண நிகழ்வில் கலந்து கொண்டனர். வேலூர் மாவட்டத்தில் மா.பெ.பொ.க. முன்னெடுக்கும் எல்லா வகையான செயற்பாடுகளுக்கும் தோழர் செவ்வேள் உற்ற துணை நிற்பவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

***************************************************

**காஞ்சி அரங்க. சானகிராமன்**
**இல்ல இணையேற்பு விழா**

**அரவிந்தன்(எ) ராஜ்மோகன்**
**ரேஷ்மா (எ) ராஜலட்சுமி**

மறைந்த காஞ்சி அரங்க. சானகிராமன் - சரோஜம்மாள் பெயரனும் ஜா. அன்பழகன்-அருமைக்கண் இணையரின் மகன் அரவிந்தன் (எ) ராஜ்மோகனுக்கும் - திருவள்ளூர் முனுசாமி -தேன்மொழி இணையரின் மகள் ரேஷ்மா (எ) ராஜலட்சுமிக்கும், 24.8.2018 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு காஞ்சிபுரம் எஸ்.வி.மகால் திருமண மண்டபத்தில் முன்னாள் அமைச்சர் துரைமுருகன் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது. டி.ஏ.ஜி. அசோகன் வரவேற்புரை ஆற்றினார். சி.வி.எம்.ஏ. சேகரன் ஒருங்கிணைப்புச் செய்தார். சன் பிராண்ட் க. ஆறுமுகம், பி.எம். குமார் டி.ஏ.ஜி. அன்பழகன், ஜோதி. இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். க. சுந்தர், ச.ம.உ., சி.வி.எம்.பி. எழிலரசன், வேதாச்சலம், டி.ஏ. ரத்தினம், பி.உமாபதி, என்.பூபதி, வே.ஆனைமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். எம்.வி. இளம்பரிதி நன்றியுரையுடன் இணை யேற்பு விழா இனிதே முடிவுற்றது.

**நூல் மதிப்புரை**

## நூலகத்தால் உயர்ந்தேன்

- ஆலந்தூர் கோ. மோகனரங்கன்




ஒவ்வொருவரும் தம் வாழ்க்கை வரலாற்றைத் தாமே எழுதிப் பதிவு செய்ய வேண்டுமென்பார் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள். அவ்வகையில் முத்தமிழ்க் கவிஞர், முனைவர் ஆலந்தூர் கோ.மோகனரங்கன் அவர்கள் தம் வரலாற்றைத் தாமே பதிவு செய்து எழுதியுள்ள தன்வரலாற்று நூலே 'நூலகத்தால் உயர்ந்தேன்' என்பதாகும். தற்காலத் தமிழ்க் கவிஞர்களில் இனிய, எளிய மரபுப் பாக்கள் மூலம் கற்போர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் கவிப்பேராளுமை கோ. மோகனரங்கன் ஆவார். அவருடைய இசைப் பாக்கள் என்றென்றும் காற்றோடு கலந்து நம் காதுகளில் விருந்து படைத்துக் கொண்டே இருக்கும். எளிய நூலகராக அரசுப் பணியைத் தொடங்கிய கவிஞர் அவர்கள் தம் அளப்பரும் ஆற்றலால் அத்துறையில் மேதைமை படைத்தார். கவிதைத் துறையில் வண்டமிழ் வானம் பாடியாய்ச் சிறகடித்தார். 1100 பக்கங்களைக் கொண்ட இப் பெருநூல் தம் வாழ்க்கையை மட்டுமல்லாது தமிழ் இலக்கிய உலகின் விரிந்த வரலாற்றையும் எடுத்துச் சொல்கிறது. தான் சந்தித்த அறிஞர்கள், கவிஞர்கள், தமிழினப் போராளிகள் என எல்லோர் வாழ்க்கையையும் விரிவாகத் தொட்டுச் செல்கிறது இந்நூல். அறிஞர் வே.ஆனைமுத்து, பாவலர்கள் தமிழேந்தி, வையவன் தொடர்புகளையும் தாங்கி நிற்கிறது. வாங்கிக் காத்திட வேண்டிய கருத்துக் கருவூலம். விலை ரூ.1200/-.


**வசந்தா பதிப்பகம்**

26, குறுக்குத் தெரு, சோசப்புக் குடியிருப்பு, ஆதம்பாக்கம்,
சென்னை - 88. பேசி : 93804 17307, 044-22533667

***************************************************

## தமிழினக் களப்போராளி

- பெ. பராங்குசம்




புதுச்சேரியின் தமிழினக் களப்போராளி பெ. பராங்குசம் அவர்களின் செம்மாந்த தமிழ்ப் பணிகளைப் புலவர் கி.த. பச்சையப்பன், புலவர் செ.இராமலிங்கன், புதுவைத் தமிழ் நெஞ்சன் ஆகிய மூவரும் தொகுத்து வழங்கியுள்ள நூல் இது. தொழில் முனைவராய் உயர்ந்து நிற்கும் பெ. பராங்குசம் அவர்கள் தமிழ்க்காப்பு, தமிழ் இனக்காப்பு ஆகியவற்றிலும் ஆற்றிவரும் அளப்பரும் பணிகளை அடுக்கிச் சொல்கிறது இந்நூல். பழநெடுமாறன், வே. ஆனைமுத்து, காசி ஆனந்தன், பேராசிரியர் ம.லெ. தங்கப்பா உள்ளிட்ட பெரும் ஆளுமைகள், பராங்குசம் அவர்களைப் பற்றிக் கூறியுள்ள கருத்துகளும் ஏராளமான கட்டுரைகளும், கவிதை களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அழகிய படங்கள் நூலுக்கு அணிசேர்க்கின்றன. விலை ரூ.200/-.

புதுச்சேரி இலக்கியப் பொழில் இலக்கிய மன்றம், முத்தகம் 23,
அன்னை தெரேசா தெரு, இராசா நகர், புதுச்சேரி - 605 013.
பேசி : 0413-4502025, 9843224827

- **தமிழேந்தி**

# தீண்டாமை ஒழிந்த கிராமம் வரகூர்

- **மா.நாராயணசாமி,** வரகூர்

**நா**ன் ஒரு பெரியார் பற்றாளன்; பகுத்தறிவுவாதி. பழைய முறைப்படி நான் ஒரு இந்து வன்னியர் வகுப்பைச் சார்ந்தவன். இந்திய அளவில் காந்தி தீண்டாமை ஒழிய வேண்டும் என்று மேம்போக்காகக் கூறினார். தமிழ்நாட்டில் ஈ.வெ.ரா. பெரியார் அவர்கள் 1920 முதலே சாதி ஒழிய வேண்டும்; தீண்டாமை ஒழிய வேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டார். அதற்காகவே தமிழகம் முழுவதும் பிரச்சாரம் செய்தார்.

எங்கள் கிராமம் சிறிய கிராமம். அதில் வன்னியர், உடையார், முதலியார், யாதவர், ஆதித் திராவிடர் ஆகிய உள்சாதிகள் உள்ளன. அதில் சாதி இந்துக்கள் என்பவர்கள் சுமார் 1500 மக்கள் தொகையும் ஆதித் திராவிடர்கள் 500 மக்கள் தொகையும் உண்டு. ஆனால் சாதி இந்துக்கள் தெருவில் ஆதி திராவிடர்கள் குதி புரள வேட்டி கட்டிக் கொண்டோ, செருப்பு அணிந்து கொண்டோ, தெருக்களில், வண்டியில் உட்கார்ந்தோ, சைக்கிளில் உட்கார்ந்து கொண்டோ செல்லக்கூடாது. கீழ்ச்சாதிப் பெண்களும் பொதுக் குளத்தில், பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்க இந்துக்கள் அனுமதிப்பது இல்லை. அவர்கள் கரையில் பானையை வைத்து இந்துப் பெண்களிடம் தண்ணீர் ஊற்றுமாறு கெஞ்சுவார்கள். விருப்பப்பட்டவர்களுக்குத் தண்ணீர் ஊற்றுவார்கள்; சிலர் வெறும் பானையை எடுத்துச் செல்வார்கள்.

ஆண்கள் இந்துக்களுக்கு அடிமை வேலை செய்ய வேண்டும். இந்துக்கள் வீட்டில் யாராவது இறந்து விட்டால், ஆதித் திராவிடர்கள் எழவு சொல்ல, மேளம் அடிக்க, குழிவெட்ட, எரிப்பதாயின் கட்டை அடுக்க என்று அனைத்து வேலைகளும் செய்ய வேண்டும். அவர்களுக்கு உண்டான நியாய கூலி கொடுப்பதில்லை.

எங்கள் கிராமத்தில் சாதி இந்துக்களுக்கு என்று 8 நாட்டாண்மைக்காரர்கள், 8 கொத்து என்பார்கள். அதில் என் தந்தையும் ஒருவர். இடுகாட்டுக்குச் சென்றால் நாட்டாண்மைக்காரர்கள் வந்தால் அவர்களையும் உட்கார வைத்து காசு மாற்றுவார்கள். என் தந்தைக்குப் பின் அந்தப் பொறுப்பு என்னிடம் வந்தது.

ஒரு இறப்பிற்கு நானும் சென்றிருந்தேன். காசு மாற்றல் என்ற நிகழ்வுக்குப் பச்சமுத்து படையாட்சி என்பவர் தலைவர். என்னையும் உட்கார வைத்தார்கள். தலைவர் குறைந்த கூலியாகக் கொடுத்தார். ஆதித் திராவிடர்கள் கொஞ்சம் கூட்டிக் கொடுக்க கெஞ்சினார்கள். தலைவர் அதற்கு இது தான் மாமூல்; இதைத் தான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கடிந்தார். நான் கூறினேன், இப்போது ஒரு ஆண் கூலி 12 அணா, முக்கால் (¾) ரூபாய் பழைய முறை என்றால், அவர்களுக்கு 2½ அணா தான் வருகிறது. அதனால் தற்காலக் கூலியைக் கொடுக்கும்படிக் கூறினேன். அதற்கு அவர் இதுதான் மாமூல்; இதற்குமேல் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார். அவர்களும் பேசாமல் போய்விட்டார்கள்.

1948 வாக்கில் நான் எனது அத்தான் வீடு இலந்தங்குழி என்ற கிராமத்தில் இருந்தது. அங்குச் சென்றேன். அப்போது பெரியார் அரியலூர் வருவதாக அக்கிராமத்தினர் அரியலூர் புறப்பட்டார்கள். நானும் அவர்களோடு அரியலூர் சென்றேன். தந்தை பெரியார் சமுதாய இழிவைப் பற்றியும் அதற்கு ஆதாரமான புராணங்கள் பற்றியும் கடவுள்கள் பற்றியும் விளக்கமாகப் பேசினார். அவர் பேச்சு எனக்குக் கோபமாகவும், சிந்திக்கத்தக்கதாகவும் இருந்தது. ஏனென்றால் நான் அப்போது ஆஸ்திகன். காலையில் எழுந்தவுடன் வெளிக் காட்டுக்குப் போய்விட்டு, குளத்தில் குளித்துவிட்டு, சிவன் கோவிலில் சாமி கும்பிட்டு விட்டுத்தான் வீட்டு வேலைகளைக் கவனிப்பேன். என் தந்தைகூட, திட்டுவார்கள். அதைப் பொருள்படுத்துவது இல்லை. அதனால் எனக்குப் பெரியார் பேச்சு என்னை கோபத்திற்குள்ளாக்கியது. பெரியார் பேசி முடியும் தறுவாயில், “நான் சொல்வதை நம்பாதீர்கள்; உங்கள் மனதிற்குப்பட்டதைச் சிந்தித்து உணருங்கள்” என்ற வார்த்தையில் நான் சிந்திக்கலானேன். என் மாமா வீட்டில் பல புராணங்கள் இருந்தன. அதை வரகூர் எடுத்து வந்து, இரவு நேரங்களில் படிக்க ஆரம்பித்தேன்.

பெரியார்சொன்ன கருத்துப்படி கடவுள் பிறப்பு நடவடிக்கைகள் மனிதச் செயலுக்கு அப்பாற்பட்டிருப்பதையும் உணர்ந்தேன். அதிலிருந்து சுயமரியாதை உடையவனாக வாழ்ந்து வருகிறேன். அவர் தீண்டாமையைப் பற்றியும் பல கூட்டங்களில் விளக்கினார். அதிலிருந்து நான் தீண்டாமையை முதலில் ஒழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அடிக்கடி ஆதித் திராவிடர் தெருவுக்குப் போய் சாதி இந்துக்களுக்கு அடிமை வேலை செய்வதை, விட்டுவிட அறிவுறுத்துவேன். அவர்கள் வீட்டில் தண்ணீர் குடிப்பேன். சிலர் தண்ணீர் கொடுக்க மறுப்பார்கள். அவர்களிடம் சண்டையிட்டுத் தண்ணீர் குடிப்பேன். சாதி இந்துக்கள் ஆதித் திராவிடர் தெருவுக்குச் சென்று வந்தால் குளித்து விட்டுத்தான் வீட்டினுள் நுழைவார்கள். நான் அவர்களை தொட்டுக் கொண்டு குளிக்காமலேயே வீட்டுக்குச் செல்வேன்.

நான் ஆரம்பப் பள்ளியில் படிக்கும் போதுகூட, மதிய உணவுக்கு வீட்டுக்கு வந்தால், பள்ளிக்குப் போன உடைகளை அவிழ்த்து வைத்துவிட்டு, வேறு துணி கட்டிக்கொண்டு, சாப்பிட்டுவிட்டு, பள்ளித் துணியைக் கட்டிக்கொண்டுதான் பள்ளிக்குச் செல்ல வேண்டும். அவ்வளவு தீண்டாமைக் கொடுமை. ஆதித் திராவிடப்

பெண்களையும் குளத்தில் இறங்கி தண்ணீர் மொள்ள தைரியம் சொல்லியும், சாதி இந்துக்களுக்குப் பயந்து குளத்தில் இறங்கி தண்ணீர் மொள்ள மாட்டார்கள்.

நான் ஆதித் திராவிடர் தெருவுக்குப் போய் அடிமை வேலை செய்வதை நிறுத்தச் சொன்னால், "பரம்பரை யாகச் செய்த வேலையை எப்படிங்க விடுவது" என்று முதியவர்கள் கூறுவார்கள். அவர்கள் காலமானபின், இளைஞர்கள் நான் சொல்வதைக் கேட்டு, நாங்கள் வேலைக்கு வந்தால் தற்போது வழங்கும் கூலி கொடுத் தால் வேலைக்கு வருவதாகக் கூறியதை அடுத்து. கூலியாகக் கொடுத்து வேலை வாங்கினார்கள். பெண் களையும் குளத்தில் இறங்கித் தண்ணீர் எடுக்க துணிவு கொடுத்தேன். அவர்கள், அவர்கள் தெருவில் 2 நபர் கள் வீட்டில் செப்புக்குடம் இருக்கும். அவர்களை அழைத்து வந்து கரையில் பானையை வைத்து அக்குடத்தினால் தண்ணீர் மொண்டு ஊற்றி, எடுத்துச் செல்வார்கள்.

என் வீட்டுத் திருமண நிகழ்ச்சியில் ஆதித் திராவிடர் களுக்குச் சமபந்தி வைத்து உணவு கொடுத்தேன். மாணவர்களைச் சுதந்தர தின விழா கொண்டாட ஆசிரியருக்கு ஒரு கடிதம் வந்தது. அதைப் பயன்படுத்தி ஆதித் திராவிட மாணவர்களையும் அழைத்து ஆலயப் பிரவேசம் செய்வித்தேன். பள்ளி மாணவர்கள் எல் லோரும் தண்ணீர் குடிக்க ஒரே பாத்திரத்தில் ஏற்பாடு செய்தேன். ஆதித் திராவிடர் என்பவருக்குத் திருமணம். சுயமரியாதைபடி அந்துர் கி.ராமசாமி, இரா.பொன்னு சாமி, ஆ.செ.தங்கவேல், நான் நால்வரும் திருமணம் செய்வித்து அவர் வீட்டில் உணவு உண்டு வந்த போது, என்னைச் சாதிக் கட்டுப்பாடு செய்ய கிராமப் பெருந்தனக்காரர்கள் ஏற்பாடு செய்து தோற்றார்கள்.

என்னை ஊராட்சித் தலைவராக வரப் பல இடையூறு செய்தார்கள். இவர்கள் எதிர்ப்பை மீறி நான் தலை வராக வந்து ஆதித் திராவிடர் குழந்தைவேல் என்பவர் பஞ்சாயத்துக் கூட்டத்திற்கு வந்த போது கீழே உட் காரப் போனார். அவரை இந்துக்களோடு சமமாக உட்கார வைத்தேன். இப்படியே அவர்களுக்கு விழிப் புணர்வு ஊட்டியதால் உற்சாகப்படுத்தி, அவர்கள் மேளம் அடிக்கவோ, அடிமை வேலை செய்யவோ வருவது இல்லை. சாதி இந்துக்களே அனைத்து வேலைகளை யும் செய்துகொள்கின்றனர். பெண்களும் பொதுக் கிணற் றில் குளத்தில் சமமாகத் தண்ணீர் எடுப்பார்கள். எங்கள் ஊர் தேநீர் கடைகளில் இரட்டைக் குவளை முறையை ஒழித்தேன். தற்போது எல்லோரும் சமமாக உட்கார்ந்து தேநீர் அருந்துவது, சிற்றுண்டிக் கடைகளில் சமமாக உட்கார்ந்து உண்ணுவது போன்ற காரியங்கள் நடப்பில் உள்ளன.

**எங்கள் கிராமத்தில் தற்போது தீண்டாமை என்பதே அறவே இல்லை. அதற்காக நான் பல துன்பத்திற்கும் இழப்பிற்கும் ஆளானேன். இருப்பினும் கிராமத்தில் தீண்டாமை ஒழிந்தது பற்றிப் பெருமையடைகிறேன்.**

# கைத் 'தறி' வாழ்க்கை

- பாவலர் வையவன்

உலகமய யானையின் கால்
முதலில் ஏறி மிதித்தது
நெசவாளனின் வயிற்றை

இங்கிலாந்தின் தொழிற்புரட்சி
இவனுக்களித்ததோ
தொழில் வறட்சி

'சில்க் ரூட்' வழியாக
சீனா வரை வாணிபம் செய்தவன்
சென்னை மண்ணடியில்
சிதிலமாகிப் போனான்

அடுத்தடுத்து வரும் ஆபத்துகளை
அறியமாட்டாமல்
அரசியல் காற்றால்
நூலறுந்து போனான் இவன்

விசைத் தறியின் விசையில்
காற்றில் பறந்தன
கைத்தறிகள்

பொட்டி பலகைக்குள்
பாய்ந்த நாடாக்கள்
விசை தவறி
அவன் பிள்ளைக்குட்டிகளின்
வயிற்றில் பாய்ந்தன

கால்குழி மிதியடிகளின் கீழ்
தன் வாழ்க்கையே மிதிபட்டுக்கொண்டிருப்பதை
அவன் உலகுக்குக்கு
உணர்த்தவில்லை

'முதலியார் ஜம்பம்
விளக்கெண்ணெய்க்கே கேடென்பது'
வேளாவேளைக்கு
நிருபணமாகிக்கொண்டிருந்தது

நெடுநாள்களாகவே
தெருவில்தான்
பாவு தோய்ந்துக் கொண்டிருந்தான்
பின்னர்
தெருவுக்கே வந்துவிட்டான்

உலகின் மானம்காக்க
ஆடை நெய்தவன்
மிச்சமான துண்டுத்துணிகளால்
தன்மானம் காத்தான்

'இழைக்கு ஒரு வெட்டு' என
உழைத்த அவன் கைகள்
தறிக்கப்பட்டு நாளாகிவிட்டது

கைத்தறி நெசவாளனின் வறுமை வாழ்வை
இதைவிடச் சுருக்கமாகச்
சொல்லமுடியாது

"தல்லக்கு புல்லக்குத்
தறி நெஞ்சான்;
தட்டான் வூட்டுல
கூழ் குடிச்சான்"!...

## தொலைநோக்கற்ற துரோகிகள்

நாட்டின் வளமும் மக்கள் நலமும் காக்காத அரசு ஊழியர்கள், இப்பொழுது நிறைவான ஊதியம் பெறுகின்றனர். அனைத்து அரசு சேவை களிலும் கையூட்டு மிகுந்துவிட்டது. குறிப்பாகக் காவல் துறை, வருவாய்த் துறை, பதிவுத் துறைகளில் ஒரு சதவீதம் கூட நல்ல ஊழியர்கள் இல்லை. இவர்களால் எதிர்காலம் சிறக்காது. இவர்களின் நோக்கம் சுரண்டல் மட்டுமே தவிர, நன்மைக்கு இல்லை.

இப்பொழுது கேரளாவில், கர்நாடகாவில் மிகுதி யான மழை பெய்கின்றது. மிகுதியாக வரும் மழைநீர் தமிழ்நாட்டைத்தான் கடக்கின்றது. மிகுதியான இந்த நீரைச் சேமித்து வைக்க தமிழ்நாடு அரசு வழிசெய்ய வில்லை. ஆனால் 8 வழிச்சாலைக்குத் திட்டமிட்டு, திருட மக்கள் வரிப்பணத்தைச் சுரண்டத் துணை போகின்றது. நீதிமன்றங்கள் பல வழிகளை உத்தர வாகப் பிறப்பித்தும் அனைத்து மாநிலங்களும் பின் பற்றவில்லை. இயற்கை வளங்களைக் கொள்ளை யடிக்க வழிவகுக்கும் மத்திய, மாநில அரசுகள் தொலை நோக்கற்ற துரோகிகளே.

பொது மக்களில் சில வர்க்கத்தினர் பிள்ளையார் ஊர்வலம், கூழ் ஊற்றும் திருவிழா, வண்ணம் பூசும் திருவிழா என இடைக்காலத்தில் விழாக்களை ஏற் படுத்தி, கீழ்த்தட்டு மக்களை முன்னேறவிடாமல் செய்கின்றனர். பொது மக்களாகிய நாமும் ஒன்றுகூடி ஆத்திக விழாவுக்குக் காட்டும் ஆர்வம் போல், நம் வருங்கால சந்ததியினர் வளர்ச்சி பெற ஒன்றுகூடி இலவசக் கல்வி, இலவச மருத்துவம், இலவசக் குடிநீர் கிடைக்கப் போராட முன்வரவில்லை.

மண்டல் கமிசன் இடஒதுக்கீட்டில் வெற்றி பெறும் வரை அய்யா வே. ஆனைமுத்து ஒரு சிறிய அளவு உறுப்பினர்களைக் கொண்டு போராடி, மத்திய-மாநில அரசுகளில் இடஒதுக்கீடு வாங்கிக் கொடுத்தார். இடஒதுக் கீட்டால் பயன்பெறுவோர், இடஒதுக்கீட்டின் வரலாற் றைத் தெரியாமல் பணிசெய்வோர்கள் இனி வர லாற்றை மறக்காமல் இருக்கத் தெரிந்து, அய்யா வென்றெடுத்த இடஒதுக்கீட்டை தொடர்ந்து காப்பாற்ற வேண்டும். முன்வராதோர், போராடாதோர் அனை வரும் தொலைநோக்கற்ற துரோகிகளே!

**- உழவர் மகன் ப.வ.**

### சிந்தனையாளன் வளர்ச்சி நிதி செப்டம்பர்-2018

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - செப்டம்பர்-2018

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

### திருத்தம்

சென்ற மாத சிந்தனையாளன் ஏட்டில் மணமகன் தேவை விளம்பரத்தில் வழக்குரைஞர் திருச்சி பொற்கொடியின் பெண் நண்பருக்கு மணமகன் தேவை என்று இருந்திருக்க வேண்டும். தவறுதலாக வழக்குரைஞர் பொற்கொடிக்கு மணமகன் தேவை என்று அச்சாகி விட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

***- ஆசிரியர் குழு***


**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**